உ

ஸ்ரீ நாமகிரியம்மன் துணை

ஸ்ரீ சைலம் என்கிற

# நாமக்கல் க்ஷேத்திரத்தின்

# ஸ்தல புராணம்


---

தற்காலம் நாமக்கல்லில் இருக்கும்
புதுக்கோட்டை சமஸ்தான ராஜசபை வித்வான்
பிரம்மவித்யா சமுத்திரம்
ப்ரம்மஸ்ரீ கெ. எஸ். வேங்கடராம சாஸ்திரி
அவர்களால்
பரிசோதிக்கப்பட்டு,

நாமக்கல் தேவஸ்தான தர்மகர்த்தா
K. L. SM. சோமசுந்தர செட்டியாரவர்களால்

வாலாஜாபாத்
இளங்கோவடிகள் கல்விக் கழக அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

CopyRight Registered.
April 1937



நாமக்கல் சாளக்கிராம மலையும், கமலாலய குளமும்.

# முகவுரை

ஸ்ரீ வேதவியாச மகரிஷியானவர் ஸத்யவதிக்கும் பாராசர மகரிஷிக்கும் புத்திரராக அவதரித்துக் கலியுகத்தில் வரப்போகிற அக்ஞானிகளான ஜனங்களையும் அனுக்கிரகிப்பதற்கு வேதங்களை ரிக் யஜுஸ் ஸாமம் அதர்வம் என்று நான்காகப் பிரித்து வேதார்த்தத்தை அறியமுடியாத ஜனங்களையும் தர்மார்த்த காம மோக்ஷங்களை அடையச் செய்ய உத்தேசித்துப் பதினெட்டு மகாபுராணங்களையும் பதினெட்டு உப புராணங்களையும் உண்டு பண்ணித் திருப்தியடையாதவராகப் 'பாரதம் பஞ்சமோ வேத' என்கிற பிரகாரம் ஐந்தாவது வேதத்திற்குச் சமானமான மகாபாரதத்தையும் உண்டுபண்ணி யிருக்கிறார்.

பதினெட்டுப் புராணங்களாவன; மாத்ஸ்ய புராணம், மார்கண்டேய புராணம், பாகவத புராணம் பவிஷ்யத் புராணம், ப்ரம்ம புராணம், ப்ரமாண்ட புராணம், ப்ரம்மவைவர்த்த புராணம், சிவ புராணம், விஷ்ணு புராணம், வராக புராணம், வாமன புராணம், ஆக்னேய புராணம், பாத்ம புராணம், நாரதீய புராணம், லிங்க புராணம் கூர்ம புராணம், கந்த புராணம், கருட புராணம் என்பன.

இந்தப் பதினெட்டுப் புராணங்களுள் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் அனேக கண்டங்களில் ஒன்றான பிரம்மாண்டோத்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் ஸ்ரீ பாராசர மகரிஷியானவர் மைத்திரேய மகரிஷிக்குச் சொல்லுவதாக ஸ்ரீ சூத மகரிஷியானவர் சௌனக மகரிஷிக்குச் சொல்லிக் கொண்டு வருவதில் ஸ்ரீ மத்ஸ்ய கூர்ம வராஹ ரூபியான பகவானுடைய சரித்திரத்தைச் சொல்லி முடித்தவுடன் ஸ்ரீ நரசிம்ம ரூபியான பகவா

னுடைய சரித்திரத்தைச் சொல்லுவதற்கு ஆரம்பித்துத் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்.

நாமக்கல் என்கிற க்ஷேத்திரத்தின் ஸ்தல புராணம் நாமக்கல் ஸ்தலபட்டாரகாச்சாரியார் கி. சேஷய்யங்கார் அவர்களிடமிருந்த ஓலைச் சுவடியிலிருந்ததைப் புஸ்தக ரூபமாக வெளியிட உத்தேசித்து அதிலிருந்து வர்ண பத வாக்கிய தோஷங்கள் இல்லாமல் சுத்தப் பிரதியாக எழுதி அனேக சம்ஸ்கிருத பண்டிதர்களைக்கொண்டு சுத்தம் செய்யும்படி செய்து இதுபரியந்தம் வெளிவராத இந்த அபூர்வமான ஸ்ரீ சைலம் என்கிற நாமக்கல் ஸ்தல புராணத்தைச் சம்ஸ்கிருத புஸ்தகத்தின் சுலோகார்த்தங்களை விடாமல் சுத்தத் தமிழ் மொழி பெயர்ப்பாகச் சுருக்கமாகத் தமிழ்ப் புஸ்தக ரூபமாக வெளியிடுவித்திருக்கிறேன். இதில் அனேக குற்றங்களிருந்தாலும் பகவத் விஷயமான புஸ்தகமாயிருப்பதால் எல்லோர்களும் வாங்கிப் படித்து ஆனந்தமடையக் கோருகிறேன்.

மேலும், இப்பேர்ப்பட்ட அற்புத ஸ்தல புராணத்தை அனேக புஸ்தக ரூபமாக லோகங்களின் நன்மைக்காக அச்சில் வரும்படிசெய்யப் போதுமான திரவிய சகாயம்செய்த நாமக்கல் தர்மகர்த்தாவும் பாங்கருமான **K. L.** சோமசுந்தர செட்டியார் அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் ஷை செட்டியாரவர்களுக்குத் தீர்க்காயுஸ்ஸையும் அழிவில்லாத ஐசுவரியத்தையும் புத்திரபௌத்திராதிகளையும் ஸ்ரீ நாமகிரி அம்மனும் ஸ்ரீ நரசிம்மசுவாமியும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

கெ. எஸ் வேங்கடராம சாஸ்திரிகள்

உ

ஸ்ரீ நாமகிரி அம்மன் துணை

ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ம சுவாமி சகாயம்

ஸ்ரீசைலம் என்கிற நாமக்கல் க்ஷேத்திரத்தின்

# ஸ்தல புராணம்

## முதலாவது அத்தியாயம்

அனந்த கல்யாண குணபூர்ணரான பகவான் ஸ்ரீமந் நாராயணன் தூணிலும் இருப்பான்; ஈசுவரன் துரும்பிலும் இருப்பான் என்கிற லோகவதந்தியை உண்மையாகச் செய்யவும் ஹிரண்யகசிபு என்கிற அசுரனுற் பீடிக்கப்பட்ட பிரகலாதன் என்கிற தன் பக்தனைக் காப்பாற்றவும் இரும்புத் தூணிலிருந்து பாதி புருஷ ரூபத்துடனும் பாதி சிங்க ரூபத்துடனும் நரசிம்ம ரூபியாய் ஆவிர்ப்பவித்து ஹிரண்யகசிபுவைக் கொன்றவுடன் பிரளயகாலாக்கினியைப்போலக் குரூரமான தன் ரூபத்தைப் பார்த்துத் தாபமடைந்த மூன்று லோகங்களையும் தன்னைக் குறித்துத் தபஸ் செய்கின்ற ஸ்ரீநாமகிரி அம்மனையும் அனுக்கிரகிக்க எண்ணி ஸௌம்மியமான ரூபத்தோடு ஸ்ரீசைலம் என்கிற நாமக்கல் மலையில் ஸாந்நித்யம் செய்கின்ற ஸ்ரீலக்ஷ்மீ நரசிம்ம சுவாமியை ஸேவிக்கிறேன்.

சூ(ஸூ)த மகரிஷியானவர் சௌனக மகரிஷியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

முன்ஒரு காலத்தில் (ஸு)சுதர்மை என்கிற தேவ சபையில் ரஜோகுணத்தினுடையவும் தமோகுணத்தி

னுடையவும் கலப்பில்லாத சுத்த சத்துவ குணஸ்வரூப முள்ளவர் பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்களுக்குள் எவர் என்கிற சந்தேகம் தேவேந்திரனுக்கும் மற்றத் தேவர்களுக்கும் உண்டானதால் தேவேந்திரன் அச்சபையில் வீற்றிருக்கும் துர்வாசஸ்என்கிற மகரிஷியைக் கேட்கத் துர்வாச முனிவரும், ஹே மகேந்திரனே! முன்னால் இருந்த மூன்று அண்டங்களுக்குள் சாத்விக அண்டத்தில் மகாவிஷ்ணுவும் பார்வதீ தேவியும் ராஜஸாண்டத்தில் பிர்ம்மாவும் லக்ஷ்மீதேவியும் தாமஸாண்டத்தில் ருத்திரரும் ஸரஸ்வதிதேவியும் உண்டானார்கள்.

பிரம்மதேவர் ஸரஸ்வதிதேவியையும் ருத்திரர் பார்வதீதேவியையும் மகாவிஷ்ணு லக்ஷ்மீ தேவியையும் விவாஹம் செய்துகொண்டார்கள். சாத்விக அண்டத்தில் உண்டானதால் மகாவிஷ்ணுவே சுத்த சத்துவ குணஸ்வரூப முள்ளவர் என்று சொல்ல அவர் வார்த்தையில் தேவேந்திரன் நம்பிக்கை அடைந்திருந்த போதிலும் ஹே துர்வாஸ முனிவரே, நீரே நேராகப் பரீக்ஷித்துப் பார்த்து அறிந்து சொல்ல வேண்டும் என்று பிரார்த்திக்க, துர்வாசமுனிவரும் அதற்கிணங்கி ஸத்தியலோகத்தில் பிரம்மாவையும் கைலாசத்தில் பரம சிவனையும் பரீக்ஷித்துப் பார்த்ததில் அவர்கள் அதிக கோபமடைந்த காரணத்தினால் சுத்த சத்துவ குணமில்லாதவர்கள் என்று அறிந்தார்.

அதன் பிறகு அந்த முனிவரும் பாற்கடலில் லக்ஷ்மி தேவியோடு யோக நித்திரை செய்துகொண்டிருக்கிற மகாவிஷ்ணுவைப் பாப்பதற்குப் போகும் போது முனிவரின் சாபத்தின் பயத்தினால் வாசல் காவற்காரர்களான ஜயவிஜயர்களால் தடுக்கப்படாமல்

உள்ளேசென்று ஆதிசேஷசயனத்தில் சயனம் செய்து கொண்டிருக்கிற மகாவிஷ்ணுவை மார்பில் காலால் உதைத்தார்.

மகாவிஷ்ணுவும் ஹே தூர்வாச முனிவரே என்னுடைய கடினமான மார்பிற் பட்டதனால் உம்முடைய கால் அதிக துன்பமுறுவதால் நான் வருத்த மடைய நேரிட்டாலும் பிராம்மணோத்தமரான உம்முடைய காலின் ஸ்பரிசத்தினால் தன்யனானேன் சந்தோஷ மடைகிறேன் என்று சொல்லித் தூர்வாச முனிவருடைய காலைத் தடவிப் பிடித்துக்கொடுத்தார். அந்தத் தூர்வாச முனிவரும் மகாவிஷ்ணுவின் பாதகமலங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஹே சுத்த சத்துவ குணஸ்வரூபம் தரித்த மகாவிஷ்ணுவே, தேவேந்திரன் முதலான தேவர்களின் ஸம்சயத்தை நிவர்த்திக்க எண்ணின என்னுடைய பொறுக்க முடியாத குற்றத்தையும் மன்னித்து என்னை அனுக்கிரகிக்க வேண்டுகிறேன் என்று அநேகம் தடவை நமஸ்காரங்கள் செய்தும் ஸ்தோத்திரங்கள் செய்தும், மகாவிஷ்ணுவைச் சந்தோஷிக்கும்படி செய்து பகவானின் அனுமதியைப் பெற்றும், தேவேந்திரனுடைய சபையை அடைந்து ஹே தேவேந்திரனே, மூவர்களான பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்களுக்குள் மகாவிஷ்ணுதான் சுத்த சத்துவகுண ஸ்வரூபமுள்ள உத்தம தேவர்; அவர் தான் எல்லோராலும் உபாஸிக்கத் தகுந்தவர் என்று சொல்லித் தேவேந்திரனால் பூஜிக்கப்பட்டவராகத் தன் ஆசிரமத்தை அடைந்தார்.

மகாவிஷ்ணுவும் தூர்வாச முனிவரை அனுப்பிவிட்டுக் கோப முள்ளவராக என்னிடத்தில் நீங்கள் பயப்

படாமல் முனிவரின் சாபத்திற்குப் பயந்து என் கட்டளையை மீறித் தூர்வாச முனிவரை உள்ளே விட்டதால் ஹே ஜயவிஜயர்களே, நீங்கள் இப்போதே பூமியில் என் பக்தர்களாகப் பிறந்து அனேக ஜன்மங்களுக் கப்புறம் சாபம் நீங்கி என்னிடம் வருகிறீர்களா? அல்லது நீங்கள் எனக்குச் சத்துருக்களாய் மூன்று ஜன்மங்கள் பிறந்து சாபத்தை விலக்கி என் லோகத்திற்கு வருகிறீர்களா என்று கேட்டார்.

அந்த ஜயவிஜயர்களும் நடுநடுங்கிக்கொண்டு கால்களில் தண்டாகாரமாக விழுந்து அறியாத் தனத்தினால் எங்களாற் செய்யப்பட்ட குற்றத்தை மன்னிக்க வேண்டும்; குரூரமான சாபத்தைக் கொடுக்கக்கூடாது. நாங்கள் மூன்று ஜன்மாக்களில் தங்கள் சத்துருக்களாகப் பிறந்து தங்களாலேயே கொல்லப்பட்டுச் சாபம் நீங்கித் தங்களை முன்போலவே ஸேவிக்கவருகிறோம்; அனுக்கிரகிக்கவேண்டும் என்று துக்கத்தோடு சொன்னார்கள்.

அவர்கள் வார்த்தையைக் கேட்ட பகவானும் பக்தர்களிடம் கருணையோடு கூடினவராக ஹே ஜய விஜயர்களே, உங்களிஷ்டப்படியே நான் அனுக்கிரகித்தேன் என்று சொல்லி ஜயவிஜயர்களை அனுப்பிவிட்டார்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிரம்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் முதலாவது அத்தியாயம் முடிந்தது.

# இரண்டாவது அத்தியாயம்

அதன் பிறகு பகவானால் அப்படி கோபத்தோடு சபிக்கப்பட்ட ஜயவிஜயர்களும் பகவானின் பிரிவாற்ருமையால் துக்கத்தை அடைந்தவர்களாக, பூலோகத்தில் அசுர வம்சத்தில் தங்கமயமான மகாமேரு பர்வதத்தைப் போன்ற சரீரமுள்ள ஹிரண்யகசிபு என்றும் ஹிரண்யாக்ஷன் என்றும் இரண்டு அசுரர்களாக மதுகைடபாசுரர்களைப்போல அதிக பலசாலிகளாகப் பிறந்தார்கள்.

அவர்களுக்குள் ஹிரண்யாக்ஷன் என்கிற அசுரன் மூன்று லோகங்களிலும் போய்த் தேவர்களையும் அசுரர்களையும் சர்ப்பங்களையும் மனுஷ்யர்களையும் கால்களினுல் உதைத்தும் பிசைந்தும் லோகத்தினுடையவும் சாஸ்திரங்களுடையவும் வரம்பை மீறிப் பிரளய காலாக்கினியைப் போல எல்லோர்களையும் தகித்துக்கொண்டும் பிராம்மணர்களையும் பதிவிரதா ஸ்திரீகளையும் கெடுத்துக்கொண்டும் யாகங்களை அழித்தும் இப்படியாக மிகவும் கெட்ட காரியங்களைச் செய்துவந்தான். கடைசியாகப் பூமியையும் பாய்போலச் சுருட்டிக்கொண்டு சமுத்திரத்திற் குள்ளே போய்விட்டான். அப்பேர்ப்பட்ட ஹிரண்யாக்ஷனையும் பகவான் மகாவிஷ்ணுவானவர் யக்ஞவராக ரூபத்தைத் தரித்துச் சமுத்திரத்திற் குள்ளே போய் ஹிரண்யாக்ஷனைக் கொன்று பூமியைக் கோறப் பல்லில் வைத்துக்கொண்டு வந்து முன்போல் ஸ்தாபித்தார்.

ஹிரண்யகசிபுவோ எனில் அநேக வரங்களைப் பெறவேண்டி க்ரீஷ்ம ருதுவில் பஞ்சாக்கினி மத்தியத்தி

லும் வர்ஷ ருதுவில் வெட்டவெளியில் இருந்துகொண்டும் ஹேமந்த ருதுவில் கழுத்தளவு ஜலத்தில் நின்றுகொண்டும் பரமசிவனைக் குறித்து ஐந்துகோடி வருஷங்கள் ஒருகால் கட்டைவிரலால் நின்றுகொண்டு மூச்சைக் கூடவிடாமல் அதிக உக்கிரமான தபஸ்ஸைச்செய்தான்.

க்ரூரமான அந்தத் தபஸ்ஸால் சந்தோஷமடைந்த பரமசிவனும் தான் எப்போதும் அழிவில்லாம லிருக்க எண்ணங்கொண்ட அந்த ஹிரண்யகசிபுவுக்கு ஐம்பது கோடி வருஷங்கள் ஆயுஸ்ஸையும் தேவர்களாலும் அசுரர்களாலும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் மனுஷ்யர்களாலும் சர்ப்பங்களாலும் தேவயோனி விசேஷங்களாலும் பசுக்களாலும் பக்ஷிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் ராத்திரியிலும் கொல்லப்படாம லிருக்கவேண்டும் என்று வரத்தைக் கொடுத்தருளினார்.

அந்த வரத்தால் மூன்று லோகங்களுக்கும் சக்கரவர்த்தியான ஹிரண்யகசிபு மிகவும் கர்வமடைந்தவனாக எல்லா லோகங்களி லிருக்கிற ஜனங்களையும் பீடித்தும் தேவர்களை மிகவும் உபத்திரவம் செய்தான்.

அதனால் துக்கமடைந்த எல்லாத்தேவர்களும் பாற்கடலி லிருக்கும் சுவேத த்வீபம் என்கிற வெண்தீவை அடைந்து ஹிரண்யகசிபுவின் தொந்தரவையும் தன் பெயரைத் தவிர பிர்ம்ம ருத்திர விஷ்ணுக்களின் நாமாக்களையும் கூடச் சொல்லக்கூடாது என்கிற அவன் கட்டளையையும் தெரிவித்து அவனை நிக்கிரகித்து எங்களை அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

பகவானும் அந்தத் தேவர்களிடம் கருணையுடையவராக ஹே, தேவர்களே நீங்கள் வருத்த மடைய வேண்டாம். நான் பரமசிவனுடைய வரத்திற்கு விரோத

மில்லாமல் அந்த ஹிரண்யகசிபுவைக் கொல்லுவதற்கு ஸுதர்சனம் என்கிற சக்கிராயுதத்தை அனுப்பப்போகிறேன். நீங்கள் கொஞ்சமும் பயப்பட வேண்டாம் என்று அபயப் பிரதானம் செய்தார். தேவர்களும் சந்தோஷித்தவர்களாகத் தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு பகவானுடைய ஆக்ஞையினால் சுதர்சனம் என்கிற சக்கிரத்தாழ்வாரும் ஹிரண்யகசிபுவுக்குப் புத்திரராக அவதரித்தார்.

அந்தப் பிள்ளை உண்டாகும்போது எல்லாலோகங்களையும் சந்தோஷமடையும்படி செய்துகொண்டேயிருந்ததனால் ஹிரண்யகசிபு சுக்கிராசாரியாரோடும் பந்துக்களோடும் ஆலோசித்துப் பிரகலாதன் என்கிற பெயரை அன்புடன் வைத்தான்.

அப்போது தேவலோகத்தில் துந்துபி முதலான வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் புஷ்பமாரியைப் பெய்தார்கள். தேவஸ்த்ரீகள் கானம் செய்துகொண்டு சதுராடினார்கள்.

அப்படிக் கெட்ட அசுர வம்சத்தில் பிரகலாதன் உண்டானது விஷமரக் காட்டில் சந்தானம் என்கிற கல்பக விருக்ஷம் உண்டானதுபோல இருக்கிறது என்று எல்லாரும் மிகவும் ஆச்சரிய மடைந்தார்கள். பிறக்கும்போதே அமைந்த நல்ல சுபாவத்தோடும் ரமணீயங்களான குணங்களோடும் கூடின அந்தப் பிரகலாதனும் வளர்பிறைச் சந்திரன்போல விருத்தியடைந்து கிரமமாக ஐந்தாவது வயஸ்ஸையு மடைந்து எல்லா ஜனங்களையும் சந்தோஷிப்பித்தான். ஏழாவது வயஸ்ஸில் உபநயந ஸம்ஸ்காரத்தையும் பெற்ற பிரகலாதனையும் ஹிரண்யகசிபு, குருகுலவாசம் செய்து வித்தியாப்பியாஸம் செய்

விப்பதற்குச் சுக்கிராசாரியார் வீட்டிற் கனுப்பினுன். சுக்கிராசாரியரும் பிரகலாதனை அன்புடன் அழைத்துச் சமீபத்தில் வைத்துக்கொண்டு வித்தையை அப்பிய ஸிக்கும்படி செய்யும் காலத்தில் ஹிரண்யகசிபுவின் கட்டளைப்படி 'ஹிரண்யாய நம:' ஹிரண்யகசிபுவுக்கு நமஸ்காரம் என்று அர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய வாக்கியத்தைச் சொல்லும்படி செய்ய, பிரகலாதனும் இந்த வாக்கியத்தைச் சொல்லாமல் ஓம் நமோ நாராயணுய என்கிற சிரேஷ்டமான அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்ல, சுக்கிராசாரியரும் அவனைத் தடுத்துத் தான் சொன்ன வாக்கியத்தையே சொல்லும்படி செய்யக் கோபத்துடன் அதட்ட, தாங்கள் சொன்ன வாக்கியத்தைச் சொல்லவேமாட்டேன் என்று சுக்கிராசாரியரை எதிர்த்துப் பேசினுன்.

சுக்கிராசாரியரும் பிரகலாதனை ஹிரண்யகசிபுவின் சமீபத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நடந்ததைச் சொல்ல ஹிரண்யகசிபுவும் பிரகலாதனைச் சமீபத்தில் அழைத்து ஹே பிரகலாதா, நம் பெருமைக்குத் தகுந்தபடி நீ உபாத்தியாயர் சொன்னதைச் சொல்ல வேண்டும். சுக்கிராசாரியரை அவமானப்படுத்தாதே. ஆசாரியரை விரோதித்தவர்களுக்குப் படிப்பு சரியாகவராது என்று சொல்லித் திருத்தினுன். பிரகலாதனும், ஹே பிதாவே நான் ஆசாரியரை அவமானம் செய்யவில்லை; நாராயணன்தான் எல்லா லோகங்களுக்கும் முதல்வன்; ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கும் காரண பூதன்; நித்யன்; சச்சிதானந்த ரூபன்; பக்தர்களை அனுக்கிரகிக்கிறவன்; ஆதியந்த மற்றவன்; அப்பேர்ப்பட்ட நாராயணனையே ஸேவிக்கிறேன். அவருடைய அஷ்டாக்ஷர

மந்திரமே மிகவும் உயர்ந்த மந்திரமாதலால் அம் மந்திரத்தைத்தான் சொல்லுவேன். தங்கள் பெயரை மனஸ்ஸாலும் நினைக்கவும் மாட்டேன் என்று சொல்ல ஹிரண்யகசிபுவும் கோபாக்கினியால் ஜ்வலித்துக் கொண்டு என் குலத்தைக் கெடுக்கக் கோடாரிக் காம்பைப்போல் உதித்த ஹே துஷ்புத்திரனே, நீ கொஞ்சமும் பயமில்லாமல் என் முன்னால் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லுகிறாய். என் ராஜ்ஜியத்தில் இந்த வார்த்தைகளை முழு மூடனுங்கூடச் சொல்லவே மாட்டான். இதற்கு முன் எவர்களும் நாராயணுய நம: என்கிற வார்த்தையைக் கேட்டிருக்கவே மாட்டார்கள். நீ சிறுவனு யிருந்தும் சத்துரு கக்ஷியிற் சேர்ந்து கொண்டு கெட்டவார்த்தைகளைச் சொல்லுகிறாய். இனி மேலாவது இந்தக் கெட்டவார்த்தைகளைச் சொல்லாமலிருக்கிறாயா என்று கேட்கப் பிரகலாதனும் ஸ்ரீமந் நாராயணனை நினைத்துத் தேகத்தை விட்டவர்களுக்கு மோக்ஷம் கையிலிருக்கிறது, அனேக கோடி வருஷங்கள் முழுமையும் நாராயண பக்தியில்லாமற் புலி சிங்கம் முதலானவைகளைப்போல் வியர்த்தமாய் ஜீவித்துக் கொண்டிருப்பதில் யாது பயன்? பாபிகள் நாராயணனுடைய உயர்ந்த குணங்களை அறியவே மாட்டார்கள். அனேக துஷ்டர்கள் தபோ பலத்தினுல் அனேக வரங்களைப் பெற்றுக் கர்வமுள்ளவர்களாக ஐஹிகாமுஷ்மிக பலன்களைக் கொடுக்கிற ஸ்ரீமந் நாராயணனை அறிகிறதேயில்லை; நான் மூடனல்லன்; எப்போதும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரண கமலங்களை மனதால் நினைத்துக் கொண்டும் பகவானுடைய நாமாக்களைச் சொல்லிக் கொண்டும் எப்போதும் பகவானை ஆராதித்துக்கொண்

டும் இருக்கிறேன் என்று சொல்லி முடித்தான் ஹிரண்ய கசிபுவும் கோபத்தினால் சிவந்த கண்களையுடையவனாகி இந்தப் பிரகலாதன் பிள்ளையல்ல மிருத்யுவே பிள்ளைபோல் பிறந்திருக்கிறான். இவனைக் கொன்றால் நமக்கும் நம் குலத்திற்கும் க்ஷேமம் உண்டாகும் என்று எண்ணிக் கோபத்தினாற் சிரித்துக்கொண்டு கைப் பிடியினால் தலையில் பிரகலாதனைக் குட்டினான்.

ஹிரண்யகசிபு ஒரு குட்டு குட்டினால் தேவனும் கூட ஜீவிக்கமாட்டான்; பிராணனை யிழந்துவிடுவான். ஆனால் பிரகலாதனோ இந்தக் குட்டினாற் கொஞ்சங் கூடத் துன்பப்படவில்லை. அதனால் கோபமடைந்த ஹிரண்யகசிபுவும் தன்னுடைய அசுர சேனைகளைப் பார்த்து நீங்கள் இருப்புலக்கைகளாலும் கத்திகளாலும் சூலாயுதங்களாலும் கோடரிகளாலும் பிரகலாதனை அடித்துக் கொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்.

உடனே அசுர ஸேனைகளும் அனேக ஆயுதங்களால் அடிக்கப் பிரகலாதனுக்கு நாராயண நாமோச்சாரணத்தால் புஷ்பங்களால் பூஜை செய்வதுபோல இருந்ததாம்.

பின்னும் ஹிரண்யகசிபுவின் ஆக்ஞையால் ஐராவதம் முதலான திக்கஜங்களும் உலக்கைகள்போ லிருக்கின்ற தங்கள் தந்தங்களாற் பிரகலாதனைக் குத்த அந்த யானைகளின் தந்தங்கள் ஒடிந்துவிட்டனவாம்.

பிறகு துஷ்டனான அசுரனால் ஏவப்பட்ட தக்ஷகன் கார்க்கோடகன் முதலான சர்ப்பராஜர்களும் நிரபராதியான பிரகலாதனைக் கடிக்க உதிர்ந்த பல்லுகளை உடைய

வைகளாகத் தூக்கித்தனவாம். பிரகலாதனுக்கு ஒரு விதத் தீங்கும் உண்டாகவில்லையாம்.

இப்படி அநேக உபாயங்களால் பிரகலாதனைக் கொல்வதற்கு முயற்சித்தும் நாராயணபக்தி மகிமையால் பிரகலாதனுக்கு ஒரு விதக் கெடுதியும் எற்படாததால் கடைசியாக ஹிரண்யகசிபுவும் பிரகலாதனைப் பாறாங்கல்லிற் கட்டி மலையின் உச்சியிலிருந்து சமுத்திரத்தில் விழும்படி செய்ய அம்மலையும் சமுத்திரத்தில் பிரகலாதனுக்குத் தெப்பக் கட்டைபோல மிதந்ததாம்.

பிற்பாடும் மகா மூர்க்கனான ஹிரண்யகசிபுவும் அநேக ஸேவகர்கள் மூலமாய்த் தன் பெருங் கத்தியைக் கொண்டு வரும்படி செய்து அக் கத்தியால் பிரகலாதனைக் கொல்லுவதற்குக் கழுத்தில் பலமாய்ப் போட்டான்.

அக் கத்தியும் பிடிநீங்கலாக ஆயிரம் துண்டுகளாய் நாலா பக்கங்களிலும் சிதறி விழுந்தது. பிரகலாதனுக்கோ நாராயணத் தியானத்தினால் ஒரு வித அபாயமும் நேரிடவில்லை.

இவ்விதமாக ஹிரண்யகசிபுவால் அநேக விதமாகப் பீடிக்கப்பட்ட பிரகலாதனும் ரொம்ப வருத்தமடைந்தவனாக நாராயணனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். நாதன் அற்றவர்களுக்குப் பந்துவாயும் சத்துருக்களையும் மித்திரர்களையும் உதாசீனர்களையும் பேதமில்லாமற் காக்கிறவராயும் உள்ள நாராயணனுக்கு அநேக நமஸ்காரம்.

ஹே, நாராயணா! நீரே லோகங்களை உண்டு பண்ணுகிறீர்; காப்பாற்றுகிறீர்; அழிக்கிறீர். அணுவுக்கும்

அணுவாகவும் மகத்தாகவும் இருக்கிறீர். உம் ஸ்வரூபத்தையும் உம் மகிமையையும் உம் மாயையையும் யார்தான் அறிவார். வாஸ்தவமாக நீர் குணமில்லாதவராயினும் அனந்த கல்யாண குணங்களால் நிறைந்தவராகவும் சரீரமில்லாதவராயிருந்தும் அனேக சரீரங்களில் இருப்பவராகவும் செய்கையில்லாமல் இருப்பினும் அனேக செய்கைகளைச் செய்கிறவராகவும் இருப்பீர்;

ஆபத்தாகிற கடலில் முழுகிக்கொண்டும் தகப்பனாகிற புலியின்வாயில் அகப்பட்டுக்கொண்டும் நாதன் இல்லாமல் தவிக்கின்றவனுமான என்னைக் காப்பாற்றும்; என்று ஸ்ரீமந் நாராயணனை அநேக விதமாய் ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கிற பிரகலாதனைப் பார்த்து ஹிரண்யகசிபுவும் அதிக கோபம் கொண்டவனாக உன் யஜமானனான நாராயணன் யார்? எங்கே வஸிக்கிறான்? என்று கேட்கப் பிரகலாதனும், ஸ்ரீமந் நாராயணன் ஸ்தாவர ஜங்கமப் பிராணிகளின் உள்ளேயும் வெளியிலேயும் உன்னிடத்திலும் என்னிடத்திலும் எந்த இடங்களிலும் சுவரிலும் தூணிலும் துரும்பிலும் இருக்கிறான். அவன் ஸர்வ வியாபகன் என்று சொல்ல ஹிரண்யகசிபுவும், குஹ பிரகலாதா! பகவான் நாராயணன் இந்த இரும்புத்தூணில் இருப்பானா என்று கேட்க, இருப்பான் என்று பிரகலாதன் சொல்ல ஹிரண்யகசிபுவும் கோபத்தோடு தன் கையினால் இரும்புத் தூணைப் பலமாக அடிக்கப் பகவானும் அப்போது சாயங்காலமாதலால் நரசிங்க ரூபியாய் ஆவிர்பவிக்க எண்ணி ஒரே காலத்தில் பக்தனான பிரகலாதனுடைய துக்கத்தையும் தேவர்களுடைய பயத்தையும் அசுரர்களுடைய கர்வத்தையும் இரும்புத் தூணையும் ஹிரண்ய

கசிபுவின் மார்பையும் பிளக்க எண்ணங்கொண்டு வரும் போது பிரளய காலத்தில் உண்டாகிற சமுத்திரத்தின் ஓசையைக் காட்டிலும் அதிகமான ஓசையைத் தூணி லிருந்து உண்டுபண்ணினர்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிரம்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.

# மூன்றாவது அத்தியாயம்

ஸூதமகரிஷி சொல்லுகிறார்: தூணிலிருந்து அப்படி அதிகமாக ஏற்பட்ட க்ரூரமான சப்தத்தால் லோகங்களிலிருக்கிற ஜனங்கள் மூர்ச்சையடைந்து விழுந்துவிட்டார்கள். அதன் பிறகு இரும்புத் தூணைப் பிளந்துகொண்டு வருணிக்க முடியாத ஒரு காந்திக் குவியல் உண்டானது. அந்தக் காந்திக் குவியலிலிருந்து பகவான் நரசிம்ம ரூபியாய்ப் பூமியையும் ஆகாசத்தையும் எல்லாத் திக்குகளையும் பிரகாசப்படுத்திக் கொண்டும், பிடரி மயிர்களால் ஆகாசத்தையும் கால்களால் பூமியையும் கைகளாலும் வஜ்ஜிரம்போலிருக்கும் நகங்களாலும் பத்துத் திக்குகளை வியாபித்துக்கொண்டும் சத்துருக்களுக்குப் பயத்தை விளைவிக்கிற கர்ஜனையுடனும் ஆவிர்ப்பவித்தார்.

அனேக அசுரவீரர்கள் அந்த நரசிம்ம சுவாமியினுடைய சரீர காந்தியாலேயே நாசமடையும்படி செய்யப்பட்டார்கள். சில அசுரர்கள் காலால் மிதித்தலாலேயும் சில அசுரர்கள் கைகளாலும் நகங்களாலும் கொல்லப்பட்டார்கள். இந்த விதமாகத் தேர்ப்படை யானைப்படை குதிரைப்படை காலாள் படைகளோடு கூடின எல்லா அசுர ஸேனையும் பகவான் எதிரில் தாமே வந்து விளக்கில் வெட்டுப் பூச்சிகளைப்போல நாசமடைந்தன.

பிறகு சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் சாயங் காலத்தில் ஸ்ரீ நரசிம்ம சுவாமியும் கத்தி கேடயம் முதலான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு தன்னோடு சண்டைசெய்ய வந்தவனும் தன்னுடைய கைகளு

டைய நடுவை அடைந்தவனாயுமுள்ள அஸுர ராஜனான ஹிரண்யகசிபுவை மடிமேற் போட்டுக்கொண்டு நகங்களால் மார்பிற் கிழிக்கும்போது, ஹிரண்யகசிபுவும் சிரித்துக்கொண்டே ஹே, பகவானே! அநேக முகங்களோடும் அநேக கைகளோடுங் கூடின என்னோடு சண்டை போட்டு நீங்கள் என்னைக் கொல்லவேண்டும்; இப்போது ஏன் அப்படிச் செய்யவில்லை என்று பிரார்த்திக்கப் பகவானும் ஹே அசுர, அடுத்த ராவண ஜன்மாவில் உதவிசெய்கிற அநேக ராக்ஷஸ ஸேனைகளோடு கூட அநேக முகங்களையும் அநேக கைகளையும் அடைந்த உன்னோடு இரண்டு கைகளோடுகூடின நான் சண்டைபோட்டு உன்னைக் கொல்லப்போகிறேன் என்று சொல்லிவிட்டுத் தன் நெற்றிக் கண்ணின் அக்கினி ஜ்வாலையால் வியாபிக்கப்பட்ட ஹிரண்யகசிபுவின் மார்பைப் பிளந்து அதிலிருந்து எடுக்கப்பட்ட நரம்பு மாலையை மார்பில் தரித்துக்கொண்டார்.

அதுமுதல் அதிக கோபமுள்ள நரசிம்ம சுவாமியைப் பார்த்துப் பயத்தினாற் கலக்கமடைந்த தேவர்களும் ஸ்ரீ லக்ஷ்மிதேவியைப் பார்த்து நீ நரசிம்ம சுவாமியினுடைய முன்னால் போய்ப் பகவானைச் சமாதானப் படுத்தவேண்டும் என்று வேண்டியும் லக்ஷ்மிதேவி பயந்தவளாகச் சமாதானம் செய்யாததனால் பக்த சிரோமணியான பிரகலாதனையே முன்னால் வைத்துக்கொண்டு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

ஹே நரசிம்ம சுவாமியே, தங்கள் பலமே பலம். என்ன வீர்யம்! என்ன புஜபராக்கிரமம்! மிகவும் ஆச்சரியகரமான காரியம் இது. தாங்கள்தாம் உயர்ந்த தைவம். மூன்று லோகங்களையும் பிடித்துக்கொண்

டிருந்த லோகசத்துருவான துஷ்டஹிரண்ய கசிபுவானவன் அளவிட முடியாத தங்கள் பலத்தாற் கொல்லப் பட்டான். இப்போது தங்கள் கோபாக்கினியால் மூன்று லோகங்களும் தாபத்தை அடைகின்றன. ஆகையால் தாங்கள் கோபாக்கினியை அடக்கவேண்டும் என்று பிரார்த்தித்தும் ஸ்தோத்திரம் செய்தும் நமஸ்கரித்தும் புஷ்பமாரி பெய்தும் பகவானை சமாதானப்படுத்தப் பகவானும் கோபத்தை விலக்கி ஸௌம்ய ரூபத்தை அடைந்தார்; பகவானும் பிரகலாதனைச் சமாதானப் படுத்தி அசுர ராஜனாக ஸ்தாபித்தார்.

அப்படியே பகவான் தன் பக்தனை பிரகலாதனை உத்தேசித்து அவனுடைய பட்டினத்திற் கருகில் ஸாளக் கிராம மலையில் அந்த ஸாளக் கிராம மலைக்கு சமானமான ஸாளக் கிராம சிலையாகக் கிருத யுகத்தில் அவனாற் பூஜிக்கப்பட்டவராக இருந்தார். பிறகு லக்ஷ்மி தேவியும் பகவானுடைய பிரிவினால் உண்டான துக்கத்தால் க்ரூரமான தப்ஸை செய்துகொண்டிருந்தாள்.

பகவானும் லக்ஷ்மிதேவியின் ப்ரீதியின் பொருட்டு அந்தச் சாளக்கிராம சிலையில் ஓர் இடத்தில் நரசிம்ம மூர்த்தியாயும் ஸௌம்பிய ரூபியாயும் ஆவிர்ப் பவித்தார். அதற்கப்புறம் த்ரேதாயுகத்தில் ஸ்ரீ ராமச் சந்தர சுவாமிக்கும் ராவணனுக்கும் நடந்த சண்டையில் ஸ்ரீ லக்ஷ்மணர் ராவணனுடைய சக்தி என்கிற ஆயுதத் தால் அடிக்கப்பட்டு மூர்ச்சையடைந்திருக்க அவரை ஜீவிக்கச் செய்ய ஸ்ரீ ராம பத்ருடைய கட்டளையால் ஹனுமந்த சுவாமியும் வடக்குத் திக்கிலிருந்து சஞ்சீவினி

பர்வத மென்கிற துரோண பர்வதத்தை எடுத்துக் கொண்டுபோய் லக்ஷ்மணரைப் பிழைக்கும்படி செய்த வுடன், மறுபடியும் துரோண பர்வதத்தை வடக்குத் திக்கில் வைத்துவிட்டு வருகிற வழியில் சாளக்கிராம மலையில் அந்த மலையைப்போ லிருக்கிற ஸாளக்கிராம சிலையைப் பார்த்து அந்த ஸாளக்கிராம சிலையில் உள்ளே ஒரு இடத்தில் ஸாந்நித்யம் செய்கின்ற ஸௌம்பிய ரூபியான நரசிம்ம சுவாமியைத் தரிசித்து ஆச்சரியமடைந்தவராக அந்தச் சாளக்கிராம சிலையைத் தன் கையால் எடுத்துக் கொண்டு வரும்போது நடு வழியில் ஸ்ரீ லக்ஷ்மி தேவி தபஸ் செய்கிற இடமாயும் புண்யங்களான மரங்களாலும் செடிகளாலும் கொடிகளாலும் நிறைந்ததாயும் புஷ்பங்களாலும் பழங்களாலும் நிறைந்ததாயும் மனஸிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாயும் ஸித்தர்கள் முதலான தேவர்களாலும் யோகீசுவரர்களாலும் ஸேவிக்கப்பட்டதாயும் குயில் மயில் ஹம்சம் வண்டாழ்வான் முதலான பறவைகளுடைய மதுரங்களான சப்தங்களால் மனோக்ஞமாயும் உள்ள மகாவிஷ்ணுவின் க்ஷேத்திரத்தை அடைந்தார்.

அவ்விடத்திலேதான் லக்ஷ்மிதேவியால் தன்னால் ஏற்படுத்தப்பட்ட கமலாலயமென்கிற தடாகத்தின் கரையில் தபஸ்செய்யப்பட்டு உயர்ந்ததாக எல்லாராலும் அந்தக் கமலாலயக்கரை சிலாகிக்கப்படுகிறது.

ஹனுமானும் சந்தோஷமடைந்தவராகத் தாகத்தைத் தணித்துக்கொள்ள வேண்டித் தன் கையில் இருக்கும் ஸாளக்கிராம சிலையை அக் கமலாலயக் கரையில் வைத்துவிட்டுக் கமலாலயத்தின் ஜலத்தைக் குடிப்

பதற்குப் போனார். ஆஞ்சனேயரும் ருசியுள்ள கடலாலயத்தின் ஜலத்தைக் குடித்துவிட்டு ஸாளக் கிராமச் சிலையை எடுப்பதற்கு எவ்வளவு பிரயத்னப்பட்டும் தன் முழு பலத்தைக் காண்பித்தும் இது என்ன ஆச்சரியம் என்று, முயற்சி வீணானதனால் துக்கத்தை யடைந்தவராக இருக்கும் சமயத்தில், அந்தச் சாளக் கிராமச் சிலையில் பகவான் நரசிம்மமூர்த்தியும் மேற்கு முகமுள்ளவராகப் பிரம்மா பரமசிவன் முதலான தேவர்களால் ஸேவிக்கப்படுகிறவராகவும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் கந்தர்வர்களாலும் வித்தியாதரர்களாலும் யோகீசுவரர்களாலும் கானரூபமாக ஸ்தோத்திரம் செய்யப்பட்ட தன் சரித்திரங்களை உடையவராகவும் ஆஞ்சனேயருக் கெதிரில் பிரசன்னமுகராகப் புன் சிரிப்புடன் ஆவிர்பவித்தார்.

அப்படி ஆவிர்பவித்த பகவானைப் பார்த்து ஆஞ்சனேயரும் ஸாஷ்டாங்கமாக அனேகந் தடவை நமஸ்கரித்துக் கைக்கூப்பிக்கொண்டும், ஜய, விஜயீ பவ! எல்லாத் தேவர்களைக்காட்டிலும் மேன்மையுள்ளவராகவும் எங்கள் சத்துருக்களை ஜயித்துக்கொண்டும் எங்களுக்கு எப்போதும் அனுக்கிரகம் செய்துகொண்டும் இரும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிற ஹனுமானைப் பார்த்துப் பகவானும் ஹே, பக்தவர்ய வாயுகுமாரா! உன் விஷயமாகக் கருணையுடையவராகப் பிரசன்னரா யிருக்கிறேன்; அதிக பலமுள்ள உன்னால் தூக்கிக்கொண்டு வரப்பட்டவனான நான் இந்த லக்ஷ்மியின் தபோவனத்திலேயே மகாவிஷ்ணுவின் க்ஷேத்திரத்திலேயே தேவர்களையும் லக்ஷ்மிதேவியையும் அனுக்கிரகிக்க வசிக்கப்போகிறேன்.

நீ ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியின் காரியத்திற்கு இப்போதே புறப்பட்டுப் போ; காலதாமதம் செய்யவேண்டும் என்று எண்ணுதே. ஸ்ரீராமச்சந்திரர் உன்னிடம் வருத்தப்படுவார் என்று சொல்லி அனுக்கிரகித்தார்.

இப்படிச் சொன்ன பகவானை ஹனுமானும் வணக்கத்தோடும் பக்தியோடும் நமஸ்கரித்து நான் செய்த அபசாரத்தைப் பொறுத்து அருளவேண்டும் என்று புதிதாகப் பறிக்கப்பட்ட புஷ்பங்களால் பூஜித்துப் பழங்களை நிவேதனம் செய்தும் பிரதக்ஷிணம் செய்ய ஆரம்பித்தபோது அந்த ஸாளக்கிராம சிலையின் கிழக்குப் பாகத்தை அடைந்தார். அங்கேயும் பாற்கடலில் வாசம் செய்கிறவராயும் ஸ்ரீரங்க நாயகியோடு வீற்றிருக்கிறவராயும் பிருகு மார்க்கண்டேயர் முதலான மகரிஷிகளால் ஸேவிக்கப்படுகிறவராயும் நாபி பங்கஜத்திலிருக்கிற சதுர்முகப் பிர்ம்மாவால் ஸ்தோத்திரம் செய்யப்படுகிறவராயும் மதுகைடபாசுரர்களால் ஸேவிக்கப்படுகிற பாத கமலங்களை உடையவராயும் சந்தோஷித்த முகாரவிந்தத்தை அடைந்தவராயுமுள்ள மகாவிஷ்ணுவும் ஸ்ரீரங்கநாதரூபியாய் ஹனுமானுக்குத் தர்சனம் கொடுத்தருளினர்.

அப்பேர்ப்பட்ட ரங்கநாத சுவாமியையும் ஹனுமான் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து பூஜித்தார். அப்போது பகவானும் ஹே, வத்ஸ ஆஞ்சனேய! உன்னிடம் கிருபா விசேஷத்தால் இப்பேர்ப்பட்ட உயர்ந்த ஸ்ரீரங்க நாத ஸ்வரூபம் என்னுற் காண்பிக்கப்பட்டது. நான் இங்கேயே ஸ்ரீ லக்ஷ்மீதேவியோடு வசிக்கப்போகிறேன். நீ இப்போதே ஸ்ரீராம காரியத்திற்காகப் புறப்பட்டுப்போ என்று சொன்னவுடன் ஆஞ்சனேயர்


பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்துவிட்டு ஸ்ரீராமசந்திர சுவாமியினுடைய சமீபத்திற்குப் போய்விட்டார்.

இந்தப் பிரகாரம் கமலாலயத்தின் கரையில் தபஸ் செய்துகொண்டிருக்கிற ஸ்ரீ லக்ஷ்மீதேவியின் தபஸுக்குப் பிரயோஜனத்தைக் கொடுக்கிறதற்காக இதற்குமுன் தூணிலிருந்து பகவான் நரசிம்மரூபியாய் ஆவிர்ப்பவித்து ஸாளக்கிராம பர்வதத்தில் ஸாளக்கிராம சிலையாக, அதிலும் ஸௌம்ய ரூபமான ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியாகப் பிரகாசித்தார். அப்பேர்ப்பட்ட ஸாளக்கிராம சிலையும் ஹனுமானால் கமலாலயத்தின் கரையிற் கொண்டுவரப்பட்டு எடுக்க முடியாததாய் இந்த ஸாளக்கிராம சிலையிலேயே பகவான் ஆராதிக்கப்பட்டார்.

பகவான் நரசிம்மதேவரும் லக்ஷ்மிதேவியின் தபஸிற்குப் பிரயோஜனத்தைக் கொடுக்கவேண்டியே ஸாளக்கிராம சிலாமூர்த்தியாய்க் கமலாலயத்தின் கரைக்கு வந்ததனாலேதான் இந்த ஸாளக்கிராம சிலைக்கு ஸ்ரீசைலம் என்ற பெயரும் வந்தது. இன்னும் மகாவிஷ்ணுவானவர் எல்லாப் பிராணிகளையும் வயிற்றில் வைத்துக்கொண்டு அழகு பொருந்திய பாற்கடலிற் சயனம் செய்ததாலும் இந்த ஸாளக்கிராம சிலைக்கு ஸ்ரீசைலம் என்கிற பெயர் வந்ததாம்.

இந்த ஸ்ரீசைலம் காவேரி நதிக்குங் கிழக்குப் பக்கத்திலும் கோல மலைக்கு (வாராஹாசலத்திற்கு) அதாவது கொல்லி மலைக்குமேற்குத் தாழ்வரையிலும் இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட ஸ்ரீசைலம் என்கிற நாமக்கல் மலையில் ஸாந்நித்யம் செய்கின்ற ஸ்ரீ நரசிம்ம சுவாமியை



கோபுர வாசலும், ஸ்ரீ நாமகிரி தாயார் ஸ்தூபியும்.

விசுவகர்மா என்கிற தேவதச்சன் பார்த்துப் பக்திவிசே ஷத்தால் ஸ்ரீ நரசிம்ம மூர்த்திக்கும் ஸ்ரீ ஸாமகிரி அம்ம ளுக்கும் ஸ்ரீ ரங்கநாதருக்கும் ஸ்ரீ ரங்கநாயகிக்கும் கர்ப்ப கிருஹம் அர்த்த மண்டபம் முதலான திருப்பணிகளைச் சிலைகளாலேயே கட்டிமுடித்தான். இப்பேர்ப்பட்ட ஸ்ரீ சைலத்தில் அனேக சித்தர்களும் யோகிகளும் குகைகளில் தபஸ்செய்து உயர்ந்த அணிமாதி சித்தி களைப் பெற்றிருக்கிருர்கள். பக்தர்களும் பகவானைப் பஜித்து மோக்ஷத்தை அடைந்திருக்கிருர்கள்.

எந்த ஜனங்கள் இந்த க்ஷேத்திரத்தி லிருக்கும் சம லாலயத்தில் ஸ்நானம் செய்து நரசிம்ம மூர்த்தியைத் தர்சித்தும் பூஜித்தும் தியானம் செய்தும் நான்கு தட வைகள் பிரதக்ஷிணம் செய்தும் ஒரு நாள் முழுமையும் வஸிப்பார்களோ, அவர்களுக்கு மறு பிறப்பே கிடை யாது இந்த விதமாக ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியினுடைய பிரபாவம் அளவிடமுடியாதது; கடலுக்குச் சமானமாக நீண்டு கொண்டே போகும்.

பக்தியாற் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. எல் லாப் பாபங்களையும் விலக்கக்கூடிய இந்த நரசிம்ம உபாக்கியானத்தை எவர் படிப்பாரோ கேட்பாரோ அவர் தன் எல்லா எண்ணங்களையும் கடைசியாக விஷ் ணுவின் ஸாயுஜ்ய பதவியையும் அடைவார்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிர்ம்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் மூன்ருவது அத்தியாயம் முடிந்தது.

# நான்காவது அத்தியாயம்

சௌனகர் கேட்கிறார்: வேதவியாச சிஷ்யரான ஹே, ஸூத மகரிஷியே! உம்முடைய ஜன்மாவானது இருட்டால் பார்க்கமுடியாத ஜனங்களுக்குச் சூரியனுடைய ஜன்மாவைப்போல் அக்ஞானத்தால் மறைக்கப்பட்ட அறிவையுடையவர்களுக்கு அறிவை உண்டு பண்ணுவதற்கல்லவா! மகாவிஷ்ணுவின் கீர்த்தியாகிற எண்ணெயோடு கூடின உம்முடைய வாக்காகிற விளக்கினால் லோகங்களின் அக்ஞானம் என்கிற இருட்டானது விலக்கப்பட்டது. உம் முகமாகிற தாமரைப் பூவினுடைய மகாவிஷ்ணுவின் கீர்த்தியென்னும் வாஸனையினால் ருசியுள்ளதாகச் செய்யப்பட்ட உபதேச வார்த்தையாகிற தேனானது என்னால் ஆவலோடு குடிக்கப்பட்டது.

உம்முடைய ஆசாரியரான வேதவியாச மகரிஷியும் பதினெட்டுப் புராணங்களையும் மகா பாரதத்தையும் லோகத்தில் பிரசாரத்தை அடையும்படி செய்ததனாலே பூமி முழுமையிலேயும் எந்தப் பாகங்களையும் விலக்கக் கூடிய மகாவிஷ்ணுவின் உத்தமசரித்திரத்தால் சுத்தியை உண்டுபண்ணி எல்லா ஜனங்களையும் பரிசுத்தர்களாகச் செய்தார். அப்பேர்ப்பட்ட உம் ஆசாரியருடைய அனுக்கிரக விசேஷத்தால் எல்லா வேத சாஸ்திரங்களையும் நன்கு அறிந்து நீரும் உயர்ந்த ஆசாரியரானீர். நீர் லோக மங்களமான பகவானுடைய திவ்ய சரித்திரத்தை அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். எவர்களுக்கும் உம்மிடத்திற் பகவானின் சரித்திரத்தைக் கேட்டுப் போதும் என்கிற திருப்தி ஏற்படுகிறதில்லை.

எந்த இஸ்வரன் எல்லா லோகங்களுக்கும் காரணமோ, எவரால் லோகம் காப்பாற்றப்படுகிறதோ, அந்தப் பகவானுடைய சரித்திரத்தைக் கேட்பதற்குப் பாக்கிய வானுக்குத்தான் எண்ணம் உண்டாகும்.

ஆகையால் நீர் எல்லா விஷயங்களையும் நன்றாக அறிந்திருப்பதால் வேதவியாசரைக் காட்டிலுங்கூட உயர்ந்தவர் என்பது எனது அபிப்பிராயம். தங்கள் முகார விந்தத்திலிருந்து ஸ்ரீசைல வாஸியான நரஸிம்ம சுவாமியின் சரித்திரத்தைக் கேட்டேன். எந்த எந்தப் பக்தன் எந்த எந்தப் பிரயோஜனத்தை விரும்பி ஸ்ரீ நரஸிம்ம மூர்த்தியை உபாசிப்பானோ, அந்த அந்தப் பக்தன் அந்த அந்தப் பிரயோஜனத்தை உடனே அடைந்து விடுகிறான்.

தகப்பனாரான ஹிரண்யகசிபுவினிடத்தில் மிகவும் அகப்பட்டுக் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்த பிரகலாதனைப் பகவான் நரசிம்ம மூர்த்தியானவர் காப்பாற்றி ஹிரண்ணிய கசிபுவை நிக்கிரகித்தார். பிறகு தன் க்ரூர ரூபத்திலிருந்து பயந்த தேவர்களையும் லக்ஷ்மி தேவியையும் காப்பாற்றுவதற்குக் க்ரூர ரூபத்தைவிட்டுச் சௌம்யமான ரூபத்தையுமடைந்தார்.

அஸுரனால் கொண்டு போகப்பட்ட வேதங்களைப் பகவான் மீன் ரூபத்தை அடைந்து சமுத்திரத்திலிருந்து வெளிவரும்படி செய்தார்.

அமிருதத்திற்காகப் பாற்கடலைத் தேவாசுரர்கள் கடையும்போது ஜலத்திற்குள் முழுகினதான மத்துப் போலிருந்ததான மந்தர பர்வதத்தை ஆமையின் ரூபத்தைத் தரித்து முதுகினால் தாங்கிக்கொண்டிருந்

தார்; சமுத்திரத்திற் கொண்டுபோகப்பட்ட பூமியையும் ஜனன மரணப் பிரபஞ்சமாகிற சமுத்திரத்தில் முழுகி யிருந்த மற்ற ஜனங்களையும் வராஹ ரூபத்தைத் தரித்துக் கரையேற்றிவைத்தார்.

அப்பேர்ப்பட்ட பகவான் மகாவிஷ்ணு இப்போது நரசிம்ம ரூபத்தைத் தரித்து ஸ்ரீலக்ஷ்மிதேவியின் ப்ரீதி யின் பொருட்டுக் கமலாலயத்தின்கரையில் வசிக்கிறார்.


இதற்குமுன் ப்ரகலாதனுக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணுவதற்கு ஸாளக்கிராம சிலையில் வசித்தார்.

ஆஞ்சனேயரும் அந்தத் தேவனை லக்ஷ்மி தபஸ் செய்கிற இடமான கமலவனம் என்கிற கமலாலயத் தின் கரையை அடையும்படி செய்தார்.

இந்தப் பிரகாரம் உம்மால் நரசிம்ம சுவாமியினு டைய சரித்திரமானது முன்னாற் சுருக்கமாகச் சொல் லப்பட்டது.

அதையே விரிவாகச் சொல்வதோடு லக்ஷ்மி தேவி யின் தபஸின் காரணத்தையும் சேர்த்துக் கிருபை செய்து சொல்லவேண்டும் என்று சௌனகர் ஸூதரைக் கேட்டார்.

ஸூத மகரிஷியும் சொல்ல ஆரம்பித்தார். ஹே! சௌனகரே! உம்மைப்போலப் புண்ணியசாலிகள் எவ ரும் இல்லை; ஏனென்றால், எல்லா ஜகத்துக்களுக்குங் காரண பூதரான மகாவிஷ்ணுவின் சரித்திரத்தைக் கேட்க வேண்டுமென்று உமக்கு மகாவிஷ்ணுவினிடத்தில் பக்தி ஏற்பட்டதன்றோ? ஆதிசேஷன் ஆயிரம் முகங்களை உடையவராயிருந்தும் பகவானுடைய குணங்களை ஸ்தோத்திரம் செய்யமுடியாதவரா யிருக்கிறார்.



நாமக்கல் கோட்டை
மேல் புறத்தில் எழுந்தருளி யிருக்கும்
ஸ்ரீ ஆஞ்சநேயர்.

ஆதியந்தமற்றவனான பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை முழுமையும் சொல்லிவிடலா மென்று எவன் எண்ணுவானோ, அவன் முடியாதவிஷயத்தில் பிரவர்த்திப்பதால் அல்ப புத்தியுள்ளவன் அல்லன் ;

பூமியினுடைய தூசிகளையும் எண்ணினாலும் எண்ணலாம். ஆகாசத்தில் நக்ஷத்திரங்களையும் ஒரு காலத்தில் எண்ணினாலும் எண்ணலாம் ; பகவானுடைய குணங்களை எண்ண முடியவே முடியாது ; இது சத்தியம்.

வேதங்களுங்கூடப் பகவானுடைய குணங்களை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்து முடியாமற் பேசாமலிருந்துவிட்டன. அப்பேர்ப்பட்ட பகவானுடைய குணங்களை அல்ப புத்தியுள்ள மனிதன் எப்படி ஸ்தோத்திரம் செய்யமுடியும் !

அப்படியிருந்தும் என் ஆசாரியரான வேதவியாஸ மகரிஷியானவர் அந்தப் பகவானின் சரித்திரத்தை ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் விசேஷமாக வர்ணித்துச் சொல்லியிருக்கிறார். அந்தப் பகவானின் சரித்திரத்தை வியாசரும் என்னையும் தன் புத்திரரான சுகாசாரியனையும் படிப்பித்தார். அப்படி ஆச்சாரியருடைய அனுக்கிரக விசேஷத்தால் கேட்கப்பட்ட எல்லா பகவத் விஷயங்களையும் சொல்வதற்குச் சாமர்த்திய முள்ளவனா யிருக்கிறேன். ஆகையால் பகவானுடைய சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லுகிறேன் ; ஹே, சௌனகரே ! நீர் மனதை ஒரு நிலையுள்ளதாகச் செய்து கேளும்.

முன் ஒரு காலத்தில் காவேரியானவள் சஹ்யமலை என்கிற கவேரபர்வதத்தினுடைய பக்கத்தில் இருக்

கிற குன்றில் அநேக ஆயிர வருஷ காலங்கள் தபஸ் செய்துகொண்டிருந்தாள்.

அப்போது மகாவிஷ்ணுவும் காவேரியினுடைய தபஸ்ஸால் சந்தோஷித்தவராகச் சங்கம் சக்கரம் கதை கத்தி சாரங்கம் என்னும் ஐந்து ஆயுதத்தைத் தரித்துக் கொண்டு எதிரில் ஆவிர்ப்பவித்தார்; அப்படி ஆவிர்ப்ப வித்த தேவ தேவரான மகாவிஷ்ணுவைப் பார்த்தவுடன் காவேரியும் பக்தியோடு நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தார்.

எல்லா லோகங்களையும் படைத்த லக்ஷ்மீபதியின் பொருட்டு அனேக நமஸ்காரம்; ஆச்சரியகரமான புஜ பலத்தை யுடையவரின் பொருட்டு நமஸ்காரம்; பிரம்மா முதலான எல்லாத் தேவர்களாலும் ஸேவிக்கப்பட்ட சரண கமலங்களையுடைய பகவானுக்கு நமஸ்காரம்; வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படுகிற விபவத்தை உடையவராயும் யோகீசுவரர்களால் தியானம் செய் யப்படுகிறவராயும் துஷ்டர்களான அசுர ராக்ஷஸர்களை நிக்கிரகிக்கிறவராயும் உள்ள பகவானுடைய பாதாரவிந்தங் களுக்கு அனேககோடி நமஸ்காரம்; ஹே, லக்ஷ்மீபதியே ஜய! ஹே, லோகநாதரே ஜய! ஹே, அனந்த கல் யாண குண சம்பன்னரே ஜய! ஹே! ஸர்வாத்மஸ்வ ரூபியே ஜய!

இந்தப் பிரகாரம் காவேரியால் ஸ்தோத்திரம் செய் யப்பட்ட பகவான் கருடத்துவஜரும் மந்தகாசத்தோடு கூடின முகத்துடன் மிருதுவாயும் கம்பீரமாயுமுள்ள வார்த்தையைச் சொல்ல ஆரம்பித்தார். ஹே, காவே ரியே! உன் தபஸ்ஸால் நான் சந்தோஷத்தை அடைந் தேன். என் தரிசனம் வியர்த்தமாக மாட்டாது;

உனக்கு வேண்டியவரத்தைக் கேள் என்று பிரீதியோடு சொல்லப்பட்ட காவேரியும் பக்தியோடு தண்டாகாரமாகப் பூமியில் விழுந்து பாதகமலங்களில் அனந்தநமஸ்காரங்களைச் செய்து ஹே பகவானே, நீர் என்னிடம் ப்ரீதியுடையவரா யிருப்பீராகில் நான் லோகங்களின் நன்மைக்கு நதீ ரூபம் தரித்துப் பூலோகத்தில் அநேக பாகங்களில் பிரவகித்துக்கொண் டிருப்பேன். என்னுடைய இருகரைகளிலும் நீங்களும் பரமசிவனும் சாந்நித்தியம் செய்யவேண்டும். எனக்கு இந்த வரத்தைக் கொடுத்து அனுக்கிரகிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

பகவானும் மிகுந்த சந்தோஷமடைந்து மங்களகரமான வாக்கால் ஹே, காவேரியே! நீ கேட்ட பிரகாரம் எல்லாம் அப்படியே யிருக்கட்டும்; நீயும் நதியாகப் பிரவஹித்துக்கொண் டிருப்பாய்; உன்னுடைய தலைபாகத்திலும் இரு கரைகளிலும் நடுவிலும் பக்கங்களிலும் நானும் பரமசிவனும் வஸித்துக்கொண் டிருக்கிறோம்; என்று சொல்லிவிட்டுப் பிரபுவான மகாவிஷ்ணுவும் அப்போதே மறைந்துவிட்டார்.

அதே பிரகாரமாகவே அந்த ஸஹ்ய மலையிலிருந்து எப்போது பிரவகிக்க ஆரம்பித்தாளோ அப்போதே பகவானும் சஹ்ய மலையின் தாழ்வரையிலேயே நெல்லிமாத்தடியில் தத்தாத்ரேய ரூபத்துடன் ஐந்து ஆயுதங்களைத் தரித்தவராகக் காவேரியின் உத்பத்திஸ்தானத்தில் ஸாந்நித்யத்தை அடைந்து வஸித்துக்கொண் டிருந்தார். அந்தக் காவேரியும் நெல்லி மரத்தையும் அம் மரத்தடியிலிருக்கும் பகவானையும் நமஸ்கரித்து அந்த இடத்திலிருந்து புறப்பட்டுக் கீழே இறங்கும்போது ஒவ்வோர்

இடத்திலும் அதிக ஜலப் பெருக்கோடும் அநேக நதிகளோடும் சேர்ந்தும் இரு கரைகளிலும் சண்பக மரங்கள் அசோகங்கள் சுரபுன்னை மரங்கள் தென்னை மரங்கள் மாமரங்கள் முதலான மரங்களோடும் இருவாக்ஷி மல்லிகை செங்கழுநீர் தாமரை அல்லி கருநெய்தல் முதலிய கொடிகளோடும் கூடினவளாய்ப் புஷ்பங்களில் தூளியால் கொஞ்சம் பொன்னிறமுள்ள காந்தியையுடையவளாகவும் அன்ன பக்ஷிகள் வண்டாழ்வார்கள் சக்கிரவாகங்கள் முதலான பக்ஷிகளின் சப்தத்தோடும் இவ்விதம் லோகங்களுக்கு நன்மை செய்வதன்பொருட்டுப் பிரவகித்தவளான காவேரி நதியும் ஒரு இடத்தில் பாசிக்கொத்துக்களாற் பச்சை நிறத்தோடும் சில இடங்களிற் பயங்கரமான சப்தத்தோடும் சில இடங்களில் தாமரைப் பூ முதலான பூக்களோடும் சில இடங்களில் அதிக வேகத்துடனும் சில இடங்களில் மிகவும் மெதுவாகவும் சில இடங்களில் வெண் நுரைகளால் அதிகமாகச் சிரிக்கிறவள் போலவும் பர்த்தாவினுடைய ப்ரீதி விசேஷத்தால் மதம் பிடித்த நாயகியைப்போலவும் போய்க்கொண்டிருக்கிருள்.

பின்னும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் கிந்நரர்களாலும் அப்ஸர ஸ்த்ரீகளாலும் சேவிக்கப்பட்ட இருகரைகளோடும் கரைகளின் இரண்டு பக்கங்களிலும் உயர்ந்த விஷ்ணு க்ஷேத்திரங்களையும் அடைந்தவளாகவும் அந்த விஷ்ணு சிவன் என்பவர்களுடைய அனுக்கிரக விசேஷத்தால் மகா பாபிகளின் பாவங்களையும் விலக்குவதில் சாமர்த்தியம் பெற்றவளாகவும் நதீ நத பர்த்தாவான ஸமுத்திர ராஜனையே கதியாக அடைந்தாள்.

லக்ஷ்மி தேவியோவென்றால் முன்னால் பயங்கர ரூபியான நரசிம்மரைப் பார்த்து மிகவும் பயந்தவளாகத் தேவர்களாற் போக ஏவப்பட்டிருந்தாலும் அவர் பக்கத்தில் போக எண்ணங் கொள்ளவில்லை. அப்பேர்ப்பட்ட லக்ஷ்மிதேவியைப் பார்த்துத் தேவர்களும் மிகவும் வருத்தத்தை யடைந்தவர்களாக, லக்ஷ்மிதேவியைப் பார்த்து உனக்குச் சாமர்த்தியம் இவ்வளவுதானா; அந்த நரசிம்மரே எல்லோர்க்கும் தாயார் தகப்பனார் ஆசாரியர் ரக்ஷகராயுமிருக்கக்கூடியவர்; அப்பேர்ப்பட்ட பகவானுடைய சமீபத்தில்போக ஏன் பயப்படவேண்டும் என்று சொல்லிவிட்டுத் தங்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

லக்ஷ்மி தேவியும் நான் நரசிம்மதேவரின் பிராண நாயகியாக இருக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டு தபஸ் செய்வதற்கு வேகத்தோடு ஸ்வர்க்க லோகத்திலிருந்து பூமியை அடைந்து நான் தபஸ் செய்வதற்கு யோக்கியமான இடம் எது என்று ஆலோசித்து ஸ்ரீரங்கத்திற்கு மேற்குத் திக்கில் முப்பது மைலுக்கப்புறமிருக்கிற விஷ்ணு க்ஷேத்திரத்தில் ஒரு கமலாலயம் என்கிற ஓடையை உண்டுபண்ணி அந்தக் கமலாலயத்தின் வாயு மூலையில் இலைகளால் ஆசிரமத்தை உண்டு பண்ணி அந்த ஆசிரமத்திற்குள் ஸுகமாய் இருந்து கொண்டு பகவான் நரசிம்ம மூர்த்தியைத் தியானம் செய்ய ஆரம்பித்தாள்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிரம்மாண்ட உத்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் நான்காவது அத்தியாயம் முடிந்தது.

# ஐந்தாவது அத்தியாயம்

இவ்விதம் லக்ஷ்மிதேவியும் பகவானுடைய பாத பத்மங்களை மனதில் தியானம் செய்துகொண்டு அசையாதவளாகத் தன் மனஸ்ஸைத் தானாகவே பகவானிடத்தில் வைத்துக்கொண்டு எல்லா சம்பத்துகளையும் கடைசியில் மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய சாமர்த்திய முள்ளதான நரசிம்ம மந்திரத்தை ஆவாரணத்தோடும் பிந்துவோடும் பீஜத்தோடும் கோணத்தோடும் நான்கு வாசல்களோடும் அந்த வாசல்களில் தேவேந்திரன் யமன் வருணன் குபேரன் என்கிற தேவர்களோடு கூடினதாகவும் அங்கங்களோடும் உபாங்கங்களோடும் கூட ஜபித்துக்கொண்டும் பிரகாசித்துக்கொண்டு மிருக்கிற பகவானுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை அதிக பக்தியோடு உபாசித்துக்கொண்டும் திவ்யங்களான ஆயிரம் வருஷங்களையும் அரை க்ஷணத்தைப் போலப் போக்கடித்துத் தபஸ்ஸைச் செய்துகொண்டிருந்தாள்.

பகவானும் இஷ்டபத்தினியான லக்ஷ்மிதேவியினுடைய உத்தமமான தபஸ்ஸால் சந்தோஷமடைந்தவராக லக்ஷ்மிதேவியின் அனுக்கிரக விஷயமாய் ஆலோசனைசெய்ய ஆரம்பித்தார்.

இதற்கு முன் காவேரிக்கும் உன் இரு கரைகளிலும் நான் வஸிக்கிறேன் என்று வரம் கொடுத்திருக்கிறேன்; இப்போது லக்ஷ்மிதேவியும் எவர்களாலும் செய்யமுடியாத தபஸ்ஸைச் செய்கிறபடியால் இந்த லக்ஷ்மிதேவியின் சமீபத்திலும் நான் இருக்கவேண்டும்; ஒரு இடத்தில் இருப்பதால் காவேரியையும் லக்ஷ்மிதே

வியையும் ஸந்தோஷிப்பிக்க வேண்டும்; அப்பேர்ப்பட்ட இடம் எதாக இருக்கலாம் என்று பகவன் ஆலோசித்து ஸர்வஞ்ஞராயிருப்பதால் இந்த இடம் தகுந்தது என்று தீர்மானித்துக் காவேரியின் எட்டு மயில் தூரமுள்ள வடக்குக் கரையில் லக்ஷ்மியின் தபோவனத்தில் கமலாலயம் என்கிற ஸரஸ்ஸின் தீரத்தில் இதற்கு முன் ஹனுமானால் கொண்டுவரப்பட்ட ஸ்ரீசைலம் என்கிற நாமக் கல் மலையில் சண்பகம் முதலான உயர்ந்ததான மரங்களாலும் ஜாதி இருவாக்ஷி முதலான கொடிகளாலும் அவைகளுடைய பூந்தேனின் பெருக்காற் சேற்றோடு கூடினதாயும் வஸந்தம் க்ரீஷ்மம் வர்ஷாசரத்ஹேமந்தம் சிசிரம் முதலான ஆறு ருதுக்களும் ஸாந்நித்ய மடைந்திருப்பதால் அவைகளில் உண்டான புஷ்பங்களின் வாஸனைகளைக் கிரகித்து வருகிற வாயுவினால் சேவிக்கப்பட்டதாயும் மயில் குயில் கிளி சக்கிரவாகம் முதலான பக்ஷி ஜாதிகளின் காதுக்கு மதுரமான சப்தங்களால் அழகுள்ளதாயும் சித்தர்களாலும் கிந்நரர்களாலும் சாத்தியர்களாலும் வித்தியாதரர்களாலும் விளையாடுவதற்கு யோக்கியமாகச் செய்யப்பட்ட நடுப் பாகத்தை உடையதாயும் தேவயோனி விசேஷங்களுடைய சங்கீத சப்தங்களால் நிறைந்ததாயும் அப்ஸர ஸ்திரீகளுடைய நர்த்தனங்களோடு கூடினதாயும் நந்தவனத்திற்குச் சமானமாயுமுள்ள உயர்ந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் லக்ஷ்மி தேவிக்கும் ப்ரீதியை யுண்டுபண்ணுகிற ஸௌம்ய ரூபத்தோடும் அநேக ஆயுதங்களால் அலங்கரிக்கப்பட்ட நான்கு கைகளோடு கூடினவராயும் தங்கப் பீடத்தில் வீற்றிருக்கிறவராயும் எல்லாக் கிரீடம் முதலான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும்

ப்ரம்மா சிவன் முதலான தேவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவராயும் லக்ஷ்மிதேவியால் ஹிருதயத்தில் தியானம் செய்யப்பட்டவராயும் ஆன ஸ்ரீ நரசிம்ம சுவாமி ரூபியாய் ஆவிர்ப்பவித்தார்.

லக்ஷ்மிதேவியும் தன் எதிரில் ஆவிர்ப்பவித்த பகவானுடைய அப்ராகிருத திவ்விய மங்கள விக்கிரக காந்திகளால் திக்பிரமையடைந்தவளாக உடனே எழுந்திருந்து பக்தியோடு வணங்கின தலையோடு அனேகம் தடவை நமஸ்கரித்தும் அநேகவிதமாய்ப் புஷ்பம் முதலானவைகளால் பூஜித்தும் உத்தமங்களான தன் வாக்குகளால் தேவதேவனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தாள் ; ஹே ! தேவ தேவரான பர்த்தாவே நமஸ்காரம்.

ஈஸ்வரர்களுக்கெல்லாம் ஸர்வேசுவரரான ஹே மகாவிஷ்ணுவே! கந்தர்வர்களாலும் வித்தியாதரர்களாலும் நாகங்களாலும் யக்ஷர்களாலும் பூஜிக்கப்படுகிற உம்மை மார்பினாலும் தலையினாலும் கண்ணினாலும் மனஸ்ஸினாலும் வாக்கினாலும் காலினாலேயும் கையினாலேயும் காதினாலேயும் ஆகிய எட்டு அவயவங்களாலேயும் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றேன்.

பூமிதேவி உம் காலாக இருக்கிறாள் ; சூரியதேவன் உம் கண்ணாக இருக்கிறான்; சந்திரன் உம் மனஸ்ஸாகவும் ஆகிறான்; உம் வயிறு மூன்று லோகங்களி லிருக்கிற ஜனங்களுக்கு இருப்பிடமாக இருக்கிறது.

நீரே மூன்று லோகங்களையும் உண்டுபண்ணுகிறவராகவும் பிரளயகாலத்தில் அழிக்கிறவராகவும் ஸ்தாவர ஜங்கம பிராணிகள் உள்ளேயும் வெளியிலேயும் இருக்கிறவராகவும் எல்லார்களாலும் போற்றப்படுகிறீர். பிரம்மாவும் உம் நாபியில் உண்டான தாமரைப்பூவில்

உண்டானவர்; ருத்திரரும் உம்முடைய நெற்றிக்கண்ணி லிருந்து உண்டானவர்; இவர்களைத் தவிர எல்லாத் தேவர்களும் உம்முடைய அவயவங்களி லிருந்து உண் டானவர்கள் தான்.

ஜலமும் உம்முடைய வீர்யமாக ஆகிறது. ஹே, லோகபதியே! ஹே, தேவ தேவரே! உமக்கு நூறு தடவை ஆயிரம் தடவை பதினாயிரம் தடவை நமஸ்கா ரம் செய்கிறேன் என்று இவ்விதம் லக்ஷ்மி தேவியால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவரான பகவானும் லக்ஷ்மி தேவியின் எதிரில் சிரித்துக்கொண்டு தன்முக கமலத்தி லிருந்து மதுரமான வார்த்தையைச் சொல்ல ஆரம்பித் தார்.

அழகு பொருந்திய எல்லா அவயவங்களையுடைய ஹே, லக்ஷ்மிதேவியே! உன் உக்கிரமான தபஸினால் நான் சந்தோஷமடைந்தேன்.

நான் உன் மனோபீஷ்டமான வரத்தைக் கொடுப்ப தற்குத் தயாராயிருக்கின்றேன்; என் தரிசனம் உடனே பிரயோஜனத்தைக் கொடுக்கக் கூடியது; நீ வேண்டிய வரத்தைக் கேள் என்று அனுக்கிரகித்தருளினார்.

இப்படி அனுக்கிரகிக்கப்பட்ட லக்ஷ்மிதேவியும் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு தெரிவிக்க ஆரம்பித் தாள்; ஸர்வக்ஞரான ஹே, பிராண நாதரே! நீர் எல் லோர்களுடைய எண்ணங்களையும் அறிவீர்; ஆனாலும் சொல்லுகின்றேன், முன்னால் ஆச்சரியகரமான இந்த ரூபத்தைப் பார்த்துப் பயத்தினால் தூரத்திலிருந்த என் னைப் பிரம்மாதிதேவர்கள் அவமானப் படுத்திவிட் டார்கள்.

அதனால் வெட்கத்தோடு கூடின நான் எவர்களா லும் செய்பமுடியாத தபஸ்ஸைச் செய்தேன். அநேக ஆயிர வருஷங்களின் முடிவில் தங்கள் பாதாரவிந்தங் களைத் தரிசித்தேன்; இது முதல் தங்கள் பாதாரவிந்தங் களுக்கே சிச்ருஷை செய்துகொண்டு தங்களை விட்டுப் பிரியாமல் எல்லா அவதாரங்களிலும் தங்களோடேயே சேர்ந்துகொண்டு பயமில்லாமலேயே பக்தி செய்து சந் தோஷமடைந் திருப்பேன்.

இந்த ஸௌம்மிய ரூபத்துடன் ஹே, நரசிம்ம சுவா மியே! என் முன்னால் இருக்க வேண்டும்; எப்போதும் நான் தங்கள் பாதபூஜை செய்துகொண்டு சந்தோ ஷத்தை அனுபவித்துக் கொண்டிருப்பேன் என்று லக்ஷ்மிதேவியால் பிரார்த்திக்கப்பட்ட மகாவிஷ்ணுவும் லக்ஷ்மியைப் பார்த்து உன் இஷ்டப் பிரகாரம் எல்லாம் உண்டாகும் என்று சொல்லிவிட்டுப் பின்னும் சில வார்த் தைகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

நான் பிரகலாதன் என்கிற பக்தனைச் சந்தோஷப் படுத்துவதற்குச் சாலக்கிராம சிலையில் வசித்தேன்.

அந்தச் சாலக்கிராம மலையில் ஹனுமானால் இங்கு உன் தபோவனத்தில் கமலாலய தீர்த்தக் கரையில் கொண்டுவரப்பட்டது. இப்பேர்ப்பட்ட நாமக்கல் என்கிற சாலக்கிராமமலையில் ஒரு அம்சத்தினால் நரசிம்ம ரூபியாகவும் யோக்கியதைக்குத் தகுந்தபடி வேறு மத்ஸ்ய கூர்ம வராஹாதி ரூபங்களுடனும் மற்ற அம்சங்களோ டும் வஸிப்பேன்.

ஹே, லக்ஷ்மிதேவியே! நீயும் என் ரூபத்திற்குத் தகுந்தபடி நாமகிரிஅம்மன் ரூபத்தோடும் வேறு அனேக ரூபங்களுடனும் என்னை அனுசரித்துக்கொண்டு என்

தேவியாக இருக்கவேண்டும் என்று பகவானும் சொல்லத் தாயாரும் அப்படியே என்று சொல்லி அநேக ரூபங்களுடனும் பகவானைப் பஜித்துக்கொண்டிருப்பதாக அங்கீகரித்துச் சந்தோஷமடைந்தாள். பிற்பாடு மிகவும் சந்தோஷமடைந்த பகவானும் லோகங்களை அனுக்கிரகித்துக்காப்பாற்ற எண்ணங்கொண்டவராகப் பிரம்மா முதலான தேவர்களுக்குங்கூடக் கிடைக்கக்கூடாத என்னுடைய சமீபத்தை அடைந்த நீ வேறு ஒரு வரத்தையும் பெறலாம் என்று மேகத்தின் இடிபோல உயர்ந்த வாக்கால் புன்சிரிப்போடு சொல்ல ஸ்ரீ நாமகிரி அம்மனும் ஸ்ரீ நரசிம்மசுவாமியைப் பார்த்து இந்தக் கமலாலயம் கங்கைக்குச் சமானமாகவும் இந்தத் தபோவன பூமி கைக்குச் சமானமாகவும் இந்தத் தபோவனத்திலிருக்கிற விருக்ஷங்கள் வடவிருக்ஷங்களுக்குச் (ஆலமரங்களுக்குச்) சமானங்களாகவும் இருக்கவேண்டும்; இந்தக் கமலாலயத்தின் கரையில் எவர்கள் தேவர்களைக் குறித்து யாகம் செய்வார்களோ அவர்களுக்குச் சுவர்க்காதி லோகங்களில் வாசம் ஏற்படவேண்டும். எவர்கள் அப்படியே பிதுரு தேவர்களை உத்தேசித்துத் தர்ப்பணம் பிண்ட பிரதானம் முதலான பித்ருகர்மாக்களைச் செய்வார்களோ அவர்களுடைய பித்ருக்கள் திருப்தியையடைந்து உயர்ந்த லோகங்களை அடைவதோடு அந்தப் பித்ரு பக்தர்களும் சம்பத்து முதலான பலன்களையும் அடைவார்கள் என்பதாக அனுக்கிரக்கிக்க வேண்டும்; வேறு தீர்த்தங்களிலும் க்ஷேத்திரங்களிலும் ஒரு வருஷம் தபஸ் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ அந்தப் பலன் இந்த க்ஷேத்திரத்தில் இதில் இருக்கிற தீர்த்தங்களில் ஒரே நாளில் தபஸ் செய்வதாலேயே கிடைக்க

வேண்டும்; இந்த க்ஷேத்திரத்தில் மந்திர ஜபம் ஹோமம் தேவபூஜை பிராம்மணபூஜை முதலானவை ஸ்வல்பமாகச் செய்யப்பட்டாலும் அனந்த பலன்களை உண்டுபண்ண வேண்டும் என்று பிரார்த்திக்கப் பகவானும் ஹே, லக்ஷ்மி தேவியே! நீ கேட்டதெல்லாம் அப்படியே நிறைவேற வேண்டும் என்று நாமகிரி அம்மனை அனுக்கிரகித்துப் பின்னும் ஒரு வார்த்தை உனக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னார்.

நாமகிரி அம்மனும் வரம் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கப் பகவானும் ஹே, பிராண நாயகையே எந்த ஜனங்கள் இந்தக் கமலாலயத்தில் ஸ்னானம் செய்து பரிசுத்தர்களாகப் பிரதக்ஷிண நமஸ்காரங்களுடன் உன்னுடைய தரிசனம் செய்வார்களோ அவர்கள் கூச்மாண்டம் பேதாளம் பிரம்மராக்ஷஸன் முதலான துஷ்ட தேவதைகளால் பீடிக்கப்பட்டிருந்தாலும் துஷ்ட கிரகங்களுடைய பீடையை அடைந்திருந்த போதிலும் அந்த உபத்திரவங்களிலிருந்து விடுபட்டுச் சௌக்கியமடைவார்கள்.

பிள்ளை இல்லாதவர்கள் பிள்ளைகளைப் பெறுவார்கள். வியாதியுள்ளவர்கள் வியாதியில்லாதவர்களாகவும் திருட சரீரர்களாகவும் இருப்பார்கள்; எவர்கள் ஒரு மண்டலம் நியமமாக உன் நாமாவினால் அடையாளம் செய்யப்பட்ட கமலாலயத்தில் ஸ்னானம் செய்து அநேக பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து உன்னைப் பூஜிப்பார்களோ அவர்களுடைய எல்லா எண்ணங்களும் நிறைவேறுகின்றன. இந்தக் கமலாலயத் தீர்த்தம் கங்கை முதலான தீர்த்தங்களைக் காட்டிலும் உயர்ந்த

தாகவும் இந்த க்ஷேத்திரம் நைமிச க்ஷேத்திரத்தைக் காட்டிலும் மேலானதாகவும் இருக்கும்.

எந்த ஜனங்கள் மூன்று நாட்கள் உன்னுடைய இந்த ஆசிரமத்தில் வசித்துக்கொண்டு இந்தக் கமலாலயத்தில் ஸ்நானம் செய்து உன்னையும் என்னையும் பூஜித்தும் நமஸ்கரித்தும் பிரதக்ஷிணமும் செய்து நம்மை உபாஸிப்பார்களோ அவர்கள் ஏழு ஜன்மாக்களில் சம்பாதிக்கப் பட்டிருந்த பாபங்களையும் விலக்கிப் புத்திர பௌத்திராதிகளோடு நூறு வயது முழுமையும் இந்த லோகத்தில் வேண்டிய சுகங்களையு மனுபவித்துக் கடைசியில் என் சாயுஜ்ய பதவியையு மடைவார்கள் என்று சொல்லிவிட்டு நரசிம்ம சுவாமியும் நாமகிரி அம்மனும் மறைந்துவிட்டார்கள் என்று சூத முனிவரும் சொல்லிவிட்டு ஹே, சௌனகரே! கேளும் என்று மறுபடியும் சொல்ல ஆரம்பித்தார். அந்த நரசிம்ம சுவாமி ஸ்ரீ சைலமலையிலும் நாமகிரி அம்மன் அதற்கு எதிரிலும் ஒரு அம்சமாக ஆவிர்பவித்தார்கள்.

இப்போதுங்கூட முன் சொல்லப்பட்ட எல்லாப் பலன்களையும் கொடுத்துக்கொண்டு காவேரி தீரத்தில் நாமக்கல் மலையில் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸாந்நித்யம் செய்து ஸ்ரீ நரசிம்ம சுவாமியும் ஸ்ரீ நாமகிரி அம்மனும் அர்ச்சாமூர்த்திகளாக உபாசிக்கப்பட்டு வருகிறார்கள்.

இப்பேர்ப்பட்ட காவேரி வைபவத்தையும் ஸ்ரீ நரசிம்ம சுவாமியினுடைய பிரபாவத்தையும் ஸ்ரீ நாமகிரி அம்மன் தபஸ்ஸின் மகிமையையும் இந்த ஆசிரமத்திற்கும் இந்தத் தீர்த்தத்திற்கும் ஸ்ரீமதி நாமகிரித் தாயாருக்கும்

வரம் கொடுத்த சரித்திரத்தையும் எவர்கள் கேட்பார்களோ படிப்பார்களோ நினைப்பார்களோ அவர்கள் மகா புண்ணியசாலிகளாகவும் மறு பிறப்பில்லாதவர்களாகவும் சௌக்கியமடைவார்கள்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிர்ம்மாண்ட உற்பத்தி
கண்டத்தில் தசாவதார கல்பத்தில் ஐந்தாவது
அத்தியாயம் முடிந்தது.

# ஆறாவது அத்தியாயம்

சௌனகர் கேட்கிறார் : ஹே, சூதமுனிவரே! உம் முகாரவிந்தத்திலிருந்து ஸ்ரீ நரசிம்ம சுவாமியினுடையவும் ஸ்ரீ நாமகிரி அம்மனுடையவும் காவேரியினுடையவும் நாமக்கல் க்ஷேத்திரத்தினுடையவும் கமலாலயத் தீர்த்தத்தினுடையவும் மகிமையை பாக்கிய விசேஷத்தால் கேட்டேன்; நான் தன்யனானேன்; என் குலதேவதையான ஸ்ரீ ராமச்சந்திரருடைய சுருக்கமான சரித்திரத்தையும் விஷ்ணு சஹஸ்ர நாமங்களுடைய மகிமையுள்ளதாயும் மனதை இழுப்பதற்குச் சாமர்த்தியமுள்ளதாயுமான ஸ்ரீராம தாரக மந்திரத்தையு முபதேசமாகப் பெற்றேன். தாங்கள் சொன்ன ஹனுமானுடைய சரித்திரத்தால் ஒரு விஷயம் நன்றாக விளங்குகிறது. அதாவது ஸ்ரீராம தூதரான ஹனுமான் ஸஞ்சீவினி விசல்யகரணீ முதலான ஓஷதிகளால் நிறைந்த துரோண மலையை ஸ்ரீராம காரியத்திற்காக எடுத்துக்கொண்டு போய் மறுபடியும் வந்து அந்த இடத்தில் வைத்துவிட்டு வரும் வழியில் சிரமமடைந்து தாகத்தினால் ஜலம் குடிப்பதற்கு முயற்சித்து அதிக அழகு பொருந்திய லக்ஷ்மி தேவியின் தபோவனத்தைப் பார்த்து அதன் நடுவில் இருக்கும் கமலாலயம் என்கிற சரஸ்ஸையும் பார்த்து அதில் ஜலம் குடிப்பதற்காகப் பிரம்மா சிவன் முதலான தேவர்களால் ஸேவிக்கப்பட்ட கையிலிருக்கும் ஸ்ரீ ஸாளக்கிராம சிலையை அந்த உத்தமமான தபோவனத்தில் வைத்துவிட்டு ஜலம் குடித்துச் சிரமத்தை விலக்கிக் கொண்டு மறுபடியும் அந்தச் சாலக்கிராம சிலையை யெடுத்துக்கொண்டு போவதற்கு வந்து எடுத்துப்பார்க்க

அசைப்பதற்குங்கூட முடியாமல் அதிக பிரயத்தனத்தோடு எடுக்க முயற்சி செய்துகொண்டிருக்கிற ஹனுமானைப் பார்த்து முன்னாலேயே ஒரு வித தீர்மானத்தை மனஸ்ஸில் செய்துகொண்டிருக்கிற பகவான் மகாவிஷ்ணுவும் ஹே, ஹனுமானே! நான் இந்த லக்ஷ்மியின் தபோவனத்திலேயே வசிப்பேன்; நீ ஸ்ரீ ராமகாரியத்தின் பொருட்டுச் சீக்கிரம் புறப்பட்டுப் போகலாம் நான் உன்னை அனுக்கிரகிப்பதற்கு இவ்விடத்தில் ஸ்ரீ ராமச்சந்திர ரூபியாகவும் வஸிப்பேன் என்று சொல்லி அனுக்கிரகித்தார்.

ஹனுமானும் ஹே, பகவானே! நானும் இவ்விடத்தில் என் தகப்பனாரான வாயுதேவ ரூபத்தோடு எப்போதும் உம்முடைய பூஜையை ஓர் அம்சத்தினால் செய்துகொண்டிருப்பேன்; வேறு அம்சங்களால் ஸ்ரீராமபத்ருடைய கார்யத்தையும் செய்துகொண்டிருப்பேன் என்று சொல்லி அவருக்குப் பிரதக்ஷண நமஸ்காரங்களை அதிகமாகச் செய்து ஸ்ரீராம காரியத்திற்காகப் புறப்பட்டும் போய்விட்டார் என்று தாங்கள் சொன்ன ஹனுமானுடைய சரித்திரத்தால் மத்ஸ்யம் கூர்மம் முதலான எவ்வளவு அவதாரங்கள் இருந்தபோதிலும் அந்த அர்ச்சா மூர்த்திகள் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைக் காட்டிலும் அதிக பலன்களைக் கொடுக்க மாட்டார்கள் என்று தெரியவருகிறது.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியோவென்றால் தன்னைப் பூஜிக்கிற பிராம்மணன் செம்படவன் ராக்ஷஸன் குரங்கு காக்கை கழுகு மரம் செடி கொடி முதலானவைகளுக்குங்கூட மோக்ஷ பரியந்தம் உயர்ந்த பலன்களைக் கொடுத்து விட்டு அதுவுங்கூடப் போதுமானதல்ல

என்று வருத்தப்படக் கூடியவர்; ஸ்ரீ பகவான் மகா விஷ்ணுவே! ராவணன் முதலான துஷ்டராக்ஷஸர்களைச் சம்ஹரித்து சாதுக்களைக் காப்பதற்குத் தானே எல்லார்களையும் கலியாணகுணங்களால் சந்தோஷமடையும்படி செய்ய வல்லமையுடையவரா யிருப்பதால் ஸ்ரீராமர் என்கிற பெயரோடும் தம்பிகளான பரத லக்ஷ்மண சத்ருக்னர்களோடும் லோகமாதாவான லக்ஷ்மிதேவியின் மூலமாகவே லோகங்கள் எல்லாம் உண்டாகின்றனவாதலால் ஸ்ரீ ஜானகி என்கிற பெயருடன் தோன்றின ஸ்ரீ ஸீதாதேவியோடும் பூலோகத்தில் அவதரிக்க உத்தேசித்து மகாபாக்கியசாலிகளான கௌஸல்யா தேவியையும் தசரத சக்ரவர்த்தியையும் தாய் தந்தைகளாக அடைந்து அவர்களைச் சந்தோஷிப்பித்தார்.

பிறகு விசுவாமித்திர மகரிஷியினுடைய புண்ணிய விசேஷத்தால் சித்தாசிரமத்தில் அவருடைய யாகத்தைக் காப்பாற்றுவதற்காக அவரால் தசரத சக்ரவர்த்தியிடம் யாசிக்கப்பட்ட ஸ்ரீ ராமச்சந்திரரும் லக்ஷ்மணரோடு அவருடைய கோபத்திற்குப் பயந்த தசரத சக்கிரவர்த்தியால் அனுப்பப்பட்டு அவருடன் பின் தொடர்ந்து வந்து அநேக மந்திரங்களுடையவும் திவ்வியாஸ்திரங்களுடையவும் உபதேசத்தைப் பெற்று அவருடைய ஆக்ஞையால் தாடகை என்கிற ராக்ஷஸியையும் சுபாகு முதலான ராக்ஷஸர்களையும் கொன்று விசுவாமித்திரர் யாகத்தையுங் காப்பாற்றி விசுவாமித்திர மகரிஷியையும் அனுக்கிரகித்துப் பிறகு ஜனகமகாராஜாவினுடைய யாகசாலையை யடைந்து சிவதனுஸ்ஸையும் முறித்து ஸ்ரீ ஸீதையையும் கலியாணம் செய்துகொண்டும் நடுவழியில் பரசுராமரை ஜயித்தும்

அயோத்தியா பட்டினத்தில் ஸ்ரீ ஸீதாதேவியோடு ஸௌக்கியத்தை அனுபவித்துக்கொண் டிருந்தார்.

பிற்பாடு தன் ஜன்மாவை எல்லா லோகங்களில் இருக்கிற ஜனங்களுக்குச் ஸௌக்கியத்தை உண்டு பண்ணித் துஷ்டர்களைச் சம்ஹரித்து ஸபலமாகச் செய்யவும் கைகேயிக்கு வரங்களைக் கொடுத்து அதனால் ஏற்பட்ட கடன்களி லிருந்து தன் தகப்பனரான தசரசக்ரவர்த்தியை விடுவித்தும் தனக்கே வந்த ராஜ்ய லக்ஷ்மியைப் பரதனுக்காகத் தகப்பனரிடத்திலேயே உதறித் தள்ளி விட்டு ஸ்ரீ ராமச்சந்திரரும் ஜடைகளையும் மரவுரிகளையும் மான்தோலையும் தரித்து லக்ஷ்மணரோடும் சீதாதேவியோடும் தண்டகாரண்ணியத்தை அடைந்தார்.

பின்னும், அந்த ஸ்ரீ ராகவன் தன் பத்தினியைத் திருடின விராதனைக் கொன்றும் அனேக மகரிஷிகளை அனுக்கிரகித்தும் கெட்ட எண்ணங் கொண்டுவந்த சூர்ப்பனகையை லக்ஷ்மணன் மூலமாய் அறுக்கப்பட்ட மூக்குகளையும் காதுகளையும் உடையவளாகச் செய்தும் அவளால் ஏவப்பட்டு வந்த கரன் தூஷணன் த்ரிசிரஸ் என்கிற ரக்ஷஸர்களையும் அவர்கள் சேவகர்களான பதினாலாயிரம் ராக்ஷஸ ஸேனைகளையும் ஒருவனாகவே யமலோகத்திற்கு விருந்தாளிகளாக அனுப்பிவிட்டார்.

அப்புறம் பகவான் சீதாதேவியைத் தனியாக இருக்கும் சமயத்தில் ஸந்நியாஸி வேஷம் தரித்துத் திருடிக் கொண்டுபோன ராவணனோடு ஸ்ரீ ராமச்சந்திரரிடத்தில் புத்திரனிடத்திற்போலப் ப்ரீதியை வைத்திருந்ததால் சண்டை போட்டுத் தன் சிறகுகளாலும் வஜ்ர சமங்களான நகங்களாலும் அந்த ராவணனுடைய ரதத்தையும் குதிரைகளையும் உடைத்தும் ராவணனையும் கலங்கும்படி

செய்தும் மறுபடியும் ராவணனை வேறு ரதத்தில் ஏறும் படி செய்தும் மறுபடியும் தன்னோடு யுத்தம் செய்ய வந்த ராவணனாலே மிகவும் ஆயுதங்களால் பீடிக்கப் பட்டவராயும் அதிலும் சந்திரகாசம் என்கிற கத்தியால் அறுக்கப்பட்ட சிறகுகளை உடையவருமான ஜடாயு என்கிற கழுகு ராஜனைத் தசரதருக்கும் கிடைக்காத புத்திர கிருத்தியத்தால் உயர்ந்த புண்ணிய லோகங்களை அடையும்படி செய்தார்.

அதன் பிறகு ஸ்ரீ ரகுகுலநாதரும் மிகவும் பயங்கர ரூபமுடைய கபந்தன் என்கிற ராக்ஷஸனை நிக்கிரகித்துத் தேவரூபியான கபந்தன் வார்த்தையால் ஹனுமான் மூலமாக வானர ராஜனான சுக்கிரீவனோடு ஸ்னேஹம் செய்து அவனால் அனுப்பட்ட வானரசேனைகளால் அதிலும் ஹனுமானால் லங்கா பட்டினத்தில் சீதாதேவி யிருப்பதாக அறிந்து வானர ஸேனைகளோடு சண்டைக் குப் புறப்பட்டுப் போய் நடு வழியில் சமுத்திரத்தில் எல்லாப் பாபங்களையும் பார்த்தமாத்திரத்திலேயே நாசம் செய்யக்கூடிய சாமர்த்தியமுள்ள ஸேதுவைக் (அணையை) கட்டிச் சரணாகதி செய்த விபீஷணனுக்கு லங்கா ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்விப்பதாகப் பிரதிக்ஞை செய்து மகா பாபியான ராவணனையும் மற்ற ராக்ஷஸர்களையும் நிக்கிரகித்து லங்காராஜ்யத்தில் பக்தனான விபீஷணனை ராஜாவாகச் செய்து புஷ்பகவிமானரூடராக அயோத்தியைக்கு வந்து கல்பக விருக்ஷத்தடியில் தங்கமணி மண்டபத்தில் புஷ்பக விமானத்தில் சிம்மாசனத்தில் சீதாதேவியோடு வீற்றிருந்து வஸிஷ்டர் முதலான மகரிஷிகளால் பட்டாபிஷேகம் செய்யப் பட்டவராகவும் தன் சகோதரர்களால் சிச்ரூஷை செய்யப்பட்ட

வராகவும் சேவகர்களால் தோத்திரம் செய்யப்பட்டவ ராகவும் எல்லா ஜனங்களாலும் போற்றப்படுகிற சரணா கமலங்களை யுடையவராகவும் அனேக ஆயிரவருஷ காலம் அதாவது பதினோராயிரம் வருஷம் ராஜ்ய பரிபா லனம் செய்துகொண்டிருந்தாரல்லவா?

அப்பேர்ப்பட்ட உயர்ந்த குணமுள்ள ஸ்ரீ ராம பத்திருடைய தூதரான ஹனுமானுடைய பராக்கிர மத்தை அறிந்தவர் யார்? எந்த ஹனுமான் தேவர்களா லும் பிரவேசிக்க முடியாத லங்காபட்டணத்திற்குள் நுழைந்து விகாரசுவரூபமுள்ள ராக்ஷஸிகளால் அதட்டப் பட்ட சீதாதேவியின் சமீபமடைந்து ஸ்ரீ ராமச் சந்திர ரின் அமிருதத்திற்குச் சமானமான கதையாலும் அங் குளியகம் (மோதிரத்தை) கொடுத்ததலேயும் சந்தோ ஷத்தை அடையும்படி செய்தாரோ எந்த ஹனுமான் பகவானை ராமச் சந்திராலும் சிலாகிக்கப்படக் கூடிய வாக் சாமர்த்தியமுடையவராகப் பகவானைப் பஜித்து அந்தப் பக்தி விசேஷத்தால் இப்போதும் சிரஞ்சீவியாய் அடுத்த பிரம்ம பதவிக்காகத் தபஸ் செய்துகொண் டிருக்கிறரோ அப்பேர்ப்பட்ட ஹனுமானுடையவும் ஸ்ரீ ராமச்சந்திருடையவும் ஸ்ரீ சீதா தேவியினுடையவும் கீர்த்தி விசேஷங்களை வர்ணிப்பதற்கு வால்மீகி மகரிஷி ஸ்ரீ ராமாயணத்தைச் செய்தருளினர். அந்த ராமாயணம் முழுமையும் உத்தரகாண்டத்தோடுகூட உங்கள் முக மாக என்னல் நன்றாகக் கேட்கப்பட்டது. அப்பேர்ப் பட்ட ஹனுமானும் கண்டகீ நதியின் நடுவிலிருந்த ஸாளக்கிராம மலையில் தாழ்வரையிலிருந்த நரசிம்ம லக்ஷ ணத்தோடு கூடின பெரிய ஸாளக்கிராம சிலையை எடுத் தார் என்று உம்மால் சொல்லப்பட்டதல்லவா?

அந்தக் கண்டகீ என்பவள் யார்; எதற்காக நதீ ரூபத்தையடைந்தாள்; அந்தக் கண்டகியின் நடுவில் ஸாளக்கிராம மலையும் எதற்காக உண்டானது; அதில் ஸாளக்கிராம சிலையும் நரசிம்மலக்ஷணத்தோடு எப்படி இருந்தது; அந்த ஸாளக்கிராம அர்ச்சா மூர்த்திகள் எவ்வளவு எண்ணிக்கை யுடையவைகள்; சாளக்கிராம சிலைகளில் ஒவ்வொன்றும் எவ்வித லக்ஷணமுடையது; இவை எல்லாவற்றையும் நடந்தபடி எனக்குச் சொல்ல வேண்டும்;

நீர் எல்லாச் சரித்திரங்களையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்வதற்கு வியாஸருடைய அனுக்கிரகத்தால் சாமர்த்தியமுடையவர் என்று சௌனகர் கேட்டார்;

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிர்ம்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் ஆருவது அத்தியாயம் முடிந்தது.

# ஏழாவது அத்தியாயம்

ஸூத முனிவரும் சொல்லுகிறார்: ஹே, சௌனக மகரிஷியே! நீர் கேட்ட விஷயத்தை என் புத்திக்கு எட்டியவரையில் நான் கேட்ட பிரகாரம் சொல்லுகிறேன் என்று மகா விஷ்ணுவின் சரணகமலங்களை மனதில் தியானம் செய்துகொண்டும், ஆசாரியருடைய கால்களில் தன் தலையை வைத்து நமஸ்கரித்தும் ஸ்ரீ ஸரஸ்வதி தேவிக்கும் அவர் பர்த்தாவான பிரம்ம தேவருக்கும் அவர் புத்திரர்களான ஸ்ரீ ஸநக ஸநந்தன ஸநத்குமார ஸநத்ஸுஜாதாக்களுக்கும் லோகங்களைக் காப்பாற்றுவதில் ஆசைகொண்ட நாரதாதி முனிவர்களுக்கும் பக்தி சிரத்தைகளோடு அநந்தகோடி நமஸ்காரங்களைச் செய்தும் ஸூத மகரிஷி சொல்ல ஆரம்பித்தார்.

முன்னொரு காலத்தில் விதேஹம் என்கிற தேசத்தில் அழகு, நல்ல சுபாவம், தயை, பெரியோர்களின் ஸ்நேகம் முதலான குணங்களால் தேவஸ்திரீகளையும் ஜெயிக்கக்கூடிய யோக்கியதையுள்ள பிரியமான வார்த்தைகளையே பேசுவதால் "பிரியம்வதை" என்கிற பெயரோடு கூடின ஒரு தேவதாஸி இருந்தாள்.

அவளுடைய விரதமும் "எந்த என் மனதுக்குப் பிடித்த அழகு முதலான ஸத்குணங்கள் நிறைந்த வித்துவானான புருஷன் என்னால் ராத்திரியில் இச்சிக்கப்பட்டு வருவானோ, அவன்தான் எனக்கு இஷ்டநாயகன். அவனுக்குத்தான் இந்த என் சரீரமும் ஆதீனமாகும். அவன் சொன்னால் அக்னியையும் அடைவேன்" என்பதாகும்; அந்தப் பிரியம்வதை என்கிற தேவதாஸிக்கு

அவ்வளவு குணங்கள் நிறைந்த புருஷன் ஒருவனும் லோகங்களில் இல்லாததால் ஒருவருமே அவளிடம் நெருங்கவில்லை. அப்பொழுது அவளுடைய மனதைச் சோதிப்பதற்குப் பகவானே வந்து அறிந்து பார்த்ததில் மிகவும் திருப்தியடைந்து அவளுக்குப் பிரசன்னராகி, "ஹே பிரியம்வதையே! உன் நன்னடத்தையால் நான் மிகவும் சந்தோஷிக்கிறேன்; வேண்டிய வரத்தைக் கேட்கலாம்" என்று சொன்னவுடன் அந்தப் பிரியம் வதையும் "பகவான் திருப்தியடைந்தால் மாயா சம்பந்த மான சத்வ ரஜோ தமோ குணங்கள் நீங்கின சுத்த சத்வ குணமுள்ள புத்ரன் எனக்கு உண்டாகவேண்டும்" என்று கேட்டதன்மேல் பகவானும் "அப்படியே" என்று அனுக்ரஹித்து "ஹே, மங்கள குணமுள்ள பிரி யம்வதையே! நீயும் மறுபிறப்பில் கண்டகீ நதியாக உண்டாவாய், அப்பொழுது நான் ஸூக்ஷ்மரூபியாயும் ஸர்வ வியாபியாயும் பிரிந்தும் உன் பிரவாஹத்தின் நடு வில் பிரம்மாவாகவும் விஷ்ணுவாகவும் ருத்ராகவும் இருந்துகொண்டும் உனக்குப் புத்ரரூபமான ஸாளக் ராமக் குன்ருய் வசிப்பேன்; உன்னுடைய கீர்த்தியை யும் பிரகாசப்படுத்துவேன்" என்று வரம் கொடுத்து உடனே மறைந்தார்.

அந்தப் பிரியம்வதைதான் கண்டகீ நதியாக உண் டாளுள். மகாயோகியான பகவான் விஷ்ணுவே, அந்தக் கண்டகீ நதியின் நடுவில் ஸாளக்ராம மலையாய் புத்தி ரர்போ லுண்டானுர். அந்த சாளக்ராம மலையிலும் சக் ரத்தினுடையவும் வர்ணத்தினுடையவும் முகத்தினுடை யவும் பேதத்தாலே வெவ்வேறு விதங்களான ஈசுவர மூர்த்தங்கள் என்று யோகீசுவரர்களாற் பிரகாசப்

படுத்தப்பட்ட அநேக சாளக்ராம சிலைகளிருக்கின்றன. அவை அநேக லக்ஷணம் பொருந்தியவை. அவைகளில் மகா ச்வேதம் என்றும் ச்வேதம் என்றும் (ச்வேத மென்றால் வெளுப்பு நிறம்) ரக்தம் என்றும் அதிரக்த மென்றும் (ரக்தம் என்றால் சிவப்பு நிறம்) நீலமென்றும் மகாநீல மென்றும் (நீலமென்றால் பச்சை நிறம்) பீத மென்றும் (மஞ்சள் நிறமுள்ளது) கபில மென்றும் (சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறம்) சியாம மென்றும் (கருப்பு நிறம்) பகுவர்ணக மென்றும் (அநேக நிறங்கள் கலந்த நிறமுள்ளது) இந்த வர்ணங்களுடையவும் சக்ரங்களுடையவும் முகங்களுடையவும் பேதத்தினலும் அநேகம் பெயர்களை உடைய சாளக்ராமங்கள் இருக்கின்றன.

மகா ச்வேதமான சாளக்கிராமத்திற்கு வாசுதேவம் என்று பெயர்; ச்வேதத்திற்கு ஹைரண்யகர்ப்ப மென்று பெயர்; ரக்தத்திற்கு பிரத்யும்னம் என்று பெயர்; அதிரக்தத்திற்கு அனிருத்தமென்றுபெயர்; நீலத்திற்கு வைஷ்ணவம் என்று பெயர். மகா நீலத்திற்கு வாமனம் என்று பெயர். கபிலத்திற்கு நரசிம்மம் என்று பெயர். சியாமத்திற்கு ஸ்ரீ ராமம் என்று பெயர்; பீதத்திற்கு லக்ஷ்மீ நாராயணம் என்றும் அநேக வர்ணத்திற்கு அநந்தமென்றும் முனிகள் சொல்லுவார்கள்; மகா சுவேதம் மோக்ஷத்தையும் சுவேதம் ஞானத்தையும் ரக்தம் ராஜ்யத்தையும் மகா ரக்தம் சக்ரவர்த்தி பதவியையும் நீலம் சம்பத்தையும் மகா நீலம் இந்திரன் முதலானவர்களுடைய சம்பத்தையும் பீதம் தங்கத்தையும் கபிலம் வைராக்யத்தையும் ச்யாமம் சரீரத்தினுடையவும் இந்திரியங்களுடையவும் புஷ்டியையும் பகுவர்ணம்

நினைக்கப்பட்ட எல்லா வஸ்துக்களையும் கொடுக்கக்கூடிய சாமர்த்தியமுள்ளதாம்.

எந்தச் சாளக்ராமம் ஸ்ரீ வத்ஸமென்கிற மச்சத்தோடும் அநேக பொட்டு வரிசைகளோடும் முகத்திலேயும் வாலிலேயும் நீண்டதாயும் இரண்டு சக்ரங்களோடேயாவது அல்லது ஒரு சக்கரத்தோடேயாவது கூடினதாயும் கருப்பாகவும் இருக்குமோ அந்தச் சாளக்கிராமம் **மாத்ஸ்ய மூர்த்தம்** (மீன்) என்று சொல்லப்படும்; எந்தச் சாளக்கிராமம் உருண்டையாகவும் பிளந்த சக்கரங்களால் நிறைந்ததாகவும் ஸூக்ஷ்மமான முகமுடையதாயும் தங்கப் பொட்டுகளாலும் தாமரைப் பூ வரிசையாலும் நிறைந்து கறுப்பாகவும் இருக்கிறதோ அது **கூர்ம மூர்த்தம்** (ஆமை) என்று சொல்லப்படும்.

எந்தச் சாளக்கிராமமானது நீண்ட முகமுடையதாகவும் பூ மண்டலத்தால் சூழப்பட்டதாகவும் இருக்கிறதோ இரண்டு சக்கிரங்களோடு கூடினதாகவும் கறுப்பாகவு மிருக்கிறதோ அதை **வராக மூர்த்த** மென்று (பன்றி) யோகிகள் சொல்லுவார்கள். எந்தச் சாளக்கிராமம் இடது பக்கத்தில் சக்ரத்தோடும் பொட்டுகளோடும் கீழ் சொல்லப்பட்ட சில லக்ஷணங்களோடும் கறுப்பு நிறத்தோடும் கூடியிருக்கிறதோ அந்த ஸாளக்கிராமம் **லக்ஷ்மீ நரசிம்ம மூர்த்தம்** என்றும் எல்லாக் குடும்பிகளுக்குங்கூடப் பூஜைக்கு யோக்கியமானதாயும் பக்தி முக்திகளையும் கொடுக்கக் கூடியதாயுமிருக்கும்.

எந்தச் சாளக்கிராமம் நீண்ட முகத்தோடும் பெரிய சக்ரத்தோடும் பெரிய வயிற்றோடும் கோரைப் பல்லோடும் கூடியிருக்கிறதோ, தேன் நிறமுள்ளதாயு மிருக்கிறதோ அது **நரசிம்ம மூர்த்தம்** என்றும் பிரம்மசாரிக்

கும் ஸந்யாசிகளுக்குந்தான் யோக்யமென்றும் பெரியோர்களுடைய அபிப்பிராயம்.

எந்தச் சாளக்கிராமம் இந்திர நீல ரத்னத்திற்குச் சமானமாயிருக்கிறதோ பொட்டு வரிசைகளோடும் குறுகினதான அளவோடு உருண்டையாயுமுள்ள சக்ரத்தோடும் கோடுவரிசைகளோடும் கூடினதா யிருக்கிறதோ அந்தச் சாளக்கிராமம் **வாமன** மூர்த்தம் என்று சொல்லப்படும். சக்ரத்தின் மேலேயும் கீழேயும் பிரகாசிக்கிற தயிர்ப்பொட்டோடும் முன் சொன்ன சில லக்ஷணங்களோடும் கூடியிருக்கிறதான சாளக்கிராமம் **ததிவாமன** மூர்த்தம் என்று சொல்லப்படும்.

எந்தச் சாளக்கிராமம் தோளில் கோடாரி கோடோடும் உயர்ந்ததாகவும் அருகம் புல் போலக் கறுப்பு நிறமுள்ளதாகவும் நடுவில் சக்ரத்தோடும் கூடியிருக்கிறதோ; அந்தச் சாளக்கிராமம் **பரசுராம** மூர்த்த மென்று சொல்லப்படும். எந்தச் சாளக்கிராமம் வில் பாணம் இவைகளுடைய கோடுகளோடும் பெருத்தும் நீண்டும் பொட்டுகளோடும் கூடினதாகவும் நடுவில் சக்ரத்தோடும் அநேக துவாரங்களோடும் கறுப்பாயுமிருக்கிறதோ அந்தச் சாளக்கிராமம் **ஸ்ரீ ராமச்சந்திர** மூர்த்தம் என்று சொல்லப்படும்.

கலப்பை உலக்கைகளுடைய கோடுகளோடும் வெளுப்பு நிறத்தோடும் வனமாலேயோடும் தேன்பொட்டுகளோடும் அழகுள்ளதாயு மிருக்கிற சாளக்கிராமம் **பலராம** மூர்த்த மென்று சொல்லப்படும். எந்தச் சாளக்கிராமம் சங்கு, சக்கரம், கதி, கத்தி, வில் இவைகளுடைய கோடுகளோடும் வனமாலேயோடும் சிறியதாயும் கறுப்பு நிறமுள்ளதாயும் தாமரைப் பூக் கோட்டோடு

கூடினதாயு மிருக்கிறதோ அது கிருஷ்ண மூர்த்த மென்று சொல்லப்படும். எந்தச் சாளக்கிராமம் முன் சொல்லப்பட்ட லக்ஷணங்களோடும் மழமழப்புள்ளதாக வும் கறுத்ததாகவும் விசாலமான வயிற்றை உடைய தாகவும் இருக்கிறதோ அதை ஸ்ரீ கோபால மூர்த்தமென் றும் புக்தி முக்திகளைக் கொடுக்கக் கூடியதென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். எந்தச் சாளக்கிரா மம் முன் சொன்ன அடையாளங்களோடும் துவார முள்ள புல்லாங் குழலோடும் கறுத்த நிறமுள்ளதாயு மிருக்கிறதோ அந்தச் சாளக்கிராமம் வேணுகோபால மூர்த்தமென்று சொல்லப்படும். எந்த ஸாளக்கிராமம் முன் சொன்ன லக்ஷணங்களோடும் சிவப்பு கோடிட்ட முகத்தோடும் கறுத்ததாகவும் இருக்கிறதோ அது ஸந்தான கோபால மூர்த்தம்; அஃது எல்லோருக்கும் கிடைக்காது; சீக்ரம் எல்லா எண்ணங்களையும் கை கூடும்படி செய்யக் கூடியது; புத்ரசம்பத்தையும் விசே ஷித்துச் செய்யக்கூடியது; அந்தச் சாளக்கிராமம் ததி கோபால மூர்த்தம் என்றும் சொல்லப்படும்; பசுக்களை யும் புத்திரர்களையும் விருத்தியடையும்படி செய்யும். எந் தச் சாளக்கிராமம் இந்திர நீல ரத்தினத்திற்குச் சமான மானதாக நீண்டதாகவும் வனமாலையில் அலங்கரிக்கப் பட்டதாகவும், முகத்தில் பெருத்ததாகவும், மாவட்டியை அடையாளமாக உடையதாகவும் இருக்கிறதோ அது கல்கி மூர்த்தம் என்று பிரசித்தம்.

எந்தச் சாளக்கிராமம் மாவெட்டிபோல் முக முடையதாகவும் நீண்ட பொட்டுகள் கோடுகளோடு கூடினதாகவும் பழுத்த நாவல் பழத்திற்குச் சமான மான நிறம் அளவுகளை உடையதாயு மிருக்கிறதோ அந்

தச் சாளக்கிராமத்தை ஹயக்ரீவ மூர்த்த மென்றறியும்; எந்தச் சாளக்கிராமமானது செம்பருத்திப் பூவுக்குச் சமானமானதாகவும் வனமாலையால் அலங்கரிக்கப்பட்டதாகவும் வில் பாணம் முதலியவைகளுடைய கோடுகளோடு கூடியதாகவு மிருக்கிறதோ, அந்தச் சாளக்கிராமத்தை எல்லோர்களுடைய இஷ்டத்தையும் நிறைவேற்றுகிறதான பிரத்தியும்ந மூர்த்த மென்றறிய வேண்டும்.

எந்தச் சாளக்ராமம் முன் சொன்ன சில லக்ஷணங்களமைந்ததாகவும் ஸூக்ஷ்மமான சக்கிரத்தோடும் முகத்தில் பொட்டோடும் தங்கக்கோடு முதலானவைகளோடும் கூடினதோ அந்தச் சாளக்ராமம் புதிதான பசும் புல்லுக்குச் சமானமாகவும் வனமாலையோடும் கொஞ்சம் சமமில்லாத சக்கரத்தோடும் லக்ஷ்மீகரமாகவும் இருக்கிறதோ, அந்தச் சாளக்ராமத்தை ஸ்ரீதர மூர்த்த மென்று சொல்லுவார்கள். எந்தச் சாளக்ராமம் நடுப் பாகத்தில் சக்ரத்தோடும் தாமரைப் பூவோடும் நாவல் பழத்திற்குச் சமானமாயு மிருக்கிறதோ அது தேவர்களாலும் பூஜிக்கப்படுகிற பத்மநாப மூர்த்த மென்று அறியப்படும்.

புதிதான அறுகம் புல்லுக்குச் சமானமான கறுப்பு நிறமுள்ளதாகவும் வனமாலையோடும் ஸ்ரீ வத்ஸ சங்க சக்ரங்களோடும் சார்ங்கம் கதை கத்திகளோடும் சமமாயும் சூக்ஷ்மமாயுமான சக்ரத்தோடும் தாமரைப் பூ கொடிகளோடும் எப்போதும் குளிர்ந்ததாயு மிருக்கிறதோ, அந்தச் சாளக்ராமம் அநந்த மூர்த்த மென்று சொல்லப்படும். ஒரு முகத்தோடும் நான்கு சக்கரங்களோடும் உருண்டையாகவும் கறுப்பு நிறமுள்ளதாயும்

வஜ்ரம் த்வஜம் மாவட்டிகளோடும் மூன்று பொட்டுகளோடும் கோடுவரிசைகளோடும் மிகவும் பருமனில்லாததாகவும் மிகவும் சிறியதாக இல்லாமலுமிருக்கும் சாளக்ராமத்தை லக்ஷ்மீ நாராயணமூர்த்தமென்று சொல்வார்கள்.

எந்தச் சாளக்ராமம் இரண்டு சக்ரங்களோடும், ஆதிசேஷ சர்பசரீரத்தால் சுற்றப்பட்டதாயும், நாரத முனிவருக்கு இஷ்டபலத்தையும் கொடுத்ததோ அந்தச் சாளக்ராமம் நாராயணமூர்த்தமென்று சொல்லப்படும். எந்தச் சாளக்ராமம் சமமில்லாத சக்ரத்தோடும் நீலரத்னத்திற்குச் சமானமாயுமிருக்கிறதோ அதை ஹ்ருஷிகேச மூர்த்தமென்றும் சுத்த ஞானத்தைக் கொடுக்கக் கூடியதென்றும் சொல்லுவார்கள்.

ஒரு கோட்டினால் பிரகாசிக்கிற நடுப்பாகத்தை உடைய நீல மேகத்திற்குச் சமமான நிறத்தோடும் வனமாலையால் சோபையுள்ள கழுத்தோடும் இருக்குமோ அதைத் தாமோதர மூர்த்தம் என்று சொல்வார்கள். எந்தச் சாளக்ராமம் அநேக நிறங்களோடும் சர்ப்பத்தின் சுற்றுதலோடும் பூஜகர்களுக்கு இஷ்டத்தையுங் கொடுக்குமோ, அந்தச் சாளக்ராமத்தை அநந்த மூர்த்தமென்று அறியவேண்டும். நீண்டதாயும் தலையில் சக்ரத்தோடும் வஜ்ரரேகையோடும் வேறு இடத்தில் இரண்டு சக்கரங்களோடும் வனமாலையோடும் அழகு பொருந்தியதாயுமிருக்கிறதோ, அந்தச் சாளக்ராமம் உபேந்திர மூர்த்தமென்று சொல்லப்படும்.

எந்தச் சாளக்ராமம் சங்கத்தோடும் தாமரைப் பூவரிசைகளோடும் இரண்டு சக்ரங்களோடும் கறுத்தும் பெருத்தும் குளிர்ந்ததும் ஞானத்தைக் கொடுக்கக் கூடிய

தாயுமிருக்கிறதோ அது ஜநார்த்தன மூர்த்தம் என்றறிய வேண்டும்; சங்கத்தோடும் சக்கரத்தோடும் கதையோடும் சார்ங்கத்தோடும் கத்தியோடும் சந்திரனுக்குச் சமமான வெண்ணிறத்தோடும் நாபியில் சக்ரத்தோடும், பார்ப்பதற்கு அழகாயுமிருக்கிறதோ, அந்தச் சாளக்ராமத்தை வாஸுதேவ மூர்த்த மென்று செல்லுவார்.

எந்தச்சாளக்ராமம் நீண்டும் அதிக காந்தியோடும் சங்கம் முதலான ஐந்து ஆயுதரேகைகளோடும் வனமாலையோடும் கூடியதோ அதைத் திரிவிக்ரம மூர்த்த மென்று இயம்புவர்; கறுத்தும் பெருத்தும் சந்திரனுக்குச் சமமான வனமாலை முதலியவைகளோடும் சமசங்ரத்தோடும் மழமழப்புள்ளதாகவு மிருக்கிறதான சாளக்ராமம் அச்யுத மூர்த்த மென்று பிரசித்தம்.

எந்தச் சாளக்ராமம் சக்கரத்தின் நான்கு பக்கங்களிலும் நடுவிலும் பெருத்த கோட்டோடு சேர்ந்து இருக்குமோ, எங்கும் கிடைக்காததும் எல்லா எண்ணங்களையும் கொடுக்குமோ, அந்தச் சாளக்ராமத்தைச் சிவநாப மூர்த்தம் என்று சொல்வார்கள். துவாரமில்லாததாகவும் கறுத்ததாகவும் குளிர்ந்ததாகவும் தங்கத்தை உள்ளே உடையதாகவும் இருக்கும் சாளக்ராமத்தை ஹிரண்யகர்ப்ப மூர்த்தம் என்று சொல்வார்கள். முகத்தில் இரண்டு சக்ரங்களோடு கூடின சாளக்ராமத்தை மதுசூதன மூர்த்தம் என்பார்கள்.

எந்தச் சாளக்ராமம் உருண்டையாயும் ஒரு சக்ரத்தோடும் இருக்கிறதோ அந்த ஸாளக்ராமம் சுதர்சன மூர்த்தம் என்பார்கள். இவ்விடம் சொல்லப்படாத லக்ஷணங்கள் பொருந்திய அநேக மூர்த்தங்களும் இருக்கின்றன. ஹே, சௌநகரே! அந்த மூர்த்தங்களு

டைய பெயர்களையும் ஸ்வரூபங்களையும் லக்ஷணங்களால் சொல்வதற்கு ஆதிசேஷனுங்கூட முடியாதவன். நான் உமக்குச் சுருக்கமாகச் சில மூர்த்தங்களைச் சொன்னேன்; இந்தச் சாளக்ராம வைபவத்தைப் பிரம்மா நாரத முனிவருக்குச் சொன்னார். அவர் என் குருவான வேத வியாச முனிவருக்குச் சொன்னார். அவரும் எனக்குபதேசித்தருளினார்; நான் உமக்கு உபதேசித்தேன்; இந்தச் சாளக்ராம மூர்த்தங்களுடைய லக்ஷணங்களை நன்றாக அறிந்த புத்திமானான ஹநுமானும் துரோண பர்வதத்தைக் கொண்டு வைத்துவிட்டு வரும்வழியில் நரசிம்ம லக்ஷண மமைந்த ஸ்ரீ சைலமலையை (நாமக்கல் மலையை) எடுத்துக்கொண்டு வரும் பொழுது தாகத்தினால் தீர்த்த பானம் செய்ய எண்ணிக் கமலாலயக் கரையில் லக்ஷ்மீ தபோவனத்தில் வைத்துவிட்டுக் கமலாலயத் தீர்த்தத்தைக் குடித்துவிட்டு மறுபடியும் வந்து எடுக்க முடியாமல் திகைத்திருக்க இங்கேயே இருப்பதாகஹநுமானுக்கு நரசிம்ம சுவாமியும் அநுக்ரஹம் செய்தார்.

ஹே, சௌநகரே! உம்முடைய கேள்விக்குத் தகுந்தபடி சொன்னேன். இதன் பிறகும் உம் மனதிற்குப் பிடித்த கேள்வியைக் கேட்கலாம் என்று சொல்லி ஸூதமுனிவர் சௌநகரை அநுக்ரகித்தார். எந்த மனிதன் கண்டகி நதியின் உற்பத்தி சரித்ரத்தையும் மகா விஷ்ணுவின் வைபவத்தையும் மாத்ஸ்யம் முதலான சாளக்ராம மூர்த்தங்களுடைய லக்ஷணங்களையும் பக்தி சிரத்தைகளோடு கேட்பானோ அவன் இங்கேயும் சௌக்யங்களை அனுபவித்துப் பரலோகத்திலும் சுவர்க்காதி லோக சௌக்யங்களையும் அனுபவிப்பான்.

ஏழாவது அத்தியாயம் முடிந்தது.

# எட்டாவது அத்தியாயம்

சௌனகர் சொல்லுகிறார்: அதிக பாக்யசாலியாயும் எல்லா சாஸ்திரங்களின் உண்மையையுமறிந்தவராயுமான ஹே, ஸூத முனிவரே! திருப்பாற்கடலில் சயனம் செய்கிற ஸ்ரீ ரங்கநாதனுடைய ஆவிர்ப்பாவத்தை விஸ்தாரமாக எனக்கு எடுத்துச் சொல்லவேண்டும். நீர் இதற்குமுன் ஹநுமான் பிரதக்ஷிணம் செய்ய உத்தேசித்து இருக்கும்பொழுது நாமக்கல் மலையின் கிழக்குப்பாகத்தில் பால் கடலில் சயனம் செய்துகொண்டும் ஆதிசேஷன் அல்லது கார்க்கோடகன் சரீரத்தைப் படுக்கையாகக்கொண்டும் பகவான் மகாவிஷ்ணு ஆவிர்பவித்தார் என்று பகவானுடைய சரித்திரமாகிற தேனை என் காதில் வர்ஷித்துத் திருப்திசெய்து வைத்தீரே; அந்தச் சரித்திரத்தை விரிவாக இப்பொழுது சொல்லும். நாஸ்திகனையும், முட்டாளையும், பாபியையும் தவிர எந்த மனிதனுக்குத்தான் பகவானுடைய கதாம்ருதத்தைப் பானம் செய்கிற விஷயத்தில் போதும் என்கிற திருப்தி ஏற்படும் என்று சௌநகர் கேட்க, ஸூத முனிவரும் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

"ஹே சௌநகரே, கேளும்! மிகவும் ஆச்சரியகரமான மகாவிஷ்ணுவின் சரித்திரத்தை எவனொருவன் மகா பாபியாயிருந்தாலும் பகவானுடைய கதையைச் சிரத்தா பக்திகளோடு கேட்பானே, அவனுடனே எல்லாப் பாபங்களையும் விலக்கித் தேவர்களாலும் பூஜிக்கப் படுவான். முன்னால் க்ருதயுகத்தில் சர்ப்பராஜாவான கார்க்கோடகனும் தாயாரான கத்ருவினுடைய சாபத்தில் நின்றும் விடுபட்டபோதிலும் தகப்பனாரின் சாபத்

திறாற் கெடுக்கப்பட்ட தன்னுடைய ஸ்வரூப காந்தியை உடையவனாக இருந்தான். தாயாரின் சாபமாவது சர்ப்பங்களின் தாயாகிய கத்ருவுக்கும் கருடன் தாயாராகிய விநதைக்கும் பால்கடலைக் கடையும்பொழுது உச்சைச்ரவஸ் என்கிற குதிரை உண்டாக அந்தக் குதிரையும் வெளுப்பு நிறமுள்ளது என்று பிரசித்தம். ஆகையால் விநதையை வேலைக்காரியாகச்செய்ய எண்ணி அந்தக் குதிரையின் வால் வெளுப்பா கறுப்பா என்று சொல்ல மாறியிருந்தால் இருவரும் ஒருவருக்கொருவருக்கு வேலைக்காரியாக இருக்கவேண்டுமென்று ஆணையிட்டுக்கொண்டார்கள். அப்பொழுது கத்ருவும் தன் பிள்ளைகளான சேஷன், வாசுகி முதலான சர்ப்பங்களைப் பார்த்து உங்களுக்குள் யாராவது ஒருவன் உச்சைச்ரவஸினுடைய வாலைச் சுற்றிக்கொண்டு கறுப்பு நிறமாகக் காட்டவேண்டும் என்று சொல்ல முதலில் எந்தச் சர்ப்பங்களும் சம்மதிக்கவில்லை.

உடனே கோபத்தால் கத்ரு "ஹே, சர்ப்பங்களே! நீங்கள் என் வார்த்தையை மீறினதால் ஒரு ராஜாவால் ஒரு யாகத்தில் கொல்லப்படுவீர்கள் என்று சபித்தாள். பிற்பாடு தக்ஷகன் என்கிற சர்ப்பம் பயந்து தான் அந்தக் குதிரையின் வாலைச் சுற்றிக்கொண்டு விநதையைக் கத்ருவுக்கு அடிமையாக்கிவிட்டான். தக்ஷகனும் தாயாரைப் பிரார்த்தித்து ஒரு மகரிஷியால் நல்ல சர்ப்பங்கள் எல்லாம் கொல்லப் படாமல் காப்பாற்றப்படுமென்கிற தாயாரான கத்துருவின் சாபவிமோசனத்தையும் பெற்றுக்கொண்டான். அந்தக் கத்ருவினுடைய சாபந்தான் கார்க்கோடகனுக்கும் ஏற்பட்டது. ஆனாலும் அந்தச் சாபத்திற்கு விமோசனம் ஆஸ்தீக மகரிஷியின்

அநுக்ரகத்தால் ஏற்பட்டபோதிலும் கார்க்கோடகன் துஷ்டனுக எல்லாருக்கும் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்ததனுல் தகப்பனுரான காசியப மகரிஷியால் ஹே கார்க்கோடக நீ காட்டுத்தீயினுல் பீடிக்கப்பட வேண்டுமென்று கார்க்கோடகன் சபிக்கப்பட்டான். பிற்பாடு கார்க்கோடகனுற் பிரார்த்திக்கப்பட்ட காச்யப மகரிஷியும் சந்தோஷமடைந்து பிரதிசாபமாக நீ நள சக்ரவர்த்தியாற் காட்டுத்தீயினின்றும் காப்பாற்றப்படு வாயாலும் பகவானை ஆராதித்துச் சாபத்தில்நின்றும் விலகுவாய் என்று கார்க்கோடகனை அனுக்கிரகித்தார்.

முன் கதையில் கத்துருவுக்கு அடிமையான வினதையால் தன் பிள்ளையான கருடனுல் சர்ப்பங்களுக்கு அமிருத கலசத்தைக் கொண்டு வரும்படி செய்து தன் அடிமைத்தனம் நிவர்த்திக்கப் பட்டது என்கிற சரித்திரம் பாரதத்தில் விரிவா யிருக்கிறது. ஆகையால் கார்க்கோடகனும் தகப்பனுரின் சாபத்தினுல் காட்டுத்தீயினுல் தகிக்கப்படும்பொழுது நளசக்ரவர்த்தியால் காப்பாற்றப்பட்டபோதிலும் அந்தத் தகப்பனுரின் சாபம் கொஞ்ச மிருந்ததால் அதனுல் ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்திசெய்வதன் பொருட்டுப் பால்கடலில் சயனம்செய்துகொண் டிருக்கிற சங்கு முதலிய ஆயுதங்களைத் தரித்த பகவான் மகா விஷ்ணுவை உத்தேசித்துத் தபஸ்செய்வதற்கு முயற்சிசெய்தான். பகவானை ஆராதித்தால் எல்லாத் துக்கங்களும் விலகிவிடுமென்று உறுதிகொண்டு ஸ்ரீ லக்ஷ்மியின் தபோவனத்தில் கமலாலய தீர்த்தக்கரையில் நியமத்தோடும் உயர்ந்த கைகளோடும் வேறு பற்றற்றவனுகவும் இந்திரியங்களை அடக்கியும் காற்றையே சாப்பிட்டுக்கொண்டும் ஐந்து அக்னி

களின் நடுவில் இருந்தும் ஊசிநுனியால் கால்களை வைத்துக்கொண்டும் கடுமையாகக் கார்கோடகன் அநேக ஆயிர வருஷங்கள் தபஸ் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது கருணைக்கடலாகிய பகவான் மகாவிஷ்ணுவும் அந்தக் கார்கோடகனுக் கெதிரில் பிரசன்னரானார்.

கார்க்கோடகன் எந்தத் தேவனைச் சந்தோஷிப்பதற்காகக் கண்முதலான இந்திரியங்களையும் மனதையும் அடக்கிக்கொண்டு யோகபலத்தினால் ஹ்ருதயத்தில் த்யானம் செய்தானோ, காந்திக் குவியலாயும் ஒலிகளாற் பார்க்கிறவர்களுடைய கண்களைக் கவருகிறவராயும் ஹ்ருதயத்தை விட்டு விட்டு வெளியில் எதிரில் வந்தவராயுமான அந்தப் பகவானைப் பார்த்து உடனே பரபரப்போடு எழுந்திருந்து பக்தி சிரத்தைகளோடு அநேக நமஸ்காரங்களையும் பிரதக்ஷிணங்களையும் செய்து காட்டில் கிடைக்கக்கூடிய இலை, காய், பழம், பூ முதலியவைகளால் பூஜித்தும் நிவேதனம் செய்தும் கார்க்கோடகன் ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். ஹே, தேவரே! எல்லா லோகங்களுக்கும் ஆதி பிதாவான உமக்கு நமஸ்காரம்; ஆச்சரியகரமான பராக்ரமமுள்ள உமக்கு நமஸ்காரம்; சூர்ய சந்திரர்களைக் கண்களாக உடைய தேவதேவரின் பொருட்டு நமஸ்காரம்; நீர்தான் ஸ்ருஷ்டி காலத்தில் பிரம்மாவாகவும், காப்பாற்றுங் காலத்தில் மகாவிஷ்ணுவாகவும், அழிக்குங் காலத்தில் ருத்ரராகவும் தேவேந்திரனாகவும் வாயுவாகவும் அக்னியாகவும் வருணனாகவும் குபேரனாகவும் இருக்கிறீர்; "ஹே, தாமரைக் கண்ணா! பக்தர்களைக் காக்கும் அருள் குவியலே! தீன பந்துவே! குற்றங்களை மன்னித்து என்னைக் காப்பாற்று மென்று இவ்விதமாகக் கார்க்கோடகனால் ஸ்தோத்ரம்

செய்யப்பட்ட பத்மனுபனும் தயையோடு புன்சிரிப்புள்ள முகத்துடன் சொல்ல ஆரம்பித்தார்.

"ஹே, சர்ப்பராஜனே! உன் நன்னடத்தையாலும் உன் தபஸ்ஸாலும் சந்தோஷமடைந்த நான் உன் தபஸ்ஸிற்கு யோக்யமான பலத்தைக் கொடுக்கவே இங்கு வந்தேன். நீ வேண்டிய வரத்தைக் கேட்கலாம்; நான் சந்தோஷத்தோடு கொடுக்கிறேன் என் வார்த்தை பொய்யாக இருக்கமாட்டாது" என்று பகவானுல் ப்ரீதியோடு சொல்லப்பட்ட கார்க்கோடகனும் பக்தியால் வணங்கித் தலையில் கைகூப்பிக்கொண்டு விக்ஞாபனம் செய்ய ஆரம்பித்தான்; "ஹே, பகவானே! ஸர்வக்ஞரே! எல்லாருடைய எண்ணங்களையும் அறிந்து வரம் கொடுக்கக்கூடியவரே! தாங்கள் எல்லாம் தெரிந்தவர்களாயிருந்தும் என்னைக் கேட்பதனுல் சொல்லுகிறேன். நீர் என் விஷயம் சந்தோஷமடைந்தால் எனக்கும் எல்லா லோகங்களுக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிற இந்த வரத்தைப் பக்தனும் துக்கத்தை அடைந்தவனுமான எனக்குக் கொடுக்கவேண்டும். நீர் எப்படி சுவேதத்வீபத்தில் பால் கடல் நடுவில் ஆதிசேஷசயனத்தில் சயனம்செய்து கொண்டு பக்தர்களை அநுக்ரகிக்கிறீரோ, அப்படியே இங்கேயும் ஆதிசேஷ சயனத்திலேயாவது என் சரீரத்திலேயாவது சயனம் செய்துகொண்டு, என்னையும் பக்தர்களையும் அநுக்ரகிக்கப் பிரார்த்திக்கிறேன். இந்த மிகவும் சிரேஷ்டமான வரம்தான் என்னுல் வெகு நாளாக இச்சிக்கப்பட்டது என்று கார்க்கோடகன் பிரார்த்திக்கப் பகவானும் அப்படியே செய்கிறேன் என்பதாக வரத்தைக் கொடுத்துவிட்டு மறுபடியும் உண்மையாக வேறு வார்த்தையையும் சொல்ல ஆரம்பித்தார்.

"ஹே, சர்ப்ப ராஜ கார்க்கோடக! வரும் திரேதா யுகத்தில் நான் ராமச்சந்திரமூர்த்தியாக அவதரிக்கப் போகிறேன். அப்பொழுது வாயுகுமாரனுன அதிக பலமுள்ள ஹனுமான் என் தாஸனுக உண்டாகப்போகிருன். அந்த ஹநுமானும் என் தம்பியைப் பிழைப்பதற்குச் சஞ்சீவினி என்கிற துரோண பர்வதத்தைக் கொண்டு வந்து மறுபடியும் அந்த இடத்தில் வைத்துவிட்டு வரும் வழியில் கண்டகீ நதியைக் காண்பார். அந்த நதியின் நடுவில் ஸாளக்ராம மலையில் வசிக்கிறவனும் ஹிரண்ய கசிபுவைக் கொன்று ப்ரகலாதனைக் காப்பாற்றி அவனுடைய பக்தியால் சந்தோஷமடைந்த நான் சாளக்ராம சிலை ரூபமாய் அவனால் பூஜிக்கப்பட்டும் வருவேன். ப்ரம்மாவும் என்னைப் பூஜித்து வருவார். அப்பேர்ப்பட்ட சாளக்கிராம சிலையைக் கையினுல் எடுத்துக்கொண்டு வந்து இந்த இடத்தில் வைக்கப்போகிருன். அப்பொழுது நான் அந்தச் சாளக்ராம சிலையில் ரங்கநாதஸ்வரூபியாய் ஆதிசேஷனிலாவது உன்பேரிலாவது சயனம் செய்கிற அர்ச்சாமூர்த்தியாக இருப்பேன். என் ஆக்ஞையினுலேயே அதன் சமீபத்தில் பால்கடல் தீர்த்தமும் உண்டாகப்போகிறது. சுவேதத்வீபத்தில் எப்படி சேஷ சயனத்தில் ஸர்வலக்ஷண ஸம்பன்னனுக இருப்பேனே அப்படிப்போலவே இந்த உயர்ந்த தாழ்வரைப் பாகத்தில் சேஷசாயியாகவோ கார்க்கோடகசாயியாகவோ இருக்கப்போகிறேன். அப்பொழுது நீயும் எல்லார்களும் என்னைத் தர்சித்து ஜன்மஸாபல்யத்தை அடைவீர்கள். எந்தப் பாபிகளான ஜனங்கள்கூட இந்த இடத்தில் கிழக்கு முகமாகச் சேஷசாயியான (கார்க்கோடசாயியான) என்னை இந்த உன் தபோவனத்தில் தர்சிப்பார்களோ

நமஸ்கரிப்பார்களோ பூஜிப்பார்களோ அவர்கள் மிகவும் பரிசுத்தர்களாகி என் சாயுஜ்யத்தை அடைவார்கள்.

எவர்கள் என்னை இவ்விதமாகத் திருப்பாற் கடலில் வஸிக்கிறவராகவும் "எப்பொழுதும் அழிவில்லாதவராயும் தன் ஸ்தானத்தில் நின்றும் நழுவாதவராயுமான பகவானே! ரங்கநாதரே" என்று த்ரிகாலங்களிலும் சொல்லுவார்களோ அவர்களுக்கு மறுபிறப்பே கிடையாது; இந்தவிதமாகப் பகவான் கார்க்கோடகனைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் கார்க்கோடகன் மனதிலேயே புகுந்துவிட்டார். கார்க்கோடகனும் பகவானுடைய வார்த்தையை நம்பி எவர்களாலேயும் அறியப்படாமல் பகவான் எல்லோர்களுடைய மனதிலும் அந்தர்யாமியாக இருந்து கார்யங்களைச் செய்விக்கிறவராதலால் அவர் வரத்தை மனதில் தியானம் செய்து கொண்டு இருக்கப் பகவான் ஸ்ரீ மகாவிஷ்ணுவும் கிருதயுகம் போய்த் திரேதாயுகம் வந்தசமயத்தில் லோகங்களை எல்லாம் அழும்படிசெய்கிற ராவணனாலே லோகங்கள் பீடிக்கப்படும்பொழுது பிரம்மா முதலான எல்லாத் தேவர்களாலேயும் பிரார்த்திக்கப்பட்டவராக அந்த ராவணனைக் கொன்று லோகங்களுக்கு நன்மை செய்வதற்கு உண்டாகாதவரா யிருந்தும் ரகுவம்சத்தில் தசரதசக்ரவர்த்தி திருமகனாராய் அவதரித்தார். அவருடைய தூதரான ஹநுமானும் அவருடைய கார்யநிமித்தம் போய்த் திரும்பும் வழியிற் சாளக்ராம சிலா ரூபியான பகவானை எடுத்துக்கொண்டு வந்து கார்க்கோடகன் என்கிற நாகம் தபஸ் செய்துகொண்டிருக்கிற இடத்தில் வைத்து அதிக பலமிருந்தும் மறுபடியும் அந்தச் சாளக்ராம சிலையை அசைக்கக்கூட முடியாத நிலைமையில் இருந்து எடுப்ப

தற்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் ஹநுமானைப் பார்த்துப் பகவானும் இந்த இடத்திலேதான் இந்தச் சாளக்ராமகிரியிலே இருக்கவேண்டுமென்று ஆஞ்ஞாபிக்க அந்த ஹநுமானும் மேற்கு முகமாயிருக்கிற ஸ்ரீ நரசிம்ம சுவாமியைத் தர்சித்துவிட்டு அந்த மலையைப் பிரதக்ஷிணம் செய்யக் கிழக்குப் பாகத்தை அடைய அந்த இடத்தில் அனந்த (கார்க்கோடக சயனத்தில்) ஸ்ரீ ரங்கநாதரைப் பார்த்து ஆச்சர்யமடைந்து பூஜித்து ராம கார்யத்திற்காகப் புறப்பட்டுப் போய்விட்டார்.

அதுவரையில் அங்கே காத்துக் கொண்டிருந்த கார்க்கோடகனும் எதிரிலிருக்கிற சாளக்ராம மலையைப் பார்த்து மேற்கு முகமாயிருக்கிற நரசிம்ம சுவாமியையும் ஸ்ரீ நாமகிரி அம்மனையும் தரிசித்துக் கிழக்குமுகமாயிருக்கிற ஸ்ரீ ரங்கநாதரையும் ஸ்ரீ ரங்கநாயகியையும் கார்க்கோடக (அநந்த) சாயியாகவும் இருக்கக் கண்டும் பால் கடலுக்குச் சமமான தீர்த்தத்தையும் ச்வேதத்வீபத்திற்குச் சமமான திட்டையும் கண்டு பயபக்திகளோடு பீதாம்பரதாரியாயும் திவ்யாபரணங்களால் பிரகாசிக்கிறவராயும் கோடி சூர்யர்களுக்குச் சமானமான காந்தியை உடையவராயும் கோடி மன்மதர்களுக்குச் சமானராயும் விலைமதிக்க முடியாத கிரீடத்தோடும் கருத்த கேசபாசங்களோடும் நெற்றியில் கஸ்தூரிப் பொட்டோடும் அழகுள்ள மூக்கோடும் புருவத்தோடும் முகத்தினால் சந்திரனையும் கண்களால் நீலோத்பல புஷ்பங்களையும் உதட்டினால் பவளத்தையும் பற்களால் குருந்தமொட்டுகளையும் கன்னங்களால் தங்கக்கண்ணாடியையும் ஜயிக்கிறவராயும் அழகில் உவமையே இல்லாத மூக்கோடும் புன்சிரிப்புள்ள முகத்தோடும் சங்கத்தையும் தோற்கடிக்கும் அழு

குள்ள கழுத்தோடும் சேஷ சரீரத்திற்குச் சமங்களான புஜங்களோடும் தாமரைப் பூக்களுக்குச் சமங்களான கைகளோடும் மிகவும் அகன்று பலத்துடன் கூடின மார்பில் பிரகாசிக்கிற கௌஸ்துப ரத்னத்தோடும் ஸ்ரீ வத்ஸத்தோடும் கூடினவராயும் லக்ஷ்மிதேவியோடு போட்டி போடுகிற வைஜயந்தி என்கிற வனமாலையோடு கூடினவாயும் யக்ஞோபவீதத்தாலும் வெண்பட்டு உத்தரீயத்தாலும் வெளுப்பு வர்ணமுள்ள மேகத்துடன் கலந்த கருப்பு வர்ணமுள்ள மேகத்திற்குச் சமானராயும் நாபி பங்கஜத்தில் உதித்த சதுர்முக பிரம்மாவினால் சேவிக்கப்பட்ட சரணகமலங்களை உடையவராயும் மாணிக்க ரத்னங்களால் இழைக்கப்பட்ட தங்க அரைஞாணால் சுற்றப்பட்ட இடுப்பை உடையவராயும் லக்ஷ்மீதேவியின் சரண கமலங்களாற் பிடிக்கப்பட்ட அவயவங்களை உடையவராயும் ரஜஸ் தமோ குணங்களில் நின்றும் உண்டான மதுகைடபாசுரர்களாற் பூஜிக்கப்பட்டு அவர்களுடைய நடுவை அடைந்தவராயும் சங்கம் சக்ரம் சார்ங்கம் கத்தி இவைகளோடு கூடினவராயும் பிருகு மகரிஷியாலும் மார்கண்டேய மகரிஷியாலும் வேறு அநேக மகரிஷிகளாலும் பிரம்மா முதலான அநேக தேவர்களாலும் சேவிக்கப்படுகிறவராயும் லோகமாதாவான ஸ்ரீ ரங்கநாயகியோடு கூடினவராயுமான ஸ்ரீ ரங்கநாயகரைத் தரிசித்து வணக்கத்தோடு நமஸ்கரித்துப் பூஜித்துப் பூஜித்து ஸ்தோத்ரமும் செய்து பகவானுடைய கிருபைக்குப் பாத்திரனாக அழிவில்லாமல் சிரஞ்சீவியா யிருக்கும் தன்மையையும் அடைந்து இப்பொழுது ஸேவித்துக்கொண்டிருக்கிறான். பகவானுடைய சேவை எப்பொழுதும் பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய தல்லவா? ஹே,

சௌனகரே கேளும். நீர் கேட்ட பகவானுடைய முன் சரித்திரத்தை முன்னால் சுருக்கமாகச் சொல்லி இப்போது விரிவாக சொன்னேன்.

இந்தக் கார்கோடக சரித்ரத்தை எவர்கள் கேட்பார்களோ சொல்லுவார்களோ அவர்கள் இவ்வுலகிலும் சௌக்ய மநுபவித்து அந்தத்திலும் ஸ்வர்கம் முதலான லோகங்களில் சௌக்யத்தை அடைவார்கள். இன்னம் சில விஷயங்களை ஹே, சௌநகரே, உமக்குச் சொல்லுகிறேன். அந்த க்ஷேத்ரத்தில் கார்க்கோடகன் என்கிற நாகம் தபஸ் செய்த தபோவன மாதலால் நாக வனமென்று ரிஷிகளால் சொல்லப்படும். தேவனும் பெயரால் சாளக்ராம மலைரூபியாகவே இருப்பதால் நாமக்கல் மலை யென்றும் சொல்வார்கள். ஸாளக்ராமத்திலேயே பகவான் வஸிப்பதால் சாளக்ராம மலை என்றும் சொல்லுவார்கள். லக்ஷ்மி தேவியை அநுக்ரகிப்பதற்கு லக்ஷ்மி தேவியினுடைய தபோ வனத்தில் ஸாளக்ராம சைலத்தில் பகவான் வசிப்பதால் ஸ்ரீ சைலமென்றும் யோகீச்வரர்கள் சொல்லுவார்கள்.

ஒவ்வொரு யுகத்திலும் அந்த மலைக்கு அநேக பெயர்கள் உண்டு. தபோவனங்களுக் குள்ளும் லக்ஷ்மீ தபோவனத்திற்கு ஸமானமான தபோவனம் கிடையாது. க்ஷேத்ரங்களுக்குள்ளும் அந்த க்ஷேத்திரத்திற்குச் சமமான க்ஷேத்ரம் கிடையாது. நாமக்கல் மலையிலிருக்கும் தீர்த்தங்களுக்குச் சமானமான வேறு தீர்த்தமும் உலகிலேயே அபூர்வம்.

அந்த மலைக்கு நாமகிரி என்று பெயர் வந்ததற்கும் வேறு காரணம் உண்டு. "நா" என்றால் வியாகரண சாஸ்திரபிரகாரம் பாபத்தின் நாசம் செய்யக்கூடியது;

"ம" என்றால் மங்களத்தைக் கொடுக்கக் கூடியது; "கி" என்றால் வாக்சம்பத்தைக் கொடுக்கக்கூடியது. "ரி" என்றால் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும் அர்த்தமாம். ஆகையால் நாமகிரி என்கிற பெயர் மலைக்குப் பொருத்தமாக அமைந்ததாம்.

கங்காநதியில் மூன்றுநாள்கள் முழுமையும் வசித்தால் கங்கை பாபத்தைப் போக்கடிப்பாளாம். யமுனையில் ஐந்து நாள்கள் வசித்தால்தான் யமுனா நதி பாபத்தைப் போக்கடிப்பாள். ஸாளக்ராமமலை என்கிற நாமக்கல் மலையிலும் காவேரியிலும் மகாபாபியும் உடனே சுத்தனாய் விடுவானாம். எவன் நாகவனம் என்கிற பெயரையாவது ஸ்ரீ சைலம் என்கிற பெயரையாவது ஸாளக்ராம மலை என்கிற பெயரையாவது நாமகிரி என்கிற பெயரையாவது பக்தியுடன் சொல்லுவானோ அவன் மறுபடியும் தாயாருடைய ஸ்தனத்தைக் குடிக்க மாட்டான் (அதாவது மறு பிறப்பே இருக்கமாட்டாது).

எவர்களாலும் வாக்கினாலும் மனத்தினாலும் வர்ணிக்க முடியாமலும் எண்ண முடியாமலும் அவ்வளவு மகிமை பொருந்திய ஸ்ரீ நாமகிரி அம்மனோடு கூடிய ஸ்ரீ நரசிம்மசுவாமியும் க்ஷீர சமுத்திரத்தில் சுவேதத்வீபத்தில் ஸாந்நித்யம் செய்கின்ற பகவானும் இந்த மலையில் ஸ்ரீ ரங்கநாயகீ சமேத ஸ்ரீ ரங்கநாத ரூபியாய் அவதரித்துப் பக்தர்களை அநுக்ரகித்துக்கொண் டிருப்பார்களேயானால் இந்த நாமக்கல் க்ஷேத்ரமகிமையை எவர்கள்தான் வர்ணித்துச் சொல்லமுடியும். இப்பேர்ப்பட்ட திவ்விய சரித்திரத்தைச் சாதுக்களின் விஷ்ணு பக்தர்களிடமே சொல்லவேண்டும். நாஸ்திகர்களுக்கும்

பக்தி இல்லாதவர்களுக்குச் சொல்லக்கூடாது. இது மிகவும் ரஹஸ்ய மந்திரம்போலுள்ளது. எப்போர்ப்பட்ட பாபங்களையும் போக்கக்கூடியது. மங்களகரமானது என்று ஸூதக முனிவரும் சௌநகருக்குச் சொன்னார்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிரம்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் எட்டாவது அத்தியாயம் முடிந்தது.

# ஒன்பதாவது அத்தியாயம்

மறுபடியும் சௌநக மகரிஷி நாமக்கல் மலையில் ஸ்ரீ நரசிம்மதீர்த்த மகாத்மியத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்க ஸூத முனிவரும் சொல்ல ஆரம்பித்தார். "ஹே சௌநகரே! நரசிம்ம தீர்த்த மகிமையைத் தெரிவிக்கிறதாயும் ஆச்சரியகரமாயும் கேட்டதனாலேயே மங்களங்களைக் கொடுக்கக்கூடியதுமான சரித்திரத்தைப் பக்தி சிரத்தைகளோடு கேளும் சொல்லுகிறேன். முன்னால் எல்லா லோகங்களினும் பிரசித்திபெற்ற விஷ்ணுபதி என்கிற கங்காநதி மகாவிஷ்ணுவின் காலில் நின்றும் உண்டாகிச் சதுர்முகப் பிரம்மாவின் கமண்டலத்தை ஆச்ரயித்துக் கொண்டிருந்தாள். பகீரத மகாராஜாவினுடைய தபஸினால் பிரீதியடைந்த பிரம்மாவினால் விடப்பட்டுப் பரமேஸ்வரருடைய தலையில் வந்திறங்கி அவருடைய அனுக்ரகத்தால் மறுபடியும் வெளிக்கிளம்பி ஜஹ்நு மகரிஷியின யாகசாலையை அடைந்து அவரால் சாப்பிடப்பட்டு விடப்பட்டதால் ஜாஹ்நவீ என்கிற பெயரை அடைந்து பகீரத மகாராஜனுடைய ரதத்தின் வழியைப் பின் தொடர்ந்துவந்து அவருடைய முன்னோர்களான ஸாகரர்களுக்குக் கபில மகரிஷியின் சாபத்தினாலுண்டான பாபத்தைப்போக்கி ஸ்வர்க்கம் முதலான புண்ணிய லோகங்களைக் கொடுத்து அநுக்ரகித்து மூன்று லோகங்களிலும் அதாவது ஸ்வர்கலோகத்தில் மந்தாகினி என்றும், பூலோகத்தில் பாகீரதி என்றும் பாதாள லோகத்தில் போகவதி என்றும் பெயருடன் பிரவகித்து அந்தந்த இடங்களிலும் ஸ்நானபான தர்சன பூஜைகளால் எல்லார்களுடைய பாபங்களையும் தானே கிரகித்

துக்கொண்டு அவர்களைப் பரிசுத்தர்களாக்கி அவர்களை ஸ்வர்கம் முதலான லோகங்களையும் அடையும்படி செய்து பரோபகாரம் செய்வதிலேயே ஆசையுடனிருந் தாளாம்.

அதனால் எல்லோருடைய பாபங்களும் தன்னிடம் வந்துசேர அந்தப் பாபங்களால் கறுப்பு வர்ணமுடைய சரீரத்தோடு கூடின கங்காநதியும் பிரம்மாவினுடைய சத்தியலோகத்தை அடைந்து வணக்கத்தோடு கூடினவ ளாகத் தன்னுடைய பாபங்களைப் போக்கித் தன்னையும் பரிசுத்தையாக செய்ய எண்ணி ஆச்சரியகரமாயும் அதிக விசாலமாயும் வெளுத்த அநேக கொடுமுடிகளால் விளங்குகிறதாயும் தன் காந்திகளால் பார்க்கிறவர்களு டைய கண்ணைக் கவருகிறதாயும் எப்பொழுதும் ஒன்று சேர்ந்த எல்லா வஸந்தம்முதலான ஆறு ருதுக்களின் புஷ்பங்களோடும் பழங்களோடும் கூடினவைகளாயும் ஆகாசத்தில் அளாவி நிற்கிறவைகளுமான புண்ணியங்க ளான மரங்களால் சூழப்பட்டதாயும் மரங்களில் படர்ந் தவைகளாயும் பூக்களோடும் பழங்களுடனும் இருக்கிற கொடிகளுடைய பூந்தேனையும் பழங்களையும் சாப்பிட்டு விட்டு மதுரமான ஸ்வரமுடைய குயில்கள் கிளிகள் வண்டுகள் முதலிய பக்ஷிகளுடைய மனதையும் காது களையும் இழுக்கிற சப்தங்களால் அழகுள்ளதாயும் எங் கும் பக்கங்களில் நடவாபி கிணறுகளினால் மனோக்ஞமா யும் யமுனை கோதாவரி முதலிய நதிகளாலும் சமுத்தி ரங்களாலும் வியாபிக்கப்பட்டதாயும் மாணிக்கம் புஷ்ப ராகம் ஸ்படிகம் மரகதபச்சை இந்திரநீலம் வைடூர்யம் வஜ்ரம் முத்து பவளம் என்கிற ஒன்பது ரத்னங்களால் இழைக்கப்பட்ட தூண்களை உடையதாயும் தங்கமய

மான சுவரை உடையதாயும் அநேக விமானங்களை உடையதாயும் ஆன பிரம்மலோகத்தை அடைந்தாள்;

மேலும் மேலே சொல்லப்பட்ட விமானங்களில் ஏறுவதற்குத் தங்கப்படிகளோடு கூடினதாயும் ரத்தனங்களால் செய்யப்பட்ட கொடுங்கைகளை உடையதாயும் சில இடங்களில் வைடூர்ய ரத்னங்களால் இழைக்கப் பட்டதாயும் சில இடங்களில் வைரக்கல்களால் இழைக் கப்பட்டதாயும் சில இடங்களில் புஷ்பராகங்களோடும் மரகத பச்சைகளோடும் முத்து சரங்களோடும் பவள சரங்களோடும் தங்க புஷ்ப மாலைகளோடும் அநேக ரத் தனங்களால் செய்யப்பட்ட அபூர்வமான சில்ப வேலைக ளோடும் ஆச்சரியகரங்களான மேல்கட்டுகளோடும் எங் கும் எழுதப்பட்ட கண்களைப் பரிக்கிற சித்திரங்களோ டும் கூடினதாயும் சில இடங்களில் கைலாச பர்வதத் திற்கும் சில இடங்களில் மந்தர பர்வதத்திற்கும் மகா மேரு மலைக்கும் விந்திய மலைக்கும் சமானமான அழகு உயர்வு முதலான குணங்களை உடையதாயும் அநேக ரத்ன கிருஹங்களோடு கூடினதாயும் ஸ்வஸ்திகம் என் றும் நந்தியாவர்த்தம், ஸர்வதோபத்ரம், விஷ்யந்தம் என்றுமாகிற அநேக ரசன விசேஷங்களுள்ள வெளி வாசல்களை உடையதாயும் சில இடங்களில் நூறு ஆயி ரம் லக்ஷம் கோடி தூண்களை உடைய மண்டபங்களால் நிறைந்ததாயும் சில இடங்களில் ஜிதேந்திரியர்களாயும் பிரம்மதியானம் செய்கிறவர்களாயும் யோகீசுவரர்களா யுமான பிரம்ம ஞானிகளால் நெருங்கினதாயும் அக்னிஷ் டோமம் அதிராத்ரம் அப்தோர்யாம் முதலான சாஸ்தி ரோக்தமான தக்ஷிணைகளோடும் மந்திரங்களோடும் கூடின யாகங்களைச் செய்தும் ரிஷிகளுடையவும் தேவர்

களுடையவும் பித்ருக்களுடையவும் கடனை வேதாப்யா
சத்தாலும் ஹோமங்களாலும் சத் புத்திரனை உண்டுபண்
ணினதாலும் தீர்க்கவர்களாயுமான பிரம்ம ரிஷிகளோடு
கூடினதாயும் கந்தமூல பலாதிகளைச் சாப்பிட்டுத் தபஸ்
செய்துகொண்டும் வேதாத்யயனம் செய்துகொண்டு
இருக்கிற ஆயிரக்கணக்கான வானப் பிரஸ்தர்களாலும்
கோபத்தை ஜயித்த நைஷ்டிக பிரம்மசாரிகளாலும் மகா
ஞானிகளான பகூதகம், குடீசகம், ஹம்சம், பரம ஹம்
சாச்ரமம் அதிவர்ணாச்ரமமுள்ள உயர்ந்த சந்நியாசிகளா
லும் அலங்கரிக்கப்பட்டதாயுமான பிரம்மாவினுடைய
சபையை அடைந்தாள்.

அப்பேர்ப்பட்ட பிரம்மசபையில் நடுவில் உயர்ந்த
தங்கரத்னங்களால் செய்யப்பட்ட ஆஸனத்தில் வீற்
றிருக்கிறவராயும் கோடி சூர்யர்களையும் பழிக்கிற திவ்ய
தேஜஸ்ஸோடும் பிரகாசிக்கிற கடுக்கன்களோடும் திவ்ய
வஸ்திரத்தோடும்கூடின கஸ்தூரிமுதலான திவ்விய
வாசனாத்ரவியங்களால் பூசப்பட்ட திவ்ய விக்ரகத்தோடு
சேர்ந்தவராயும் கிரீடம் முதலான ரத்னமயமான திவ்
யாபரணங்களால் சோபிதராயும் நான்கு கைகளோடு
கூடினவராயும் கிளியையும் தாமரைப் பூவையும் ஜபமாலை
யையும் புஸ்தகத்தையும் தரித்துக் கொண்ட நான்கு
கைகளோடும் கூடினவராயும் பக்தர்களுக்கு வேண்டிய
வரங்களைக் கொடுக்கிறவராயும் இஷ்டபத்னியுமான
சரஸ்வதிதேவியை எப்பொழுதும் சமீபத்தில் இருக்கும்
படி செய்கிறவராயும் ஜபமாலாதாரியாயும் எப்பொழு
தும் நான்கு முகங்களாலும் வேதங்களையே சொல்லு
கிறவராயும் கிருபாசமுத்ரராயும் தேவதேவராயும் ஸத்ய
லோக வாசியாயுமான பிரம்மதேவனைக் கங்காதேவி

தூரத்திலிருந்தே பார்த்து அநேககோடி நமஸ்காரம் செய்து வேகமாக அவருடைய கடைக்கண்ணால் பார்க்கப்பட்டவளாகவே சமீபத்திற்குவந்து ஸாஷ்டாங்கமாகவே அவருடைய கால்களில் விழுந்து நமஸ்கரித்து லோகசிருஷ்டி கர்த்தாவாயும் லோகநாதராயும் அழகுள்ள அவயவங்களை உடையவராயுமான பிரம்மதேவனை ஸ்தோத்ரம்செய்ய ஆரம்பித்தாள்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிர்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முடிந்தது.

# பத்தாவது அத்தியாயம்

கங்காதேவி ஸ்தோத்திரம் செய்கிறாள் : "ஹே! பிரம்மாவே, லோகங்களைச் சிருஷ்டிப்பதற்கு முன் மகாப் பிரளயத்தில் ஸர்க்குண ரூபியாகவும் சிருஷ்டிக்குப் பின்னால் சத்துவ ரஜ ஸ்தமோ குணங்களால் பிரம்ம விஷ்ணு ருத்ர ரூபங்களை உடையவராகவும் எப்பொழுதும் சச்சிதானந்த ரூபங்களால் லோகங்கள் முழுமையும் வியாபித்துக்கொண்டும் முதல்வராகவும் இருக்கிற உம் பொருட்டு அநேக நமஸ்காரம்."

கங்காதேவியும் இவ்விதம் பிரம்மாவை ஸ்தோத்திரம் செய்துவிட்டுச் சந்நியாசிகளாலும் வானப்பிரஸ்தர்களாலும் கிருகஸ்தர்களாலும்பிரம்மசாரிகளாலும் பர்த்தாவையே தெய்வமென்றும் குரு என்றும் உபாசிக்கிறவர்களாயும் ஸுமங்கலிகளாகவும் நன்னடக்கை உடையவர்களாயுமான பதிவிரதா ஸ்திரீகளாலும் ஜனங்களை மநுநீதி தவறாமல் பரிபாலனம் செய்தும் ராஜசூயம் முதலான யாகங்களைச் செய்தும் புண்ணியங்களைச் சம்பாதித்தவர்களாயும் த்வேஷமில்லாதவர்களாயும் தேவத்வத்தை அடைந்தவர்களாயுமான வைசியர்களாலும் இன்னும் அநேகவித கர்மானுஷ்டான மகிமையால் தேவலோகத்தில் தேவர்களாக மாறிவந்த இதர ஜாதியார்களாலேயும் நிறைந்த பிரம்மசபையைப் பார்த்துச் சந்தோஷத்தினால் உண்டான மயிர்க் கூச்சலோடு கூடினவளாகவும் ஆச்சரியத்தினால் மலர்ந்த கண்களை அடைந்தவளாகவும் அந்தச்சபையின் எல்லா மண்டலங்களால் அலங்கரிக்கப் பட்டதும் தேவேந்திரன் முதலான எட்டுத் திக்குப் பாலர்களால் பூஜிக்கப்பட்டதாயும் சப்தரிஷிகளால் சேவிக்கப்பட்டதாயும் ஸநக ஸநந்தன ஸநத்குமார ஸநத்ஸுஜாதர்களால் சேவிக்கப்பட்ட சமீப பாகத்தை உடை

யதாயும் பரிசுத்தமானதாயும் தங்கமயமானதாயுமான தர்ப்பாசனத்தால் பரப்பப்பட்டதாயுமான உயர்ந்த சிம்மாசனத்தில் பிரசன்னமுகராக வீற்றிருக்கிறவராயும் நான்கு திக்குகளிலும் நான்கு முகங்களோடு கூடினவராயும் ஜடாகிரீடங்களைத் தரிக்கிறவராயும் தேவர்களுக்கெல்லாம் முதல்வராயுமுள்ள பிரம்மதேவனைப் பார்த்து மறுபடியும் ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தாள்.

"ஹே சதுர்முகரே! நீரே சூர்யனாகவும் சந்திரனாகவும் வாயுதேவனாகவும் அக்னி தேவனாகவும் வருணனாகவும் லோகங்களுக்கெல்லாம் பயத்தை உண்டுபண்ணுகிற மிருத்யுவாகவும் குபேரனாகவும் இடிமின்னல்களோடு மழையைப் பெய்கிற மேகமாகவும் தேவேந்திரனாகவும் பதினொரு ருத்ரர்களுக்குள்ளும் சங்கரராகவும் முனி சிரேஷ்டர்களுக்குள் தர்மிஷ்டரான பிருகு மகரிஷியாகவும் ஸாங்கிய சாஸ்திரமறிந்தவர்களுக்குள் மிகவும் உத்தமரான கபிலமகரிஷியாயும், அத்திரிமகரிஷிக்கு அநுசூயாதேவியினிடத்தில் பிறந்த தத்தாத்ரேயராகவும் சத்தியவதிதேவியின் புத்ரராகவும் வேதங்களைப் பிரித்தவராயுமான வேதவியாச மகரிஷியாயும் ஞானிகளுக்குள் சிரேஷ்டரான ஸநத் குமாரராகவும் காப்பதற்கு ஸ்ரீ மகாவிஷ்ணுவாகவும் ஹோமம் செய்யத்தகுந்த அன்னம், சமித்து, நெய் முதலான ஹவ்யமாகவும் ஹோமம் செய்கிற எஜமானராயும் தபஸ்ஸாகவும் தபஸ்ஸின் பலனாகவும் பூமியாகவும் ஜலமாகவும் அக்னியாகவும் காற்றாகவும் ஆகாசமாகவும் பகலாகவும் ராத்திரியாகவும் வருஷமாகவும் ருதுவாகவும் பக்ஷமாகவும் மாசமாகவும் அயனமாகவும் கலையாகவும் காஷ்டமாகவும் க்ஷணமாகவும் முகூர்த்தகாலமாகவும் நடந்தகாலமாயும்

நடக்கிற காலமாயும் நடக்கப்போகிற காலமாயும் எல்லா மாகவும் இருக்கிறீர்.

சத்திய ரூபியான உமக்கு நமஸ்காரம். ஞான ரூபியான உமக்கு நமஸ்காரம். வாக்குகளாலும் வர்ணிக்க முடியாத ஹே, பிரம்மாவே உமக்கு நமஸ்காரம். என்னைக் காப்பாற்றவேண்டும் என்றும் சொல்லி அநேக விதங்களான ஸ்தோத்திரங்களைச் செய்து சந்தோஷப் படுத்தினாள். பிரம்மாவும் கங்கையைப்பார்த்து ஸ்தோத்திரத்தினால் பிரீதி அடைந்து முகத்தில் பிரகாசிக்கிற மந்தகாசத்துடன சொல்ல ஆரம்பித்தார்.

லோகங்களை எல்லாம் சுத்தி செய்வதில் ஆசை உடையவளாயும் பிரம்மஹத்யை, ஸ்வர்ணஸ்தேயம் மத்யபானம், குருதாரகமனம், தத்சம்யோகம் என்கிற பஞ்சமகாபாதகங்களைச் செய்தவர்களுடைய பாபங்களையும் விலக்கக்கூடியவளாயும் எந்த மகாவிஷ்ணுவின் நாம சங்கீர்த்தனத்தினாலேயே மகாபாபிகளும் புண்ணியசாலிகளாய்விடுவார்களோ அப்பேர்ப்பட்ட மகாவிஷ்ணுவின் பாதாரவிந்தங்களினின்றும் உண்டானவளாயும் பரமபாவனையாயுமான ஹே! கங்காதேவியே உனக்கும் பாபிகளுக்குப்போல ஏற்பட்ட பாபகாரியமான சரீரத்தின் கருப்பு நிறத்திற்குக் காரணத்தைச் சீக்கிரமாகச் சொல்ல வேண்டும்; அந்த உன் பாபத்தை விலக்குவதற்குக் காரணத்தை ஆலோசித்துச் சொல்லுகிறேன். நீ எப்பொழுதும் லோகநாதரான மகாவிஷ்ணுவினிடத்தில் பக்தி செய்கிறவளல்லவா என்று இவ்விதம் பிரீதியோடும் பிரம்மாவினால் கேட்கப்பட்ட கங்காநதியும் வணக்கத்தோடும் பிரார்த்தனையோடும் நன்றாகப் பேசுவதில்

சாமர்த்திய முடையவளாதலால் மதுரமான வாக்கினுல் பிரம்மாவை நமஸ்கரித்துச் சொல்ல ஆரம்பித்தாள்.

ஹே பிரம்மதேவரே! உம்மாலே என்னுடையவும் எல்லா ஜனங்களுடையவும் மனதின் அபிப்பிராயம் எல்லாம் அறியப்படுகிறதே ஆனலும் தாங்கள் நேட்பதைக்கொண்டு என் துக்கத்தை விலக்கவேண்டுகிறேன். ஹே தேவர்களுக்குள் உயர்ந்தவரே! நீரே ஜனங்களின் புண்ணிய பாபங்களுக்குத் தகுந்தபடி அநுக்ரகத்தையும் நிக்ரகத்தையும் செய்கிறீர். இந்தப் பூமியில் உண்டான மநுஷ்யர்களும் பசுக்களும் பக்ஷிகளும் சர்ப்பங்களும் மகா பாதகங்களால் நிறைந்திருந்தபோதிலும் என் கரையை அடைந்து வசித்தலாலேயும் என ஜலத்தில் ஸ்னனம் செய்து என் ஜலத்தைப் பானமும் செய்து என்னையும் பூஜித்து முன் அநேக ஜன்மாக்களின் சம்பாதிக்கப்பட்ட பாபங்களை என்னிடத்தில் வைத்துவிட்டுத் தேவர்களுக்குச் சமர்களாக ஸ்வர்க்கம் முதலான உயர்ந்த லோகங்களை அடைந்திருக்கிறார்கள்.

நான் லோகங்களுடைய பாபங்களை நாசம் செய்ததால் அந்தப் பாபங்களால் கறுப்பு நிறமுள்ளவளாகவே இருக்கிறேன். இந்தப் பாபங்களை விலக்கும்பொருட்டு எனக்கு உபாயத்தைச் சொல்ல வேண்டுமென்று கங்கா தேவியால் பிரார்த்திக்கப்பட்ட தேவநாதரான பிரம்மதேவரும் எல்லோர்களுக்கும் நன்மை செய்யும் விஷயத்தில் தாத்பரியமுடையவராதலால் மனதாலேயே கங்கையின் பாபத்தை விலக்க ஆலோசித்து மங்களகரமான வாக்கால் கங்காதேவியைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார். "ஹே பகீரத குமாரியே குழந்தையே எப்படி இந்தப்பாபத்தில் நின்றும் விடுபட்டுச் சௌக்யத்தை அடை

வாயோ அப்படி உனக்கு ஹிதமான வார்த்தையைச் சொல்லுகிறேன். ஹே கங்கையே! தெற்குத் திக்கில் பிரவகிக்கிறவளாயும் தன்னைப் பார்த்தமாத்திரத்தி லேயே எல்லார்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுப்பதில் சமர்த்தையாயும் மகா புண்ணியவதியாயும் லோகத்தி லிருக்கிற ஜனங்கள் ஜீவிக்கிறதற்கு சாதகையாயும் மூன்று லோகங்களுக்கும் இஷ்டையாயும் ஆன காவேரி என்கிற நதியானவள் மகாவிஷ்ணுவை நடுவில் தரிக்கிற ஸஹ்யம் என்கிற மலையினுடைய உச்சியில் நின்றும் பிரவகித்துத் தெற்குத் தேசத்திலிருக்கிற ஜனங்களு டைய புண்ணிய பலமோ என்று சொல்லக்கூடிய தன் ஸ்வரூபத்தோடு தெற்குத் திக்கில் போய்ச் சமுத்திரத் தில் சங்கமம் செய்கிறாள்.

அந்தக் காவேரியில் இரு கரைகளிலும் இருக்கிற மகா புண்ணியம் செய்த ஸ்தாவர ஜங்கமப் பிராணிகளா லும் அந்தக் காவேரியின் பிரபாவம் அறியப்படுகிறது. வேதசாஸ்திரங்களும் அந்தக் காவேரியினுடைய வைப வத்தை மிகவும் பெருமையோடு உத்கோஷிக்கின்றன. அந்தக் காவேரியின் இரு கரைகளும் சிவாலய விஷ்ணு ஆலயங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. அந்தக் காவே ரியின் ஜலத்தினால் நனைக்கப்பட்ட பூமி புண்ணிய பூமி என்று சொல்லப்படும். அந்தக் காவேரியின் உற்பத்தி ஸ்தானம் முதற்கொண்டு அநேக திவ்விய க்ஷேத்ரங்க ளிருக்கின்றன. அந்தக் காவேரியின் தலைபாகத்தில் ஸஹ்ய யாமலகம் என்ற தீர்த்தம் உண்டு; அந்த இடத்தில் தான் மகாவிஷ்ணுவே நெல்லிமரமாக உண்டாகி அத னடியில் தத்தாத்ரேய ரூபியாகவும் வசிக்கிறார். அந்தத் தீர்த்த வைபவத்தை அங்கே வசிக்கும் யோகிகள் அறி

வார்கள். அதற்கப்புறம் வஹ்நிபுஷ்கரணி என்ற தீர்த்தம் இருக்கிறது. அதில் ராமசந்திரரும் வந்து ஸ்நாநபாநாதிகளைச் செய்திருக்கிறார்.

அதற்கப்புறம் எல்லாப் பாபங்களையும் விலக்கக் கூடிய ஸத்தியபுஷ்கரிணீ என்கிற தீர்த்தம் இருக்கிறது. அதற்கப்புறம் காவேரியின் கரையில் தேவேந்திரனுடைய பாபங்களையும் விலக்கின சக்ரபுஷ்கரணி என்கிற தீர்த்தம் இருக்கிறது. அதற்குப் பிறகு தேவர்களுக்கு ஜயத்தைக் கொடுத்த தேவபுஷ்கரிணீ என்கிற தீர்த்தம் இருக்கிறது. அதற்கடுத்ததாகத் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளைக் கொடுக்கக்கூடிய தர்மபுஷ்கரணியும் பிற்பாடும் அநேக நதிகள் கூடுகிற இடத்தில் சிவ விஷ்ணு க்ஷேத்ரங்களிருப்பதால் சிவ விஷ்ணுக்களுடைய சாந்நித்யத்தினால் புண்ணியத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக்கூடிய அநேக தீர்த்தங்களிருக்கின்றன.

கனகை என்கிற நதியினுடைய சங்கமத்திலும் கபிலை, பவானி இவைகளுடைய சங்கம ஸ்தானங்களிலும் ஸ்நாநாதிகள் செய்தால் அதிக புண்ணியத்தைக் கொடுப்பாள். காவேரி நதி அது பரியந்தம் மேற்கு முகமாக வந்த காவேரியும் ஸ்கந்த மலையின் பக்கத்தில் வரும் பொழுது லோகங்களுக்கு நன்மை செய்யும் உத்தேசத்தால் வடக்கு முகமாகக் காவேரி வருகிற இடம் ஸ்நானதான ஜபாதிகளைச் செய்தவர்கள் விசேஷித்துப் புண்ணியங்களைக் கொடுப்பதால் மிகவும் உயர்ந்ததென்று மூனிகளால் சொல்லப்படுகிறது.

அதற்கப்புறம் அந்தக் காவேரி நதியானவள் சமுத்ரபரியந்தம் கிழக்கு முகமாகவே தான் பிரவகித்துக் கொண்டு போகிறாள். அப்படிக் காவேரிநதியானவள் பிர

வகித்துப் போகும்பொழுது ஸ்ரீ சைலம் என்கிற நரசிம்மசுவாமி வாசம் செய்கிற நாமக்கல் மலைக்குத் தெற்குத் திக்கில் ஒரு யோஜனை தூரத்தில் போய்க்கொண்டிருக்கிறாள். அந்தக் காவேரியின் பாகம் மிகவும் சிரேஷ்டமானது. ஸ்நானாதிகள் செய்தால் அதிக புண்யங்களைக் கொடுக்கக்கூடியது. அங்கே வசிக்கிற ஜனங்களின் எண்ணங்களை நிறைவேற்றி வைக்கக்கூடிய சாமர்த்தியத்தை உடையது. அதற்கப்புறம் காவேரியின் கரையில் யோகீசுவரர்களுக்கெல்லாம் சௌக்யத்தைக் கொடுக்கிறதாயும் ஸத்தியபாமைக்காகப் பாரிஜாத புஷ்பத்தைக் கொண்டுவரவேண்டும் என்கிற எண்ணங்கொண்ட ஸ்ரீ கிருஷ்ணபகவானால் பூஜிக்கப்பட்ட தேவனை உடையதாயும் புண்ணியமுமான பில்வாச்ரமம் என்கிற மோகனூர் என்கிற சிவக்ஷேத்ரம் இருக்கிறது. அந்த க்ஷேத்ரத்தில் சாந்நித்யமாயிருக்கும் பில்வோதகேச்வரர் என்கிற பரமசிவனுக்கு அவர் சமீபத்தில் இருக்கிற தீபத்தின் ஜ்வாலை காற்றே இல்லாத இடத்தில் இருப்பதுபோலவே அசையாமல் இருப்பதனால் அசலதீபேசர் என்கிற பெயரோடும் கூடினவர். அந்த க்ஷேத்ரம் மிகப் புண்ணிய க்ஷேத்ரமாம்.

அதற்குப் பிறகு ஆம்ராவதி என்கிற நதியினுடைய சங்கம க்ஷேத்திரம் மிகவும் ஸ்நானாதிகளால் புண்ணிய பலத்தை விருத்திசெய்யக் கூடியதாம். அதற்குப்பிறகும் வேறு நதிகள் சேருகிற இடத்திலும் சிவ விஷ்ணுக்களுடைய சாந்நித்திய விசேஷத்தால் காவேரி நதியானவள் பாபங்களைப் போக்கி மோக்ஷபரியந்தம் உயர்ந்த பலன்களைத் தரக்கூடியவள். அதற்குப் பிறகும் காவேரி ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை அடைந்து போகும்பொழுது

ஸ்ரீரங்கநாதருடைய சரணகமலங்களுடைய சாந்நித்ய வைபவத்தை வர்ணித்து எடுத்துச் சொல்ல யாரால் முடியும்; பின்னும் அந்தக் காவேரி நதியின் தீரத்திலிருக்கிற திருவானைக்காவலென்கிற ஐம்புகேஸ்வர க்ஷேத்ரத்தில் சாந்நித்யம் செய்கிற ஜம்புநாதருடையவும் மலைக்கோட்டையில் வாசம்செய்கிற மாத்ரு பூதேசர் என்கிற தாயுமான சுவாமியினுடைய வைபவத்தையும் அந்த இடங்களில் காவேரியின் வைபவத்தையும் சொல்ல ஆதிசேஷனாலும் முடியாது. அதற்கப்புறமும் காவேரி நதியானவள் பஞ்சநத க்ஷேத்திரத்தில் (திருவையாற்றில்) வசிக்கிற ஸ்ரீ பஞ்சாபகேஸ்வரசுவாமியினுடைய பக்கத்தில் பிரவகித்துக்கொண்டு போகிருள்.

அப்புறமும் கும்பகோண க்ஷேத்திரத்தில் போனுள். அந்தக் கும்பகோண க்ஷேத்திரம் எல்லா க்ஷேத்ரங்களையும்விட மிக உயர்ந்தது. சாரங்கபாணிஸ்வாமி கோவில் முதலிய விஷ்ணு ஆலயங்களும் கும்பேசுவரர் கோவில் முதலான அநேகசிவாலயங்களும் இருக்கின்றன. அந்த க்ஷேத்ரத்திலிருக்கிற அந்த உத்தம தேவர்களுடைய பாதபத்ம ஸந்தர்சனத்தினாலும் அந்த க்ஷேத்திரத்தில் பிரவகிக்கிற காவேரி நதியினுடைய விசேஷத்தாலும் அந்தக் காவேரியில் ஸ்நாநதான பூஜாவிசேஷங்களைச் செய்தால் அந்த க்ஷேத்திரத்தில் வசிக்கிற ஜனங்களுடைய பாபங்கள் உடனே நாசமடைகின்றன. ஆகலால் கும்பகோணத்திற்குச் சமானமான க்ஷேத்ரமும் அந்தக் கும்பகோணத்தில் போகிற காவேரிக்குச் சமானமான நதியும் வேறு இடங்களில் கிடையவே கிடையாது.

அப்படியே சிரேஷ்டையாயும் லோகபாவனியாயுமான காவேரியானவள் திருவிடைமருதூர் என்கிற

மத்யார்ஜுன க்ஷேத்ரத்தில் மகாலிங்கேச்வாருடைய சமீபத்தில் போகிருள். அந்த மத்தியார்ஜுன க்ஷேத்ரத்தில் மகாலிங்கேச்வாருடைய மகிமையாலும் காவேரியினுடைய பிரபாவத்தாலும் ஒருவன் ஏதாவது காரணத்தை முன்னிட்டு ஒரு நாள் முழுமையும் வசிப்பானேயானுல் அவனுக்கு மறுபடியும் பிறப்பு, இறப்பு என்கிற சம்சார பந்தம் கிடையாது.

அப்படியே மாயூர க்ஷேத்ரம் என்கிற மாயவரத்தில் கற்றிஞல் விருத்தி அடைகிற ஜலத்தை உடைய காவேரியினுடைய மகிமையைச் சதுர்முகப் பிரம்மாவும் கோடி வருஷங்களிலும் சொல்லமுடியாது. அப்புறமும் ஸ்ரீ வாஞ்சியம் என்கிற க்ஷேத்ரத்தின் சமீபத்தில் போய் வேதாரண்ய மென்கிற திருவெண்காடு எனகிற க்ஷேத்திரத்திலும் காவேரியானவள் அதிக புண்ணியங்களைக் கொடுப்பாள். பிறகு காவேரியானவள் சமுத்ர சங்கமத்தை அடைகிருள். அந்த இடத்தில் மஹா மகிமைபொருந்திய காவேரி அம்மனுக்கும் அதிக சக்தி பொருந்திய சமுத்ர ராஜனுக்கும் விவாக மகோத்ஸவம் மிகவும் அழகாயிருக்கும். காவேரி நதியினுடைய இரு கரைகளிலு மிருக்கிற சிவ விஷ்ணு க்ஷேத்ரங்களுடைய வைபவம் அந்தந்த ஸ்தல புராணங்களில் பிரசித்தி பெற்றிருக்கிறது. அந்த நதியின் கரைகளில் சொல்லப்படாத அதிக மகிமை பொருந்திய க்ஷேத்ரங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளைச் சொல்ல ஆரம்பித்தால் என்னுலும் சொல்லமுடியாது.

இந்த விதம் இந்தக் காவேரி நதியும் மகா புண்ணிய ஜலமுடையவள். ஹே கங்கையே! நீயும் லோகங்களின் நன்மையின் பொருட்டு அவர்களுடைய பாபங்

களைத் தரிக்கிறாய். லோகங்களுக்கு உபகாரம் செய்கிற உத்தமிகளுக்கு ஒருகுறைவும் வராது. ஹே கங்கையே! நீ சீக்கிரமாக காவேரிநதிக்குப் போய்த் தலைமுதல் சமுத்ர பர்யந்த மிருக்கிற காவேரி தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்வதோடு எப்பொழுது சூரியன் துலாராசியில் பிரவேசிப்பானோ அந்த ஐப்பசி மாதம் முழுமையும் நீ மாயூர க்ஷேத்ரத்தில் பிரவகிக்கிற காவேரி நதியில் சிரத்தா பக்திகளோடு ஸ்நாநம் செய்வாயாகில் நீ உன்னுடைய பாபங்களை எல்லாம் விலக்கிக்கொண்டு முன்போலப் பரிசுத்தை ஆகுவாய் என்று பிரம்மதேவனால் பிரீதியோடு சொல்லப்பட்ட அந்தக் கங்கையும் பிரம்மாவை நமஸ்கரித்து விட்டுப் பூமியை அடைந்து மற்றக் காவேரி தீர்த்தங்களில் மூன்று நாள்கள் ஸ்நாநம் செய்து ஐப்பசி மாதத்தில் மாயூர க்ஷேத்ரத்தில் ஸ்நாநம் செய்து தானம், ஜபம், விரதம் முதலானவைகளையும் செய்து தன் பாபங்களைப் போக்கடித்துச் சுத்தையாகி, காவேரி நதியையும் நமஸ்கரித்துத் தன் இடத்தைஅடைந்தாள்.

ஹே சௌநகரே கேளும்: இப்படி கங்கா நதியின் பாபங்களைக் கிரகித்துக் கொண்ட காவேரி நதியும் இந்தப் பாவங்களைப் போக்கடிப்பதற்கு அநேக மகரிஷிகளுடன் ஆலோசித்து ஸ்ரீசைலம் என்கிற நாமக்கல் மலையின் அடியில் இருக்கிற எல்லாப் பாவங்களையும் விலக்கக் கூடிய நரசிம்ம மகாதீர்த்தத்தில் ஒருதரம் நியமத்தோடு ஸ்நாநம் செய்து ஸ்ரீ நாமகிரி அம்மனையும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியையும் சாஸ்திர விதிப்படி பூஜித்து வேத ரஹஸ்யங்களான ஸ்தோத்ரங்களால் ஸ்தோத்ரம் செய்து அந்தப் பாபங்களில் நின்றும் விடுபட்டாள். இப்படி காவேரி நதியினுடைய பாபங்களையும் விலக்கிச் சுத்தி

செய்த நரசிம்ம தீர்த்த மகாத்மியத்தை முழுமையும் எவன் அறிவானோ எவன் சொல்லுவானோ! மிக்க அபூர்வமே. இந்த உயர்ந்த நரசிம்மதீர்த்த மகிமையை நான் என் குருவான வேதவியாஸரிடமிருந்து கேட்டேன். பிரம்மதேவரும்கூடத் தன் சிருஷ்டி விஷயத்தில் தப்பு செய்துவிட்டு அந்தத் தோஷத்தை விலக்குவதற்கு ராமேசுவரத்தில் ஸேதுவில் அஸ்வமேத யாகம் செய்தும் கடைசியாக இந்த நாமக்கல்லிலிருக்கிற நரசிம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சுத்திபெற்றார். தேவேந்திரனும் வ்ருத்ரன் என்கிற அசுரனைக் கொன்றும் பிரம்மஹத்யா பாபத்தால் பீடிக்கப் பட்டு இந்த நரசிம்ம தீர்த்தத்தில் ஒரு மாதம் ஸ்நானம் செய்து பிரம்மஹத்யா தோஷத்தை நிவர்த்தித்துக் கொண்டான்.

இப்படி மகாபாபங்களைச் செய்தவர்களுங்கூட இந்த நரசிம்ம தீர்த்தத்தை நினைத்தமாத்திரத்தினாலேயும்கூடப் பாபங்களில் நின்றும் விடுபட்டிருக்கிறார்கள். ஸ்நானமும் செய்திருந்தால் விடுபடுவார்கள் என்று சொல்லவாவேண்டும். எல்லா க்ஷேத்ரங்களுக்குள் ஸ்ரீ சைலம் என்கிற க்ஷேத்ரம் மிகவும் உயர்ந்தது. எல்லா தீர்த்தங்களுள் அந்த நரசிம்ம தீர்த்தம் உயர்ந்தது. எல்லா தேவர்களுக்குள்ளும் நரசிம்ம சுவாமியும் நாமகிரி அம்மனும் உயர்ந்தவர்கள்.

இன்னொரு ரகசியத்தையுங்கூட மிகவும் புத்திசாலியான உம்மிடத்தில் சொல்லுகின்றேன்; எவ்வளவு மகா பாபங்களோடு இருந்தாலும் அதிக வியாதிகளோடுகூடியிருந்தபோதிலும் பூத ப்ரேத பிசாசாதிகளாலே பீடிக்கப்பட்டிருந்தபோதிலும், பிள்ளை இல்லாமலிருந்தபோதி

னும் கெட்ட நடவடிக்கையை உடையவனுயிருந்தாலும் நாஸ்திகனுயிருந்தாலும், ஒரு மாதம் முழுமையாயும் நரசிம்ம தீர்த்தத்தில் ஒருவன் பக்தி சிரத்தைகளோடு சூர் யோதயத்திற்கு முன்னல் ஸ்நானம் செய்து அநேக காயத்ரீஜபம் முதலான ஜபங்களையும் செய்து நரசிம்ம தேவரையும் நாமகிரிதேவியையும் சாஸ்திரபிரகாரம் பூஜித்து ஏழு தடவை பிரதக்ஷணம் செய்து பன்னிரண்டு தடவை நமஸ்கரித்து அநேகவிதமாக ஸ்தோத்ரம் செய்வாஞே அவன் அந்த அந்த கெடுதல்களில் நின்றும் நிவர்த்தி அடைந்து இஷ்டபலங்களையும் அடைவான். ஆகையால் பணத்தையும் கீர்த்தியையும் தீர்க்காயுஸ்ஸை யும் இன்னம் மற்ற பலன்களையும் கொடுக்கக்கூடிய இந்த நரசிம்ம தீர்த்தத்தின் மகிமையைத் தேவபக்தி உள்ளவனுயும் ஆஸ்திகனுயுமிருக்கிற புருஷனுக்கு உபதே சிக்க வேண்டும்.

நாஸ்திகனுக்கும் பக்தி இல்லாதவனுக்கும் சொல்லக் கூடாது. எவன் கங்காநதியின் சரித்திரத்தையும் பிரம்மாவின் சபையின் உயர்வையும் காவேரியின் சரித்திரத்தையும் காவேரியின் இரு கரைகளிலுமுள்ள சிவ விஷ்ணு க்ஷேத்ரங்களின் வைபவத்தையும் ஸ்ரீ நரசிம்ம சுவாமியினுடையவும் ஸ்ரீ நாமகிரி அம்மனுடையவும் விசேஷங்களையும் நரசிம்மதீர்த்த பிரபாவத்தையும் கேட்பாஞே, படிப்பாஞே, படிக்கும்படி செய்வாஞே, அவன் எல்லா இஷ்ட பலன்களையும் அடைவான்; அவன் மிகவும் புண்ணியசாலி.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பிரம்மாண்ட உற்பத்தி கண்டத்தில் தசாவதார கல்பத்தில் பத்தாவது அத்தியாயம் முடிந்தது.

# பதினோராவது அத்தியாயம்

சௌனகர் கேட்க ஆரம்பித்தார்: ஹே சூத முனி வரே! ஸ்ரீ வேதவியாசருடைய இஷ்ட சிஷ்யரே! புத்தி சாலிகளுக்குள்ளும் சிறந்தவரே! அந்தச் சாளக்கிராம மலை என்கிற அந்த நாமக்கல் மலையில் அநேக தீர்த்தங் கள் எல்லாம் பாபங்களையும் விலக்கக்கூடிய சாமர்த்திய முள்ளவைகளாக இருக்கின்றன என்று தாங்கள் சொன் னீர்களல்லவா தீர்த்த மாகாத்மியத்தை அறிந்த ஹே சூத மகரிஷியே! எல்லா க்ஷேத்திரங்களுக்குள் ஸ்ரேஷ் டமான நாமக்கல் மலையில் எவ்வளவு தீர்த்தங்கள் இருக் கின்றன; எவ்விடமிருந்து உண்டாகின்றன. அந்தத் தீர்த்தங்களின் பெயர்கள் என்ன? எவர்களால் எப் படி அடையப்பட்டன என்கிற எல்லாவற்றையும் தாங்கள், கேட்பதில் ஆசையுள்ள எனக்கு உபதேசித்து அனுக்கிரகிக்கவேண்டும் என்று சௌனகமகரிஷி கேட்க சூதமகரிஷி சொல்ல ஆரம்பித்தார். ஹே சௌனகரே கேளும்; நீர் கேட்டபிரகாரம் தீர்த்தங் களின் பெயர்களையும் சரித்திரங்களையும் வைபவத்தை யும் நடந்ததுபோலவே உண்மையாகவே சொல்லு கிறேன். ஸ்ரீ நரசிம்மசுவாமி கோவிலுடைய வடக்குப் பாகத்தில் நரசிம்ம தீர்த்தம் இருக்கிறது.

அந்த நரசிம்ம தீர்த்தத்தின் வைபவம் என்னால் முன்னால் சொல்லப்பட்டுவிட்டது. அந்த நரசிம்ம தீர்த் தத்தினுடைய வடக்கு பாகத்தில் ராமதீர்த்தம் என்கிற தீர்த்தம் இருக்கிறது. அது மனுஷ்யர்களுடைய எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கக் கூடியது. எல்லா சம்பத்துக் களையும் கொடுக்கக்கூடியது; பிள்ளைகளையும் பேரன்களை

யும் விருத்தியடையும்படி செய்யக்கூடியது. வஸுதேவ ருக்கு ரோஹிணீ தேவியினிடத்தில் பிறந்தவராயும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய தமையனருமான ஸ்ரீ பலராம ரானவர் தனக்கு மரியாதையைச் செய்யவில்லை என்கிற காரணத்தினால் உண்டான கோபத்தினால் ரோமஹர்ஷ ணர் என்கிற சூதமுனிவரைக் கொன்றுவிட்டார். அந்தப் பிரம்மஹத்தியா தோஷத்தினால் பீடிக்கப்பட்ட பலராம ரும் பிராம்மணர்களின் உத்திரவின்பேரில் அந்தப் பாபங் களைப் போக்கடிப்பதற்குப் பூமியைப் பிரதக்ஷிணம் செய்து தீர்த்த க்ஷேத்திராடனம் செய்ய ஆரம்பித்தார்.

அந்தப் பலராமரும் அநேக தீர்த்தங்களையும் க்ஷேத் திரங்களையும் சேவித்து ஸ்ரீ நரசிம்ம சுவாமியால் ஏவப் பட்டவராக ஸ்ரீ சைல க்ஷேத்திரத்தை அடைந்து அழ குள்ள அந்த நாமக்கல் மலையையும் ஆச்சரியகரமான ஸ்வரூபத்தையுமுடைய தேவர்களையும் தரிசித்து ஆச் சரிய மடைந்த மனஸோடு கூடினவராக அந்த மலே யிலேயேமூன்று நாள்கள் வசிக்க எண்ணங் கொண்டு இலைகளால் செய்யப்பட்ட வீட்டை ஏற்படுத்திக் கொண்டு அந்தப் பர்ணகசாலையின் சமீபத்தில் ஒரு ஓடை ஏற்படுத்திக்கொண்டு அந்த ஓடையில் நியமத் தோடு மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்துகொண் டும் நரசிம்ம சுவாமியைப் பூஜித்துக்கொண்டும் கோதா னத்தினாலும் பூமி தானத்தாலும் ஹிரண்யம் முதலான வஸ்துக்களுடைய தானத்தினாலும் வேதங்களைக் கரை கண்ட பிராம்மணர்களைப் பூஜித்தும் திருப்தியடையும் படி செய்தும் அந்தப் பாபத்திலிருந்து விடுபட்டுப் பரி சுத்தராகத் துவாரகா பட்டணத்தை அடைந்தார். அது முதற்கொண்டு அந்தத் தீர்த்தத்திற்கு ராமதீர்த்தம் என்

கிற பெயர் ஏற்பட்டுப் பிரசித்தியும் ஏற்பட்டது. அது எல்லாத் தீர்த்தங்களையும் விட உயர்ந்தது. •அப்பேர்ப் பட்ட ராமதீர்த்தத்தினுடைய முன்பக்கத்தில் ஈசான திக்கில் ஆதிசேஷசாயியான பகவானுக்குப் பிரியமான அனந்த தீர்த்தம் என்கிற ஒரு மகா புண்ணிய தீர்த்தம் இருக்கிறது.

முன் ஒரு காலத்தில் அநந்தர் என்கிற பெயரை உடைய ஒரு பிராமணர் ஆதிசேஷசாயியான பகவானைக் குறித்து நியமத்தோடு ஏகாலத்தில் ஆயிரம் வருஷம் கடுமையான தபஸ்ஸை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பகவானும் தபஸ் செய்யமுடியாத கிழத்தனத்தில் தபஸ்செய்கிற அநந்தரிடத்தில் கருணையோடு எதிரில் ஆவிர்பவித்தார். அப்பொழுது அநந்தரும் சந்தோஷத்தினால் எதிரில் சங்க சக்ரகதாதாரியாயும் மலர்ந்த தாமரைமலரை ஒத்த முகத்தை உடையவராயும் வலியன்குருவிகளுக்குச் சமானமான கருவிழிகளோடு கூடினவராயும் பவளத்தோடு சண்டை போடுகிற உதட்டை உடையவராயும் நல்ல மூக்கையும் அழகுள்ள மோவாகட்டையையும் கன்னங்களையும் உடையவராயும் சங்குபோல் கழுத்தை உடையவராயும் அகண்ட மார்பை அடைந்தவராயும் வண்டுகளுக்குச் சமானமான கேசபாசங்களால் பிரகாசிக்கிறவராயும், நீலோத்பல புஷ்பம்போல் கறுப்பு நிறமுடையவராயும் பீதாம்பர தேவியாயும் லக்ஷ்மிதேவியால் அலங்கரிக்கப்பட்ட மார்போடும் வனமாலையைத் தரித்தவராயும் ஆதிசேஷன் போலப் பெருத்து நீண்டிருக்கிற புஜங்களோடும் தாமரைப்பூவையும் பழிக்கிற கைகளோடும் கோடி சூர்யப் பிரகாசராயும் கிரீடம் தோள்வளை, முத்து ஹாரம்

அனைஞான் முதலான ஆபரணங்களால் அலங்கிருதரா யும் பெருத்தகுதம்பங்களோடும் எல்லா தேவர்களாலும் பிரார்த்திக்கத் தகுந்தசரணகமலங்களோடும் கூடினவரா யும் லோகநாதராயும் தேவர்களுக்கெல்லாம் தேவனுயும் இருக்கிற பகவானைப் பார்த்துப் பக்தி சிரத்தைகளோ டும் பரவசராய் நமஸ்கரித்தும் சாஸ்த்திரபிரகாரம் பூஜித்தும் வேதஹஸ்யங்களான ஸ்தோத்ரங்களால் புகழ்ந்தும் தன்னைமறந்து இருந்தார். பிறகு சந்தோ ஷித்த முகத்தோடும் பகவானும் பிரீதியோடு அநந்த ரைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார்.

"ஹே பிரமஞேத்தமரே! என்னிடத்தில் நின் றும் எம்மால் பிரார்த்திக்கத்தகுந்த வரம் எதையும் கொடுக்க உன் சமீபம் வந்திருக்கிறேன். வேண்டிய வரத்தைக் கேளும்." என்று பகவான் சொன்னதைக் கேட்ட அநந்தரும் மந்தஹாசத்தோடு பகவானுல் சொல் லப்பட்ட வார்த்தையைக் கேட்டுப் பக்தியோடும் நடுக்க முள்ள சரீரத்தோடும் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு விக்ஞாபிக்க ஆரம்பித்தார்.

ஹே பகவானே! தங்களைப் பரமசிவனும் பிரம்மா வும் மூன்று வேதங்களும் அறியவில்லை என்று பிரசி தம். அப்படி இருக்க அப்பேர்ப்பட்ட தங்களை நான் அறிந்தேன்; என்னுல் இதைக்காட்டிலும் எனக்குத் திருப் திகரமான வேறு எந்த வரம் என்னுல் கேட்கத்தகுந்ததா யிருக்கிறது. அப்படியிருந்தாலும் நான் சில வரங்களைக் கேட்கிறேன். எனக்குப் பகவான் லோகங்களுக்கு நன் மையைச் செய்கிற கீர்த்தியைக் கொடுக்க வேண்டும். என் கீர்த்தி எவ்வளவு காலம் அழியாமலிருக்கிறதோ அது வரை எனக்கு ஸ்வர்க்கவாசம் ஏற்படவேண்டும்.

ஹே, பூர்ணாநந்த பரிதரே! என்னுடைய பெய ரோடு கூடின மங்களகரமான தீர்த்தத்தை இந்த இடத் தில் உண்டுபண்ண வேண்டும். இதில் எல்லாத் தீர்த்தங் களும் வாசம் செய்யவேண்டும். எங்கும் நிறைந்து எல் லோருக்கும் கிருபை செய்கிற ஹே பகவானே, நீரே எல்லாம் ஆலோசித்து என்னுடைய எண்ணத்தை ஸப லமாகச் செய்யப் பிரார்த்திக்கிறேன் என்று அநந்தர் பக வானைப் பிரார்த்தித்தார்.

இப்படி பிரார்த்திக்கப்பட்ட பகவானும் கீர்த்தியில் ஆசையுள்ள விருத்தபிராம்மணரைப் பார்த்துத் தயை யோடு லோகங்களிலிருக்கிற எல்லாப் புண்ய தீர்த்தங் களையும் தன் கால்களுடைய சமீபத்தில் வரும்படி கூப் பிட்டார். அந்தத் தீர்த்தங்களும் தேவதேவருடைய ஆக் ஞையால் சமீபத்தில் வந்து நமஸ்கரித்து நின்றன. அவை களைப் பார்த்துப் பகவானும் பிரீதியோடு "ஹே தீர்த்தங் களே! நீங்கள் உங்கள் இடங்களில் இருப்பதோடு என் சமீபத்திலும் இருக்கவேண்டுமென்று சொல்லஅப்படி யே எல்லாத் தீர்த்தங்களும்பகவான் சமீபத்திலிருந்தன.

பிறகு பகவானும் அநந்தரைக் கூப்பிட்டு "எல்லா ருக்கும் வேண்டிய பலன்களைக் கொடுக்கின்ற எல்லாத் தீர்த்தங்களும் இங்கே இருக்கின்றன" என்று சொல்ல அநந்தரும் சேஷசாயியான பகவானையும் தீர்த்தங்க ளின் கூட்டத்தையும் நமஸ்கரித்து அதில் ஸ்நானம் செய்து வேண்டிய புண்யபலங்களைப் பெற்றார். பிறகு அந்தப் பிராமணோத்தமரும் அநந்த தீர்த்தக்கரையில் பகு காலம் வசித்துக்கொண்டும் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நா னம் செய்தும் அநந்தசாயியான பகவானையும் சந்தோ ஷப்படுத்திக்கொண்டும் கடைசிகாலத்தில் எந்த முக்தி

யை அடைந்தால் மறுபடியும் திரும்புதல் இல்லையோ, அந்த மோக்ஷத்தை அடைந்தார்.

அது முதற்கொண்டு அந்தத் தீர்த்தத்திற்கு அநந்தருக்கு வரவழைக்கப்பட்ட காரணத்தினாலும் அநேக தீர்த்தங்கள் அடங்கினது என்பதாலும் அநந்ததீர்த்தமென்று பிரசித்தம். எல்லா ஜனங்களுக்கும் கீர்த்தியை செய்யக்கூடியது; அந்தத் தீர்த்தத்தைப் பார்த்தவர்களுக்கும் சொன்னவர்களுக்கும் நினைத்தவர்களுக்கும் கூடப் பாபத்தைப் போக்கடிக்கும்பொழுது ஸ்நாநமும் செய்தால் பாபம் விலகுமென்று சொல்லவாவேண்டும்.

ஆதிசேஷசயனம் செய்துகொண்டிருக்கிற ஸ்ரீ ரங்கனாதருடைய சமீபத்தில் இருக்கும் பெரிய ஓடைக்குத்தான் பால்கடல் தீர்த்தமென்று சொல்லப்படும். பகவான் வசிக்கிறஇடம் பால்கடலின் நடுவிலிருக்கிற ச்வேதத்வீபம் என்று சொல்லப்படும். பால்கடல் தீர்த்தத்தினுடைய மகிமையும் ச்வேத த்வீபத்தினுடையவும் பகவானுடையவும் மகிமையும் வர்ணித்து சொல்லுவதற்கும் எண்ணுவதற்கும் ஆதிசேஷனுக்குப் கூட முடியாதென்றால் வேறுயாரால்தான் முடியும்.

அந்த க்ஷீராப்தி தீர்த்தத்திற்குத் தெற்குப் பக்கத்தில் கமலாலயம் என்கிற தீர்த்தம் இருக்கிறது. அதன் மகிமையும் வெகுவிசேஷமே. அந்த கமலாலய தீர்த்தத்தினுடைய கிழக்குபக்கத்தில் தேவதீர்த்தம் என்கிற தீர்த்தம் இருக்கிறது. முன்னால் இந்தத்தீர்த்தமானது தேவேந்திரனுடைய பாபத்தைப் போக்கடிப்பதற்காக எல்லாத் தேவர்களாலும் உண்டுபண்ணப்பட்டது. எல்லாப்பாபங்களையும் விலக்கக் கூடியது. தீர்த்தங்களுக்குள்ளும் சிறந்தது.

அப்படியே நரசிம்ம தீர்த்தத்தினுடைய தெற்குப் பாகத்தில் சக்கரதீர்த்தம் இருக்கிறது. முன்காலத்தில் தேவலகர் என்கிற ரிஷியானவர் அந்த இடத்தில் இருந்து கொண்டு பகவானை ஆராதித்துக்கொண்டு ஸ்நானம் செய்வதற்கு ஒரு குளத்தை உண்டு பண்ணி அதன்கரையில் தபஸ் செய்துகொண்டிருந்தார். இப்படியே பகு காலம் தபஸ் செய்துகொண்டிருக்கும் பொழுது வேதங்களை அறிந்த தேவலகரை அதிக பசியோடு கூடிய ஒரு ராக்ஷஸன் கொல்ல ஆரம்பித்தான். அந்த ராக்ஷஸனைப் பார்த்துப் பயமடைந்த பிராமணோத்தமரும் லோகநாதரான மகாவிஷ்ணுவைச் சரணமாக மனதாலடைந்தார். உடனே பயத்தை அடைந்த தேவலகரைக் காப்பாற்றவும் ராக்ஷஸனைக்கொல்லவும் உத்தேசித்துத் தன் சக்ராயுதத்தைப் பார்த்துப் பயத்தை விலக்கினவரான தேவலகரானவர் ஸ்தோத்திரம் செய்தார். மகாவிஷ்ணுவின் கைக்கு முக்கிய ஆபரணமான ஹேஸுதர்சனமே! உனக்கு நமஸ்காரம். ராக்ஷஸனைக் கொல்வதில் சாமர்த்திய முள்ள உன்னை ஸ்தோத்ரம் செய்வதற்கு யாரால் முடியும். ஸ்ரீபத்மநாபருடைய தாமரைப் பூவிற்குச் சமானமான கையிலிருக்கும் சக்கரமே! நீ எப்பொழுதும் என் எதிரில் இருந்து என்னைக் காப்பாற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஸ்தோத்ரம் செய்து தேவலகரும் அடிக்கடி நமஸ்கரித்தார்.

இப்படிப் புகழப்பட்ட சக்கரமும் தேவலகர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவருடைய குளத்திற்குள் பிரவேசித்தது. அந்தச் சக்ராயுதத்தினுடைய ஸாந்நித்யத்தினால் பயமில்லாத மகரிஷியும் அதிக தபஸ் செய்து எவர்களாலும் அடைய முடியாத வைகுண்ட

லோகத்தை அடைந்தார். அது முதற்கொண்டு அந்தத் தீர்த்தத்திற்கு மூன்று லோகங்களிலேயும் சர்வபயங்களையும் விலக்கக்கூடிய யோக்கியதை யுள்ளதாய்ச் சக்ரதீர்த்தம் என்ற பிரசித்தி உண்டானது. அந்தச் சக்ர தீர்த்தத்தில் மநுஷ்யர்கள் ஸ்நாநம்செய்து தேவர்களையும் பித்ருக்களையும் திருப்தி செய்வார்களேயானால் அவர்களுக்குத் தேவர்களும் பித்ருக்களும் திருப்தியடைந்து வேண்டிய பலன்களைக் கொடுக்கிறார்கள்.

அந்தச் சக்ரதீர்த்தத்திற்குத் தெற்குப்பாகத்தில் ரிஷிதீர்த்தம் என்னும் புண்ய ஜலபாக மிருக்கிறது. அதை நினைத்த மாத்ரத்திலேயே மகாபாபிகளும் பரிசுத்தர்களாகிறார்கள். முன்னொருகாலத்தில் எல்லா மகரிஷிகளும் ஸ்ரீ நாமகிரி அம்மனையும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியையும் பூஜிப்பதற்கு ஒன்று கூடி அந்த இடத்தில் பர்ணசாலையை ஏற்படுத்திக்கொண்டு நித்தியமும் ஸ்நாநம் செய்வதற்கு ஒரு ஓடையையும் உண்டுபண்ணிக் கொண்டு அந்த ஓடையில் தங்கள் சாமர்த்தியத்தால் எல்லாத் தீர்த்தங்களின் அதிஷ்டான தேவதைகளை மந்திர பலத்தால் ஆகர்ஷித்து அதன்கரையில் தபஸ்செய்து கொண்டிருந்தார்கள். பிறகு சித்தியையும் பெற்றார்கள். ஆகையால் அந்தத் தீர்த்தத்திற்கு ரிஷிதீர்த்தம் என்று பெயர் வந்தது. அந்தத் தீர்த்தம் எல்லா ஆபத்துக்களையும் நிவர்த்தி செய்யக்கூடியது. காமக்குரோதங்கள் விலகுவதற்கும், மனது சுத்தமாவதற்கும் முக்கியகாரணமாகும். மனதை அடக்குவதற்கும் வெளிஇந்திரியங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் சாதனம். எல்லாச் சப்பத்துகளையும் கொடுக்கும் எந்த எந்தப் பலத்தை நினைத்துக் கொண்டு அந்த ரிஷிதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வார்

களை ஜனங்கள் அந்த அந்த ஸமஸ்த பலங்களையும் அடைவார்கள். இதில் சந்தேகமே கிடையாது.

இவ்விதம் ஸ்ரீ சைலத்தினுடைய நான்குபக்கங்களிலும் அநேக மகிமைகள் பொருந்திய எட்டுத் தீர்த்தங்கள் இருக்கின்றன. இதைத் தவிர வேறு அநந்த தீர்த்தங்களும் இருக்கின்றன. விச்வகர்மா என்கிற தேவ தச்சன் முன்னால் பகவானுடைய வைபவத்தையும் க்ஷேத்ரத்தின் மகிமையையும் கேட்டும் அறிந்தும்தானே வந்து தன் ஜன்மாவை ஸபலமாகச் செய்வதற்கும் நித்யமான கீர்த்தியை அடைவதற்கும் எண்ணி அந்தத் தேவர்களுக்கு அதிக ஆச்சரியகரங்களான அர்த்த மண்டபம், மகாமண்டபம், கர்ப்பகிரஹம், ரங்கமண்டபம் முதலான மகாமண்டபங்களையும், நான்கு கால்முதல் ஆயிரம்கால் வரை உள்ள வெவ்வேறு மண்டபங்களையும் சூரியனுடையதுபோல் காந்தியை உடைய விமானத்தையும் அநேக மதில்களையும் கோபுரங்களையும் மனோக்ஞங்களாயும் ஆச்சரியகரங்களாயுமான வேறு மண்டபங்களையும் உண்டுபண்ணியும் ஸ்ரீ ரங்கநாயகிக்கும் ஸ்ரீரங்கனுக்கும் அநேகமண்டபங்களையும் நிர்மாணம் செய்தும் ஸ்ரீ நாமகிரி அம்மனையும் ஸ்ரீ நரசிம்ம தேவரையும் தங்கங்களாலும், ரத்னங்களாலும் வெள்ளிகளாலும் ஸ்படிகங்களாலும் பவளங்களாலும் செய்யப்பட்ட மண்டபங்களில் இருக்கும்படி செய்து அந்த க்ஷேத்ரத்தை வைகுண்டத்திற்குச் சமானமாகச் செய்து அதிலும் தங்கமயமாயும் ரத்னங்களால் இழைக்கப்பட்டதுமான விசித்ரமண்டபத்தில் வீற்றிருக்கும் ஹிரண்யகசிபுவைக் கொன்ற ஸ்ரீ நரசிம்மரையும் வைகுண்ட நாதராயும், சேஷசாயியுமான பகவானையும் ஸ்ரீ வாமனரையும்

திரிவிக்ரமனையும், வராஹரூபியான பகவானையும் தர்சித்தும் பூஜித்தும் ஜன்ம சாபல்யத்தை அடைந்து தன் இருப்பிடத்தை அடைந்தான்.

முதலாவதான கிருதயுகத்தில் ஸ்ரீ நரசிம்மதேவர் முதலான தேவர்களைப்பிரமதேவரும் பரமசிவனும் சூரிய சந்திரர்களும் மற்றத் தேவர்களும் பிரத்தியக்ஷமாகவே பூஜித்துச் சித்தியைப் பெற்றிருக்கிறார்கள். திரேதாயுகத்தில் ஸ்ரீ ராம பக்தரான ஹநுமானும் பிருகுமுதலான மகரிஷிகளும் பக்திசிரத்தைகளோடும் பூஜைசெய்து சித்தியைப் பெற்றிருக்கிறார்கள். துவாபரயுகத்தில் விஷ்ணுபக்தர்களில் சிரேஷ்டரான சூரசேனர் என்கிற ராஜரிஷியும் மற்றும் அநேகபக்தர்களும் பூஜித்துச் சித்தி பெற்றிருக்கிறார்கள். கலியுகத்திலோ என்றால் வரப்போகிற அநேக ராஜாக்கள் பூஜித்து ஸித்திபெறப் போகிறார்கள்.

இவ்விதம் எல்லாயுகங்களிலும் யுகதர்மங்களைத் தவறாமல் அனுஷ்டிக்கும் அநேகபக்தர்களும் ஸ்ரீ நரசிம்மசுவாமி முதலான தேவர்களைப் பூஜித்துச் சித்தி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஹே சௌனகரே! நீர் கேட்ட எல்லாத் தீர்த்த வைபவங்களையும் விஸ்தாரமாகச் சொல்லிவிட்டேன். பின்னும் எந்தச் சரித்திரத்தைக் கேட்பதற்கு விரும்புகிறீரோ அதைச் சொல்லுகிறேன் கேளும் என்று சூத முனிவரும் சொல்லிப் பின்னும் இவ்விதம் ஸ்ரீ சாளக்கிராம சிலை என்கிற நாமக்கல் மலையில் வாசம் செய்கிற ஸ்ரீ நரசிம்ம தேவருடைய அதிக அத்புதமான சரித்திரத்தையும் ஸ்ரீசைல க்ஷேத்திர மாகாத்மியத்தையும் அந்த க்ஷேத்ரத்தில் ஸாந்நித்யம் செய்கிற தேவர்களுடைய மகிமையையும் அநேக புண்யதீர்த்தங்களுடைய பெருமை

யையும் எந்தப் பக்தன் சொல்லுவானோ 'சொல்லும்படி செய்வானோ, கேட்கும்படி செய்வானோ, அந்தப் பக்தன் இந்த லோகத்திலும் புத்ர பௌத்ர தன தான்யாதிகளால் சௌக்யத்தையும் பரலோகத்தினும் நித்திய ரூபமான மோக்ஷத்தையும் அநாயாசமாகப் பெறுவான் என்றும் சொல்லியும் ஈசுவரத் தியானத்தில் அமர்ந்தார்.

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

# பன்னிரண்டாவது அத்தியாயம்

சௌனகர் மறுபடியும் கேட்க ஆரம்பித்தார். எல்லாச் சாஸ்திரங்களையும் அறிந்த ஹே சூதமுனிவரே ரிஷி தீர்த்தக்கரையில் தபஸ் செய்துகொண்டிருந்த ரிஷிகளுடைய சரித்திரத்தைச் சொல்லவேண்டும்.

அந்த ரிஷிகள் எவருடைய பிள்ளைகள் அவர்களுடைய பெயர் என்ன அந்த ரிஷிகள் எந்த விதியால் ஸ்ரீ நரசிம்மசுவாமிக்குப் பூஜையைச் செய்துகொண்டிருந்தார்கள்.

என்னால் கேட்கப்படுகின்ற எல்லா விஷயங்களையும் விஸ்தாரமாகத் தாங்கள் சொல்லவேண்டும். நீர் வேதவியாஸரின் கிருபையால் எல்லாவற்றையும் அறிவீர்; மகாவிஷ்ணுவின் கீர்த்தியாகிற அமிர்தத்தினால் நனைக்கப்பட்ட ஹரிகதையாகிற விதையில் உண்டாகிற கேட்கவேண்டும் என்கிற ஆசையாகிற முளையானது உம்முடைய உபதேச வார்த்தைகளாகிற அமிர்தப் பெருக்குகளால் விருத்தியடைகிறதல்லவா?

இவ்விதம் சௌனகரால் கேட்கப்பட்ட சூதமக ரிஷியும் பதில் சொல்ல ஆரம்பித்தார். கதையின் சாரங்களை அறிந்த முனிகளுக்குள் உத்தமரான ஹே சௌனகரே நீர் ஒருவர்தான் பரிசுத்தமான மகாவிஷ்ணுவின் கதையைக் கேட்கவிரும்புகிறீர்.

வேறு ஜனங்களோ பாபிகளுடைய கதையையே கேட்பார்கள்; ஏனென்றால்,மகாவிஷ்ணுவின் கதையைக் கேட்கவும் சொல்லவும் ஆசையுள்ள புருஷர்களை அனேக ராக்ஷஸர்கள் கேட்கவும் சொல்லவும் முடியாமலிருக்கும்படி பெண்டாட்டி பிள்ளை வீடு வாசல் வேலைக்காரன்

முதலான ஸாதனங்களைக் கொண்டு கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நீரோ வென்றால் அப்படி வேண்டியவர்கள்போலிருக்கிற பத்நீ முதலான சத்துருக்களை விஷ்ணுதியானம் என்கிற கத்தியால் ஜயித்து மகாவிஷ்ணுவினுடையவும் அவர் பக்தர்களுடையவும் சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறீரல்லவா?

ஆகையால் புண்ணியவான்களுக்குள் நீர் உயர்ந்தவர்; பக்தி சிரத்தைகளோடு கூடின சிஷ்யனுக்கு ஆசாரியர் அதிக ரஹஸ்யமான விஷயத்தையும் சொல்ல வேண்டும்; அப்படிச் சொல்லாமற் போனால் ஆசாரியருக்குத் தோஷம் உண்டாகும்; ஆகையால் ஹே சௌனகரே உமக்குச் சொல்லுகிறேன் கேளும்.

முன் காலத்தில் சதுர் முகப் பிர்மாவிற்கு விகனஸ் என்கிற பெயர் பிரசித்தமாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட விகனஸ் என்கிற பிர்மாவிற்கு அவருக்குச் சமானர்களாயும் மகாத்மாக்களுமான மரீசி, அங்கிரஸ், அத்திரி, புலஸ்தியர், புலஹர், கிரது, பிருகு (வஸிஷ்டர்) என்கிற பெயர்களை உடைய ஏழு ரிஷிகள் உண்டானார்கள்.

அந்தச் சப்த ரிஷிகளும் எல்லா லோகங்களுக்கும் நன்மை செய்ய விருப்ப முடையவர்கள்; வேதங்களால் லக்ஷண விர்த்தியால் அறிவிக்கக்கூடிய பரப்பிரும்மஸ்வரூபத்தை அறிந்தவர்கள்; வெளியிலிருக்கிற துச்சங்களான ரூப சப்த ரஸ கந்த ஸ்பரிசங்களில் ஆசையில்லாதவர்கள்.

அந்த ஏழு பிரம்மரிஷிகளும் மகாமேரு ஹிமவான் முதலான குல பர்வதங்களில் தபஸ் செய்துகொண்டும் கர்மகாரியங்களைச் செய்வதற்கும் புத்திரர்களை உண்டு

பண்ணிப் பித்ருக்களுடைய கடனை நிவர்த்திப்பதற்கும் பத்தினிகளை அக்கினிசாக்ஷியாகக் கல்யாணம் செய்து கொண்டும் தபஸ் செய்கிறசமயம் போக பாக்கி காலங்களில் தினந்தோறும் பிர்மசபையை அடைந்து அந்தப் பிரம்மாவை நமஸ்கரித்து அந்தப் பிரமாவோடு தர்ம மோக்ஷ சம்பந்த முள்ள கதைகளைப் பேசிக்கொண்டும் பிர்மஸ்வரூப விசாரம் செய்துகொண்டும் பிரமானந்த சாம்ராஜ்யத்தை அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

இப்படியே சிலகாலம் நடந்திருந்ததில் ஒரு சமயம் ஏழு ரிஷிகளும் பிர்மமாவை அனேகந் தடவை நமஸ்கரித்து அஞ்சலிபந்தமும் செய்துகொண்டு ஹே தேவேசரே நீங்கள் எங்களுக்குத் தகப்பனாரகவும் லோகங்களுக் கெல்லாம் பிதா மஹாராகவும் இருக்கிறீர்கள்.

ஆகையால் எல்லோர்களுக்கும் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் நன்மை செய்யக்கூடிய சிரேயோமார்க்கத்தை உபதேசிக்கவேண்டும். எந்த சிரேயோமார்க்கத்தை மகாபாபிகளும் நன்றாகச் செய்தால் பிறப்பு இறப்பு என்கிற சம்ஸாரத்தை அடையமாட்டார்களோ அப்பேர்பட்ட மகோபதேசத்தைச் செய்ய வேண்டும் என்று ஸப்தரிஷிகளால் பிரார்த்திக்கப்பட்ட பிர்ம்மாவும் புத்திரர்களைப்பார்த்துச் சந்தோஷத்துடன் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

ஹே புத்திரர்களே நீங்கள் எல்லா வேத சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றுக்கொண்டிருப்பதால் தரும விஷயத்திலும் அர்த்த விஷயத்திலும் காமவிஷயத்திலும் மோக்ஷவிஷயத்திலும் அறியாத விஷயம்கிடையாது.

அப்படி யிருந்தும் புத்திரர்களான நீங்கள் கேட்பதினாலும் உங்களுடைய நன்மையின்பொருட்டும் லோகங்

களின் ஹிதத்தை உத்தேசித்தும் அறிவிற்குக் காரணமாயும் தேவ தேவராயுமான மகாவிஷ்ணுவுக்கு நமஸ்காரம் செய்து விஷயத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறேன். எந்த மகாவிஷ்ணுவினிடமிருந்தே எல்லாத் தேவர்கள் மனுஷர்கள் முதலான பிராணிகள் உண்டாகின்றனவோ எவரால் காப்பாற்றப்படுகின்றனவோ எவரிடத்திலேயே மறுபடியும் எல்லா லோகங்களும் லயத்தை அடையுமோ அப்பேர்ப்பட்ட மகாவிஷ்ணு ஒருவர்தான் ஸர்வகாரண பூதராகவிருக்கிறார்.

ஸர்வசாக்ஷியான எந்த அதிக ஐசுவரியத்தை யுடைய மகாவிஷ்ணுவை பிர்ம்மஞானிகள் எல்லோரும் சரணமாக அடைந்து சம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டவர்களாக விஷ்ணு சாயுஜ்யத்தையும் அடைந்திருக்கிறார்களோ அப்பேர்ப்பட்ட பரப்ரும்ம ரூபியான மகாவிஷ்ணுவினுடைய உபாஸனைதான் எல்லோர்களுக்கும் ஐஹிகாமுஷ்மிக பலன்களைக் கொடுக்கக்கூடியது.

இந்த மகாவிஷ்ணுவின் உபாஸனைகளும் வேதாந்த சாஸ்திரத்தில் அனேகவிதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸகுணோபாஸனை என்றும் நிர்க்குணோ பாஸனையென்றும் ஸகுணோபாஸனையும் அனேகவிதமென்றும் நிர்க்குணோபாஸனையும் அனேகவிதமென்றும் உபநிஷத்துகள் சொல்லுகின்றன.

எந்த உபாஸகன் ஆத்மாவை எல்லாப் பிராணிகளிடத்திலும் அந்த எல்லாப் பிராணிகளை ஆத்மாவினிடத்திலும் இருப்பதாகவும் எல்லாப் பிரபஞ்சமும் விஷ்ணு

தான் என்று அறிந்து தன் புத்திகுகையிலேயே வஸிக்கும் ஆத்மஸ்வரூபத்தை அறிந்து மனஸ்ஸாலேயே நினைக்கப்பட்ட ஸத்யபுஷ்பம் தயாபுஷ்பம் அஹிம்ஸா புஷ்பம் முதலான பூஜா ஸாமக்கிரிகளால் ஓம்காரம் என்கிற பிரணவமந்திரத்தாலேயே பூஜிப்பானோ அவன் நிர்குணோபாஸனையைச் செய்கிறவன். அந்த உபாஸகன் செய்யும் காரியம் நிர்க்குணோபாஸனை யாகும். இந்த நிர்க்குணோபாசனை மகாத்மாக்களாயும் ஸ்திரமான மனஸ்ஸை உடையவர்களாயும் மோக்ஷத்தில் அதிக ஆசையுடையவர்களாயுமான உபாஸகர்களுக்குத்தான் யோக்கியமானது.

ஏனென்றால் மனசு என்பது மிகவும் அசைவுள்ளது. அதை அடக்குவதற்குக் காட்டுத் தீயைக் குடிக்கிறவர்களும் மகாமேரு பர்வதத்தை அடியோடு பிடுங்குகிறவர்களும் பாக்கியில்லாமல் சமுத்திரத்தைச் சாப்பிட்டவர்களும்கூட முடியாதென்றால் வேறு எவர்கள் தான் அடக்கமுடியும்.

ஆகையால் சஞ்சலமான மனஸ்ஸை யுடையவர்கள் நிர்க்குணோபாஸனையைச் செய்யமுடியாதவர்கள்.

ஸகுணோபாஸனையையோ வென்றால் எல்லா உபாசகர்களும் சுகமாகச் செய்யமுடியும். இந்த உபாசனையில் இச்சைக்கும் சக்திக்கும் தகுந்தபடி கொஞ்சம் செய்த போதிலும் பலத்தை அடைவார்கள்.

ஸகுணோபாஸனை என்பது எப்படிச் செய்யப்படுவது என்றால் மண்பிம்பத்திலேயாவது கல்லிலேயாவது மரக்கட்டையிலாவது தாம்பிரம் முதலான லோஹங்களிலேயாவது அந்த அந்த அழகுள்ள அவயவங்களோடு கூடியிருப்பதாகவே அறிந்து ஆசாரியரால் உபதேசிக்கப்

பட்ட தந்திரமார்க்கத்தாலேயே தியானம் ஆவாஹனம் முதலான பதினாறு உபசாரங்களோடு அந்த அந்த தேவனை மந்த்ரபலத்தாலும் உபாஸகருடைய தபோவிசேஷத்தாலும் ஸாந்நித்யத்தை அடையும்படி செய்து சிரத்தையோடு பரிசுத்தமாகத் தயார்செய்யப்பட்ட பூஜாசாமக்கிரியைகளால் பலனை உத்தேசித்தோ உத்தேசிக்காமலோ பக்தியோடு தினந்தோறும் பூஜித்துத் தியானம் செய்துவருவார்களோ அவர்கள்தான் ஸகுணோபாஸகர்கள்.

அவர்களால் செய்யப்படும் பூஜை தியானம் முதலானவை ஸகுணோபாஸனையாகும். இந்த உபாசனையும் அவரவர்களுடைய இச்சைப்பிரகாரம் எல்லாத் துக்கங்களையும் நிவர்த்தித்து இஷ்ட சௌக்கியங்களைக் கொடுக்கக் கூடியதாகும்.

இந்த ஸகுணோபாஸனை செய்கிறவர்களும் இந்த லோகத்திலும் அனேக சௌக்கியங்களை அனுபவித்துப் பரலோகத்திலும் மோக்ஷபரியந்தம் உயர்ந்த பலன்களையும் அடைவார்கள். இப்படி பிரம்மாவினால் சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்ட ஸப்தரிஷிகளும் எப்படி இந்த ஸகுணோபாஸனை மோக்ஷத்தைக் கொடுக்கும்? எங்களால் எந்த தந்திரத்தை ஆச்ரயித்துப் பூஜை முதலானவை செய்யத் தகுந்தது; நாங்கள் அறியாமல் இருக்கிறோம்; இதைச் செய்யவேண்டிய விதத்தை நன்றாக எங்களுக்கு உபதேசித்து அனுகிரகம் செய்ய வேண்டும் பிதாவே, என்று கேட்க;பிரம்மாவும் சந்தோஷமடைந்தவராக மகாவிஷ்ணுவின்பொருட்டு நமஸ்காரம் என்று சொல்லிவிட்டு நான்கு முகங்களாலும் சப்தரிஷிகளைப் பார்த்துக் கிருபையோடு சொல்ல ஆரம்பித்தார்.

ஹே புத்திரவர்யர்களே, மங்களகரமான ஸகுணோ பாஸனையை விரிவாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முன் ஒரு சமயத்தில் லோகநாதரான மகாவிஷ்ணு பிரகலாதனுடைய பிரியத்தை உத்தேசித்து ஸ்ரீ நரசிம்ம சுவாமியாக உண்டாகி ஸாளக்கிராம சிலையாக கண்ட கிநதியை அடைந்தார். அப்போது நான் ஸாளக்கிராம மலையிலிருக்கிற ஸாளகிராமசிலையைப் பூஜிப்பதற்குப் பக வானின் சமீபத்தை அடைந்து பூஜைக்குச் சாதனமான தந்திரத்தை அறியாதவனாக அந்தப் பகவானின் சமீபத் தில் க்ஷணகாலம் நின்றேன். உடனே அந்தப் பகவானே பூஜாதந்திரத்தைச் செய்வதற்கு என்புத்தியை ஏவினார்

நானும் ஒரு தந்திரசாஸ்திரத்தை உண்டு பண்ணி அதன் பிரகாரம் பகவானுக்குப் பூஜையைச் செய்தேன்.

அதனால் சந்தோஷமடைந்த பகவானும் தன் மிருது வார்த்தையால் என்னைச் சந்தோஷமடையும்படி செய்துகொண்டு ஹே, பிர்ம்மாவே, இன்றைய தினம் முதற் கொண்டு நீ இந்தத் தந்திரத்தினால் பூஜை செய்த மாதிரி எல்லோரும் தனக்கு எல்லாப் பல சித்தியையும் பெற உத்தேசிப்பவர் வேதமந்திரங்களால் உபதேசிக்கப் பட்ட வழியோடு கூடினதான இந்தத் தந்திரத்தாலேயே பூஜை செய்தால் நான் ரொம்ப சந்தோஷமடைவேன்.

இந்தத் தந்திரமே எல்லா ஆகமங்களுக்குள்ளும் சிரேஷ்டமானது. இந்தத் தந்திரமே லோகங்களில் நிலை பெற்றதாக இருக்கப்போகிறது என்று பகவானும் சொல்லிவிட்டு அப்போதே மறைந்துவிட்டார். பிறகும் நான் இந்தத் தந்திரத்தாலேயே அனேககாலம் பூஜித்து அனேக வேண்டிய பலன்களைப் பெற்றுக் கொண்டு இந்த என் சபைக்கு மறுபடியும் வந்து சேர்ந்தேன்.

ஹே புத்திரர்களே, இப்போதே நான் உங்களுக்கு இந்தத் தந்திரத்தை உபதேசிக்கிறேன். இந்தத் தந்திரத்தால் நீங்கள் நன்ருகப் பகவானைப் பூஜித்து வேண்டிய இஷ்ட பலன்களைப் பெறுங்கள் என்று இவ்விதம் பிர்ம்மாவானவர் பிள்ளைகளான சப்தரிஷிகளுக்கு அந்தத் தந்திரத்தை உபதேசித்தார். அந்த ஸப்தரிஷிகளும் அந்தத் தந்திரராஜத்தை உபதேசமாகப் பெற்று எல்லாப் பலன்களையுமே கையில் கிடைத்தனவாகவே எண்ணினார்கள்.

அந்தத் தந்திரம்தான் வைகானஸ ஸூத்ரம் என்பது. அதன் பிரகாரம் பூஜிப்பவர்கள் எல்லா இஷ்டபலன்களையும் அடைவார்கள். அந்த வைகானஸ ஸூத்ரம் விகனஸ் என்கிற பிரம்மாவினுலே உண்டுபண்ணப்பட்டதாலே அந்தப் பெயரை உடையதாக ஏற்படுத்தப் பட்டது.

அப்படி வைகானஸ ஸூத்திரத்தைச் சொன்னதிஞலே பிரம்மாவுக்கும் வைகானஸர் என்கிற பெயர் உண்டு. அவர் பிள்ளைகளான ஸப்தரிஷிகளுக்கும் வைகானஸர்கள் என்கிற பெயர் உண்டு.

அந்த வைகானஸ ஸூத்திரப் பிரகாரம் எந்த ஜனங்கள் பகவானைப் பூஜிப்பார்களோ அவர்களுக்கும் வைகானஸர்கள் என்கிற பெயர் ஏற்படலாம்.

அந்த வைகானஸ தந்திரத்தில் சப்தரிஷிகளுக்குள்ளும் மிகவும் சாமர்த்தியம் பெற்றவர்களாயும் லோகத்திலேயும் பிரசித்தி பெற்றவர்களாயுமுள்ளவர்கள் மரீசி என்றும், அத்திரி என்றும், அங்கிரஸ் என்றும், பிருகு என்றும் பெயரையுடைய நான்கு மகரிஷிகள் ஆவார்கள்.

இந்த நான்கு மகரிஷிகளும் அந்த வைகானஸ சூத்திரத்தை அனேக வ்யூஹங்களாகப் பிரித்து ரொம்ப விஸ்தாரமாகப் பிர்ம்ம தேவருக்கு ப்ரீதியுண்டாகும்படி எங்கும் அனேக சிஷ்யர்களுக்கு உபதேசித்துத் தகப்பனான பிர்ம்மாவினால் உத்தரவு கொடுக்கப்பட்டவர்களாக ஸாளக்கிராம மலையில் ஸாளக்கிராம சிலாரூபியான நரசிம்மசுவாமியைப் பூஜிப்பதற்குக் கண்டகீ நதியை அடைந்து அந்த இடத்தில் ஸாளக்கிராம சிலையைக் காணாதவர்களாக யோகபலத்தினால் தியானம் செய்து ஸ்ரீலக்ஷ்மி தேவியின் தபோவனமான கமலாலய தீர்த்தக்கரையில் ஹனுமானால் கொண்டுபோகப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார் என்று அறிந்து அந்த லக்ஷ்மி தேவியின் தபோவனத்திற்கு வந்து ஸாளக்கிராம மலை ரூபத்தையடைந்த ஸ்ரீநரசிம்மசுவாமியைப்பார்த்துநமஸ்கரித்துப் பக்தியோடு மனஸ்ஸினாலேயே பூஜித்து ஸமீபத்திற்கு வந்து உத்தமமான க்ஷேத்திர வைபவத்தையும் தீர்த்த வைபவத்தையும் அறிந்து அந்த க்ஷேத்திரத்திலேயே வஸித்துக்கொண்டு ஸ்ரீ நரசிம்ம சுவாமியைப் பூஜிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு நரசிம்ம சுவாமிக்குத் தெற்குத் திக்கில் ஆச்சரியகரமான பர்ணசாலையை உண்டு பண்ணி ஒரு தீர்த்தத்தையும் உண்டு பண்ணிக்கொண்டு ஸ்ரீ நரசிம்ம சுவாமிக்குப் பூஜையை மூன்று காலங்களிலேயும் செய்துகொண்டு வைகானஸ சூத்திரபிரகாரம் உத்ஸவாதிகளையும் செய்துகொண்டும் பக்தி சிரத்தைகளோடு பகுகாலம் பரமபாகவதர்களாக அர்ச்சித்துக்கொண்டிருந்தார்கள்.

பிற்பாடு அனேக பலன்களையும் பெற்று அந்த நான்கு மகரிஷிகளும் பிர்ம்ம சபைக்குப் போக எண்ணங்

கொண்டு தன் புத்திரர்களை நரசிம்ம சுவாமியைப் பூஜிப்பதில் ஏவி விட்டுப் பிர்ம்மலோகத்தை அடைந்தார்கள்.

பிற்பாடு அவர்கள் பிள்ளைகளும் பேரன்களும் வம்ச பரம்பரையாகப் பூஜை செய்துகொண்டு வந்ததில் இப்போதும் அந்தச் சந்ததியார்களே அந்த வைகானஸர்களே பூஜை செய்துகொண்டு வருகிறார்கள். அந்த வைகானஸர்களாலேதான் அந்த வைகானஸசூத்திரம் லோகங்களில் மிகவும் பரப்பப்பட்டது. சிஷ்யர்கள் அவர்களுடைய சிஷ்யர்கள் இப்படி இவர்களாலேயே இது எங்கும் பிரசாரத்தை அடையும்படி செய்யப் பட்டது.

இது மகாவிஷ்ணுக்கு மிகவும் ப்ரீத்தியை யுண்டு பண்ணக்கூடியது. எல்லார்களுக்கும் எல்லாப் பல சித்திகளையும் கொடுக்கக்கூடியது. ஆகையால் இந்த வைகான ஸசூத்ரம் விஷ்ணு பூஜைக்கு மிகவும் சாதகமானது.

ஹே சௌனகமகரிஷியே ரிஷிதீர்த்தத்தின் மகிமையைச் சொல்லும்போது பிரஸக்தாநுப் பிரசக்தமான உபகதையாக விஷ்ணுபூஜா சாதகமான வைகானஸ சூத்திரத்தின் மகிமையையும் சொன்னேன்.

நீர் விஷ்ணுபக்தர் என்கிற காரணத்தினால் உம்மால் கேட்கப்படாத ரஹஸ்ய விஷயத்தையும் உபதேசிக்கிறேன். ஹே சௌனகரே கேளும்.

ஸ்ரீ சைலத்தின் கிழக்குதிக்கில் கோலாசலம் என்கிற கொல்லிமலையின் அழகுள்ள தாழ்வரையிலிருக்கும் குகையில் எல்லாலோகங்களால் பூஜிக்கப்படுகிறவராயும் லோகநாயகரும் தேவநாதருமான வராகாஜரூபியான மகாவிஷ்ணுவைத் தியானம் செய்துகொண்டும் ஸ்தோத்திரம் செய்துகொண்டும் வந்தவராயும் கிழவ

ராயும் மிகவும் தார்மிஷ்டராயும் ஸ்ரீபதி என்ற பெயரை யுடையவராயுமான ஒரு பிராம்மணோத்தமர் எவர்க்களாலும் செய்யமுடியாத உக்கிரமான தபஸ்ஸை செய்துகொண்டிருந்தார்.

அனேக ஆயிர வர்ஷங்களின் முடிவில் அப்படி தபஸ் செய்துகொண்டிருக்கிற ஸ்ரீபதியினிடத்தில் ப்ரீதியுடையவராக அவருக்கு எதிரில் தோன்றி உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் நான் வரதராஜ ரூபியாய் உமக்கு வரங்கொடுக்க வந்திருக்கிறேன் என்று தயையோடு கூடினவராக வார்த்தையைச் சொன்னார். இப்படி பகவானால் கேட்கப்பட்ட பிராமணோத்தமரும் பகவானை அனேகம் தடவை நமஸ்கரித்தும் ஸ்தோத்திரம் செய்தும் விக்ஞாபனம் செய்யஆரம்பித்தார்.

ஹே தயாநிதியான பகவானே லோகங்களுக்கெல்லாம் நன்மை செய்கிற இந்த வரதராஜ ரூபத்தையே தர்சிப்பதற்கு இச்சிக்கிறேன்.

உம் ஸ்வரூபத்தோடு கூடின காஞ்சிபட்டினத்திற்குப் போவதற்கு வார்த்திக தசையினால் முடியாதவனாயிருக்கிறேன். ஆகையால் என் சமீபத்திலேயே நீர் இருந்து இந்த வரதராஜ ஸ்வரூபத்தோடு எனக்கு எப்போதும் தரிசனம் கொடுத்துக்கொண்டு என்னைக் காப்பாற்றவேண்டும் என்று ஸ்ரீபதியால் பிரார்த்திக்கப்பட்ட பகவானும் சந்தோஷத்தோடு விருத்தரான பிராம்மண சிரேஷ்டருக்கு எண்ணத்தைப் பூர்த்திசெய்ய உத்தேசித்து ஹே ஸ்ரீபதியே உன் தபஸ்ஸால் நான் மிகவும் ஆராதிக்கப்பட்டேன்.

நீர் பிரார்த்தித்த பிரகாரம் ஸ்ரீ சைலத்தின் உயர்ந்த பாகத்தில் இந்த வரதராஜ ரூபத்தோடேயே உன்

னுடைய திருப்திக்காக வஸிக்கிறேன் எல்லா பக்த சிரேஷ்டர்களும் என்னைத் தர்சனம்செய்து மோக்ஷம் அடைவார்கள். ஹே ஸ்ரீபதியே, நீரும் இந்த என் வரத ராஜ ரூபத்தை சாஸ்திரப்பிரகாரம் தரிசித்தும் பூஜித்தும் ப்ராரப்த சரீரத்தின் முடிவில் என்னுடைய ஸ்தான மான மோக்ஷத்தை அடைவீர். இந்தப் பிரகாரம் சொல்லி விட்டு வரதராஜ சுவாமியும் அப்போதே மறைந்துவிட்டா ர். அந்த ஸ்ரீபதி என்கிற பிராம்மணோத்தமரும் சந்தோ ஷமடைந்து ஸ்ரீவரதராஜ சுவாமியைப் பார்ப்பதற்கு ஸ்ரீ சைலக்ஷேத்திரத்திற்கு வந்து ஸ்ரீசைலத்தில் உயர்ந்த பாகத்தில் சங்கம் முதலான ஐந்து ஆயுதங்களோடு கூடி னவராய் ஸாந்நித்யமடைந்த வரதராஜரைத் தரிசித்து பக்தியோடும் சிரத்தையோடும் நமஸ்கரித்து ஸ்தோத்தி மும் செய்து ஆனந்த பாஷ்பத்தை வர்ஷித்தார். இப் படித் தன் வாக்கைச் சத்தியமாகச் செய்து, விருத்த பிராமணரை அநுக்ரகிப்பதற்கு ஸ்ரீசைலத்தில் உயர்ந்த பாகத்தில் ஆவிர்பவித்த ஸ்ரீவரதராஜ ஸ்வாமியை ஸ்ரீ பதியும் நித்யமும் வைகானஸ ஸூத்ரபிரகாரம் பூஜித்து முடிவில் தேவர்களாலும் அடைய முடியாத வைகுண் டத்தை அடைந்தார்.

அது முதற்கொண்டு ஹே சௌனகரே நீரும் தேவ தேவரும் தயாநிதியுமான வரதராஜ ஸ்வாமி யை எப்பொழுதும் பூஜை செய்து இஷ்டபலனைப் பெறும். இப்படி பிரசித்திபெற்ற ஸ்ரீ நாமகிரி அம்ம னையும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியையும் ஸ்ரீ ரங்கநாயகி யையும் ஸ்ரீ ரங்கநாதரையும் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமியை யும் பற்றி அறியாதவர்கள் இல்லை. இப்பேர்ப்பட்ட தேவர் களுடைய ஸாந்நித்யத்தை அடைந்த இந்த ஸ்ரீ சைலம்

நாமக்கல் க்ஷேத்ரத்தைப் பற்றி இயம்பும் இந்த ஸ்ரீ சைல ஸ்தலபுராணமானது கேட்டதனுலேயும் சொன்னதனுலேயும் ஆயுஸ்ஸையும் மனதின் சுத்தியையும் செய்து பாபங்களை விலக்கி புண்யசம்ருத்தியையும் மோக்ஷத்தையும் வேண்டிய எல்லாபலன்களையும் கொடுக்கக் கூடியது.

சௌநகரிஷியும் பன்னிரண்டு அத்யாயங்களோடு கூடினதாயும் மகாவிஷ்ணுவுக்கு மிகவும் பிரீதியை உண்டு பண்ணுகிறதாயும் இருக்கிற ஸ்ரீ விஷ்ணுபுராணத்தின் ஸாரமான இந்த ஸ்ரீசைல ஸ்தலபுராணத்தைப் பக்தி சிரத்தைகளோடு ஸூத மகரிஷியினிடத்தில் நின்று கேட்டும் ஆநந்தக்கண்ணீரைப் பெருக்கியும் விஷ்ணுபக்தியில் ஆழ்ந்தவராகத் தன்னைத்தான் மறந்து பிறகு சமாதியில் நின்று கலைந்து சந்தோஷமடைந்தவராக ஆசாரியரான ஸூதபகரிஷியைப் பட்டு வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் சந்தனமுதலான வாசனுதிரவியங்களாலும் தூபத்தினுலும் தீபத்தினுலும் காட்டில் கிடைக்கக்கூடிய கந்தமூலபலாதிகளாலும் ஷட்ரஸங்களோடு கூடின அன்னம் முதலானவைகளாலேயும் புஷ்பமாலைகளாலேயும் மகா தபஸ்விகளான வேறு மகரிஷிகளோடு பூஜித்தும் பிரீதியோடும் பக்தியோடும் நமஸ்கரித்தும் பிரதக்ஷணம் செய்தும் வேத வ்யாஸர் என்றே பாவித்து அடிக்கடி உபசரித்தார். அனேகவிதமான ஸ்தோத்ரங்களாலும் சந்தோஷமடையும்படி செய்தார்.

இப்படி சௌனகர் பூஜிக்கும்பொழுது சில மகரிஷிகள் ஸூதருக்கு யக்ஞோபவீதங்களையும் வேறு சிலர் மான்தோல்களையும் வேறு சிலர் தடிக் கம்புகளை

யும் கமண்டலங்களையும் புரசை சமித்துகளையும் தர்ப்பாசனங்களையும், பில்வ தளங்களையும் விபூதி வைப்பதற்கு யோக்கியங்களான பில்வ பழக்குடுக்கைகளையும் திருமண் ஸ்ரீசூரணம் வைப்பதற்குத் திருப்பாக்குடலையையும் மௌஞ்சிகள் என்கிற கடிசூத்ரங்களையும் கொடுத்துப் புராணவக்தாவாயிருக்கிற ஸூதமகரிஷியை மிகவும் கொண்டாடினார்கள்.

அதன் பிறகு ஸூதமகரிஷியும் மிகவும் சந்தோஷமடைந்தவராக சௌநகர் முதலான எல்லா மகரிஷிகளையும் பிரியமாயும் சத்யமாயுமிருக்கிற வார்த்தையாலும் வ்யாஸ ப்ரஸாத ரூபங்களான பல மந்திராக்ஷைதகளைக் கொடுத்தலாலும் அவர்களுடைய நன்னடத்தை முதலானவைகளைச் சிலாகித்துச் சொல்வதாலும் மிகவும் கொண்டாடினார்.

உடனே எல்லா மகரிஷிகளும் ஆசாரியரான ஸூதமகரிஷியை வேதபாராயணத்தோடும் வாத்தியங்களோடும் அவருடைய ஆச்ரமத்திற்கு மரியாதையோடு அனுப்பிவிட்டுப் பக்தியோடு பகவானை த்யானம் செய்து அவருடைய உபதேசபிரகாரம் நடந்தார்கள் என்று பராசரமுனிவர் தன் சிஷ்யரான மைத்ரேயருக்கு உபதேசம் செய்து "பகவானிடத்தில் பக்தி செய்கிற ஹே மைத்ரேயரே! கேளும், இந்த ஸ்ரீசைல ஸ்தலபுராண சம்ஹிதை பன்னிரண்டு அத்யாயங்களோடு கூடினது. புண்யங்களைக் கொடுக்கக்கூடியது. வேண்டிய எல்லா எண்ணங்களையும் கொடுக்கக்கூடியது. எவன் எல்லோர்களாலும் பூஜிக்கப்பட்டதாயும் பகவத் கதையைச் சொல்லுகிறதாயுமான ஸ்ரீ சைலக்ஷேத்ர புராண ஸம்ஹிதையைப் பரிசுத்தமான மனதோடு பிராமண சபையி

லாவது கோவிலில் தேவ ஸந்நிதியிலாவது தி
தோறும் சந்தோஷத்தோடு படிப்பானே அவன் இ
லோகத்தில் எல்லா இஷ்டபலன்களையும் பெற்று மு
வில் மகாவிஷ்ணுவின் பரமபதத்தை அடைவான்.

எந்த பக்தன் ஸ்ரீ நரசிம்ம ஜயந்தியில் இந்த நாம
க்ஷேத்ரபுராண ஸம்ஹிதையை எழுதி மஹாத்மாவ
பிராமணோத்தமரின்பொருட்டுக் கொடுப்பானோ அ
ஸ்வர்க்கம் முதலான மேல் லோகங்களை அடைவா
எவனுடைய வீட்டில் இந்தச் சாளக்கிராம கிரிக்ஷே
புராண ஸம்ஹிதையானது பூஜிக்கப்பட்டுவருகிற
அந்த வீட்டில் ப்ரத்யக்ஷமாகவே மஹாவிஷ்ணுவ
இஷ்டபத்தினியான லக்ஷ்மிதேவி நிச்சயமாக வா
செய்வாள்.

அந்த வீட்டிலிருக்கிறவர்களுக்குக் கிரஹங்களா
யாவது வியாதியாலேயாவது அக்கினியாலேயா
திருடர்களாலேயாவது வேறு எந்த விதத்தாலேயா
ராஜாவின் கோபத்தாலேயாவது உபத்ரவமே ஏற்ப
து. அந்த வீட்டை அடைந்த கிராமத்தில் வசிப்ப
ளுக்கு ஒரு தொந்தரவும் இல்லாததோடு இரண்டு
கங்களிலும் சௌக்கியத்தை அனுபவிப்பார்கள். எ
இந்த நாமக்கல்க்ஷேத்ரபுராண கதையைப் பரிசுத்தம
பிரீதியோடு எழுதுவானோ அவன் இந்த லோகத்திலும்
அதிகசௌக்யத்தை அனுபவித்துவிட்டுப் பரலோகத்தி
லும் மறுபடியும் திரும்புதலில்லாத மோக்ஷ புருஷார்த்
தத்தையுமடைவானாகையால் இந்த ஸம்ஹிதையானது
எல்லாப் புராணங்களிலும் அதிலும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்
தின் முக்கியஸாரமானது உபநிஷத்துகளிலும் அநேக
வாக்கியங்களால் மிகவும் உயர்ந்ததென்று ஸ்தோத்ரம்

செய்யப்படுகிறது. லோகங்களின் எல்லாப் பாபங்களை யும் விலக்குவதில் சாமார்த்தியமுள்ளது.

ஸாக்ஷாத் ஸ்ரீ நாமகிரி அம்மனையும் ஸ்ரீ நரசிம்ம சுவாமியையும் ஸ்ரீ ரங்கநாயகியையும் ஸ்ரீ ரங்கநாதரையும் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமியையும் விசேஷித்து வர்ணிப்பதில் அதிக மகத்துவத்தை யுடையதாயுமிருக்கிறது.

## மங்களம்.

தன்னை ஸேவிக்கிற ஜனங்களை ரக்ஷிக்கிறவரும் ஸ்ரீ சைலத்தின் குகையில் வசிக்கிறவரும் சங்கு சக்ரம் முதலான ஆயுதங்களைத் தரிக்கிறவருமான ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியானவர் ஸ்ரீ லக்ஷ்மிதேவிக்கும் எல்லா லோகங்களிலிருக்கிற பக்தர்களுக்கும் பிரீதியைச் செய்வதற்கும் துஷ்டர்களான அசுரர்கள் ராக்ஷஸர்கள் முதலானவர்களைச் சம்ஹரிப்பதற்கும் ஸ்ரீ சைலக்ஷேத்ரத்தில் சாந்நித்யம் செய்துகொண்டு பிரகாசித்துக் கொண்டுமிருக்கிறார்.

"சுபமஸ்து"

இப்படி ஸ்தலபுராணத்தில்
பன்னிரண்டாவது அத்யாயம்
முற்றிற்று.